
# ஸம்ஸம்

## சிறப்பு மலர் - 4




## பிரதேச கலாசார விழா - 2014

**பிரதேச கலாசார பேரவை**
**பிரதேச செயலகம்**
**காத்தான்குடி.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஸம் ஸம்

## கலாசார விழா சிறப்பு மலர் 2014

University of Peradeniya
18 MAY 2015

## பிரதேச கலாசார பேரவை

## பிரதேச செயலகம்

## காத்தான்குடி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மலர் வெளியீட்டுக் குழு

தலைவர்:- ஜனாப் SH.முஸம்மில் (பிரதேச செயலாளர்)

உறுப்பினர்கள்:-

மௌலவி:-MIM.பஸிர் மதனி (கலாசார
- அபிவிருத்தி உதவியாளர்)

ஜனாப்.MH.ஜாவித் (கலாசார உத்தியோகத்தர்)

MM.பாவலர் சாந்தி முகைதீன்

ஜனாபா. பாத்திமா முகம்மட்

அல்ஹாஜ். TL. ஜஃபர்கான்

ஜனாபா. SJM.ஜலால்தீன்

ஜனாப். MMM.மஹ்பூல்

ஜனாப்.MTM.யூனுஸ்

அஷ்ஷெய்க். MIM. முனீர் (நழீமி)

ஜனாப். AGM. பஹ்மி

ஜனாப். MTM. அஸ்மி தாஜுதீன்

ஜனாப்.S.அஹ்மத் ஜெஸ்லான்

திரு.DMJ.சிறிவர்தன

ஜனாப்.MTM.யூனுஸ்

அல்ஹாஜ்.MSM.நூர்தீன்

மௌவி.SMM.முஸ்தபா (பலாஹி)

அல்ஹாஜ்.KL.கமர்தீன்

ஜனாப்.MIM.முஸ்தபா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முகவுரை



காத்தான்குடி பிரதேச செயலக கலாசாரப்பேரவை வருடாந்தம் நடாத்தும் பிரதேச கலாசார விழாவின் போது வெளியிட்டு வைக்கப்படும் "ஸம்ஸம்" சிறப்பு மலரினை உங்கள் முன் சமர்ப்பிப்பதில் மகிழ்ச்சியடைகிறேன்.

இலங்கை சிறிய நாடக இருந்தாலும் ஒவ்வொரு கிராமமும் மாறுபட்ட மொழி நடை ,உடை பழக்க வழக்கங்கள், சமயக் கிரியைகள் திருமண சடங்குகள் போன்ற இன்னோரன்ன விடயங்களில் வேறுபட்டிருப்பதை ஆய்வு செய்யும் போது அவதானிக்க முடிகிறது. தமிழ் மொழி ஒன்றுதான் ஆனால் அது மக்களால் பேசப்படும் விதம் ஊருக்கு ஊர் வித்தியாசமடைந்து காணப்படுகிறது. .இத்தகைய வித்தியாச ரசனைகளால் பெறப்பட்ட கலை,கலாசாரங்கள் அத்தனையும் அவ்வப் பிரதேச மக்களால் பாதுகாத்து எதிர்கால சந்ததியினருக்கு கையளிக்க வேண்டியது வாழ்வோரின் வாழ்வுக் கடனாகும்.

இக்குறிக்கோளுடன் மட்டுமல்லாது புதிய நவீன காலத்திற்கேற்ப புதிய கலைவடிவங்களும் பரிணாமம் பெற வேண்டும் என்பதற்காகவே அரசு நாடு பூராகவும் உள்ள பிரதேச செயலகங்களினூடாக கலாசார பேரவைகளை உருவாக்கி வருடாந்தம் பிரதேச கலாசார விழாவினை நடாத்தி வருகின்றது.அவ்விழாவின் வெளிப்பாடுகளாக கலை இலக்கியப் போட்டிகள் மற்றும் பிரதேசத்தின் கலைஞர்களை கௌரவித்தல் என்பவற்றுடன் சிறப்பு மலர் ஒன்றும் வெளியிடப்படுகிறது.

இவ்வகையில் காத்தான்குடி பிரதேசத்தில் வாழ்ந்துவரும் கலைஞர்களின் ஆக்கங்களையும் பிரதேசத்தின் பாரம்பரிய கலாசார சிறப்பம்சங்களையும் பறைசாற்றுவதற்கு "ஸம்ஸம்" சிறந்த களமாக அமையும். எமது பாரம்பரியம் கலாசார முதுசங்கள் பிரதேச கலைஞர்களினதும் அறிமுகம் கலைஞர்களின் ஆக்கங்கள் போன்ற இன்னோரன்ன அம்சங்களைத் தாங்கி வரும் இச்சிறப்பு மலர் எமது பிரதேசத்தின் பெருமையை வெளியுலகுக்குக் கொண்டு செல்லும் ஒரு முயற்சி என்பதில் ஐயமில்லை.

இப் பணியை முன்னெடுத்துச் செல்வதற்கு எனக்கு உறுதுணையாக நின்ற அலுவலக உத்தியோகத்தர்கள் மற்றும் கலாசாரப்பேரவை உறுப்பினர்கள் இச்சிறப்பு மலர் வெளியீட்டில் ஈடுபட்ட கலாசார உத்தியோகத்தர்கள் ஆகிய ஒவ்வொருவருக்கும் நன்றி கூற கடமைப்பட்டுள்ளேன்.

எஸ்.எச் முஸம்மில்
பிரதேச செயலாளரும்
கலாசாரப் பேரவை தலைவரும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கௌரவ பொருளாதார அபிவிருத்தி பிரதியமைச்சர் அல்ஹாஜ் MLAM. ஹிஸ்புல்லா MA, MP அவர்களால் வழங்கப்பட்ட ஆசிச் செய்தி



இலங்கைத்திருநாட்டில் நூறு வீதம் முஸ்லிம் மக்களை உள்ளடக்கிய பெருமைக்குரிய காத்தான்குடி பிரதேச செயலகத்தின் கலாசார விழாவினை முன்னிட்டு வெளியிடப்படும் "ஸம் ஸம்" மலருக்கு ஆசிச்செய்தி வழங்குவதையிட்டு மகிழ்ச்சி அடைகின்றேன்.

பல்லின மக்கள் பிணைந்து வாழும் எமது நாட்டில் ஒவ்வொரு இனத்தினதும் கலாசார தனித்துவம் பேணிப்பாதுகாத்து வளர்க்கப்பட வேண்டும் என்ற நோக்கிலேயே ஒவ்வொரு பிரதேச செயலக ரீதியாக கலாசார பேரவை உருவாக்கப்பட்டு வருடாந்தம் ஒரு கலாசார விழா நடாத்தப்பட்டு வருகின்றது.

கலாசாரம் என்பது ஒவ்வொரு பிரதேசத்திற்கும் வேறுபட்ட ரசனையுடன் அவ்வப்பிரதேச வாசனையினை கொண்டதாக காணப்படுகின்றது. ஒரு சமூகத்தின் வரலாறு அறியப்படுவதும், அளவிடப்படுவதும் அச்சமுகம் வாழ்ந்த காலத்தில் அவர்களால் கையாளப்பட்ட கலை அம்சங்களையும், அவர்களது கலாசார பண்பாட்டு விழுமியங்களையும் கொண்டே ஆகும்.

இந்த வகையில் இலங்கை முஸ்லிம் மக்களது பல நூற்றாண்டு பாரம்பரிய பூர்வீக வரலாற்றுத் தடயங்கள் சேகரிக்கபடுவதும் பாதுகாக்கப்படுவதுடன் அவர்களது கலை அம்சங்களும் ஆவணப்படுத்தப்படுவதும் தற்போதைய சூழ்நிலையில் காலத்தின் தேவையாகும்.

இதன் அடிப்படையில் என்னால் முன்வைக்கப்பட்ட ஆலோசனைப்படி இலங்கை முஸ்லிம்களின் தொண்மை, பாராம்பரியம், வரலாற்றுத்தடயங்கள் போன்றவற்றை உள்ளடக்கிய கலாசார கண்காட்சியொன்று கடந்த 2013ம் ஆண்டில் காத்தான்குடி பிரதேச செயலாளர் ஜனாப் SH. முஸம்மில் அவர்களது தலைமையில் மிகத்திறமையாக நடந்நேறியது. முஸ்லிம்களின் உலக, இலங்கை வரலாற்றை திரும்பிப்பார்க்க செய்த அக்கண்காட்சிக்காக உழைத்த பிரதேச செயலாளருக்கும் ஏனைய உத்தியோகத்தர்களுக்கும் பாராட்டுக்களை தெரிவித்துக் கொள்கிறேன்.

மேலும் காத்தான்குடி பிரதேசத்திலே முழு இலங்கை முஸ்லிம்களுக்குமான கலாசார நூதனசாலை ஒன்றை அமைப்பதற்காக நான் எடுத்த முயற்சியின் பயனாக கலை வடிவங்களுடனான கட்டிடம் தற்போது அமைக்கப்பட்டு வருகின்றது. விரைவில் சகல இன மக்களும் கண்டுகளிக்கும் ஒரு நூதனசாலை காத்தான்குடியில் திறந்து வைக்கப்படவுள்ளது.

"ஸம் ஸம்" என்ற இஸ்லாமிய புராதன வரலாற்றுச் சொற்பதத்துடன் வருடாந்தம் வெளியிடப்படும் இம்மலர் மூலமாக எமது பிரதேச மக்களின் கலை, கலாசார, பண்பாட்டு ஆக்கங்கள் வாயிலாக வளரும் கலைஞர்கள் ஊக்கப்படுத்தப்படுவதுடன் வாழும் கலைஞர்கள் கௌரவிக்கப்படுகின்றனர். வரலாற்றுத்தடயங்களில் ஒன்றாக இஸ்லாமிய கலை இலக்கிய வளர்ச்சிக்கு ஸம் ஸம் களம் அமைக்க வேண்டுமென வாழ்த்தி விடைபெறுகின்றேன்.

**அல்ஹாஜ் MLAM. ஹிஸ்புல்லாஹ் MA, MP**

**கௌரவ பொருளாதார அபிவிருத்தி பிரதியமைச்சர்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசாங்க அதிபரின் ஆசிச் செய்தி



மட்டக்களப்பு மாவட்டத்தில் காத்தான்குடிப் பிரதேச செயலகம் கலாசார விழாவினை முன்னிட்டு வெளியிடப்படும் **ஸம் ஸம்** மலருக்கு வாழ்த்துச் செய்தியினை வழங்குவதையிட்டு மிகவும் மகிழ்சியடைகின்றேன்.

ஒவ்வொரு இனத்திற்கும் தனித்துவமான கலை கலாச்சாரப் பண்பாடு இருப்பது போன்று முஸ்லிம்களுக்கும் தனித்துவமான கலை கலாச்சாரங்கள் இருப்பதும் அவர்களது கலாசார பாரம்பாரிய விழும்பியங்களை பின்பற்றுவதும் வழமையாகும்

அந்தவகையில் இப்பிரதேசத்தின் கலைஞர்கள், சான்றோர்கள், முதியோர்கள், பலதுறை விற்பன்னர்கள் ஆகிய பலதரப்பட்ட சமூகத்தினரையும் தலைநிமிர தரணியில் புகழ் பூக்க களம் அமைத்திடும் இவ் கலாசார விழா மலராக **ஸம் ஸம்** மக்கள் மனதில் இடம் பிடித்துள்ளது என்பது மறுக்க முடியாத உண்மையாகும்.

எனவே தனித்துவமான கலை இலக்கிய பாரம்பரிய பண்பாட்டு அம்சங்கள் தாங்கிவரும் **ஸம் ஸம்** மலர் மக்களின் மனதில் வெற்றிசூட ஊக்கமளித்த பிரதேச செயலாளருக்கும் இதற்கும் முன்னின்று உழைத்த ஆக்கக்குழு மற்றும் விழாக் குழவினருக்கும் எனது இதயம் கனிந்த நல்வாழ்த்துக்களத் தெரிவித்துக் கொள்வதில் மகிழ்சியடைகின்றேன்.

-நன்றி-

திருமதி.பி.எஸ்.எம்.சார்ள்ஸ்,
அரசாங்க அதிபரும் ,மாவட்ட செயலாளரும்,
மட்டக்களப்பு மாவட்டம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அல்ஹாஜ் சிப்லி பாறுக் (பொறியியலாளர்) கௌரவ கிழக்கு மாகாண சபை உறுப்பினர் அவர்களின் வாழ்த்துச் செய்தி



காத்தான்குடி பிரதேச செயலகத்தினால் நடாத்தப்படுகின்ற பிரதேச கலாசார சாகித்திய விழாவை முன்னிட்டு வெளியிடப்படும் "ஸம் ஸம்" மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் மகிழ்ச்சியடைகின்றேன்.

இன்றைய இளைஞர்கள், யுவதிகள் நவீன தொடர்பாடல் சாதனங்களில் அதிக ஈடுபாடுகாட்டுகின்ற காரணத்தால் கலை இலக்கிய விடயங்களில் ஆர்வம் காட்டுவது குறைந்து வருகின்றது.

எமது மூதாதையர்களின் கலை இலக்கியம் வீரத்தையும் ஆரோக்கியமான வாழ்வையும் கற்றுத்தருகின்றன.

இவ்வாறான மறைந்த கலை இலக்கியத்திற்கு புத்துயிர்யளிப்பது காலத்தின் தேவையாகும் இந்த வகையில் பிரதேச கலை இலக்கிய விழா மறைந்த கலை இலக்கியத்தை வெளிக்குனர்வதற்கான சந்தர்ப்பமாகும்

இவ்விழாவில் கௌரவிக்கப்படும் கலைஞர்களை வாழ்த்துவதோடு கலை இலக்கிய போட்டியில் வெற்றி பெற்று பரிசில்கள் பெறும் மாணவ,மாணவிகளையும் வாழ்த்துகின்றேன்.

இவ்வுயர் பணிக்காக உழைத்த அனைவருக்கும் மனமார்ந்த நன்றிகளையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

அல்ஹாஜ் சிப்லி பாறுக் (பொறியியலாளர்)
கௌரவ கிழக்கு மாகாண சபை உறுப்பினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காத்தான்குடி நகரசபை முதல்வர் அல்ஹாஜ். SH. முகம்மது அஸ்பர் J.P அவர்களின் ஆசிச் செய்தி



காத்தான்குடி பிரதேச செயலகத்தினால் வருடந்தோறும் சிறப்பித்து நடாத்தப்படும் பிரதேச கலாசார விழாவை முன்னிட்டு வெளியிடப்படும் " ஸம்ஸம் " கலாசார விழா சிறப்பு மலரில் எனது ஆசியுரை பதியக்கிடைத்ததையிட்டு பெருமகிழ்வடைகிறேன்.

நிகழ்வுகளை நினைவுகளாக பேணுவதற்கும் எதிர்காலத்திற்கான பதிவுகளாக ஆவணப்படுத்தலுக்கும் இவ்வாறான நூலுரு முயற்சிகள் தான் முழுமையான பயனளிக்கின்றன.

அந்த வகையில் எமது பிரதேச கலாசார பாரம்பரிய அம்சங்களை தாங்கி இந்நூல் வெளிவருவது இரட்டிப்பு மகிழ்வை தருகிறது.

இலங்கையில் முஸ்லிம்கள் அடர்த்தியாக வாழ்கின்ற பிரதேசமாக காத்தமா நகர் காணப்படுவதோடு, தென்கிழக்காசியாவிலேயே சனத்தொகை செறிந்திருக்கும் நகரமாகவும் இப்பிரதேசம் திகழ்வது ஒரு சிறப்பம்சமாகும். அந்த வகையில் எமது கலாசார பாரம்பரியங்கள் நூற்றாண்டுகளை கடந்தவை என்று கூறினால் மிகையாகாது.

மேலும் 2014ம் ஆண்டின் காத்தான்குடி பிரதேச செயலக கலாசார விழாவை முன்னிட்டு நடாத்தப்பட்ட பாடசாலை மற்றும் திறந்த இலக்கியப் போட்டிகளில் பங்கு பற்றி வெற்றியீட்டிய மாணவ மாணவிகளுக்கும், எழுத்தாளர்களுக்கும் எனது மனமார்ந்த பாராட்டுக்களையும் வாழ்த்துக்களையும் கூறிக் கொள்வதோடு...,

எமது முன்னோர்கள் மூதாதையர்களின் நாளாந்த நடைமுறைகள் இன்று நவீன நடைமுறைகளாக மாறிப்போனாலும் நினைவுகளாகப் பேணி வரலாற்றில் சான்று பகர்வதற்கு இவ்வாறான ஏடுகளில் பதிவு செய்வது காலத்தின் தேவையாகும். இப்பணிக்காக உழைத்த அனைத்து உள்ளங்களுக்கும் இச்சந்தர்ப்பத்தில் எனது மனமார்ந்த பாராட்டுக்களை தெரிவித்துக் கொள்வதோடு, 2014ம் ஆண்டின் காத்தான்குடி பிரதேச செயலக கலாசார விழா சிறப்பாக நடந்தேறுவதற்கும் இறையருள் வேண்டி பிரார்த்தித்துக் கொள்கின்றேன்.

SH. முஹம்மது அஸ்பர்
நகரமுதல்வர்
நகரசபை, காத்தான்குடி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உதவி பிரதேச செயலாளரிடமிருந்து...

பிஸ்மில்லாஹிர்ரஹ்மானிர்ரஹீம்.



காத்தான்குடி பிரதேச செயலக கலாசாரப் பேரவையினால் வருடந்தோறும் வெளியிடப்படுகின்ற கலாசார வெளியீடான "ஸம் ஸம்" மலருக்கு எனது ஆசியை தெரிவிப்பதில் மகிழ்ச்சியடைகின்றேன்.

ஒவ்வொரு சமூகத்திற்கும் தனித்துவமான கலாசாரங்கள் காணப்படும். அதுவே அச்சமூகத்தினைத் தனித்துவப்படுத்தும் அம்சங்களில் பிரதானமாக மிளிர்கின்றது. எனவேதான் அக்கலாசாரங்களை பாதுகாத்து ஊக்குவித்து அவற்றினை ஆவணப்படுத்தும் ஓர் ஏற்பாடாக இக்கலாசார மலரான "ஸம்ஸம்" மலர் திகழ்கிறது. ஏனெனில் ஒரு சமூகத்தின் இருப்புக்குச் சான்றாக இருப்பது அச்சமூகத்தின் வரலாறுதான். அந்த வகையில் காத்தான்குடி பிரதேசத்தின் கலாசாரத்தை ஆவணப்படுத்துகின்ற இம்மலர் கலாசாரத்தினூடாக வரலாற்றை எதிர்கால சந்ததியினருக்கு வழங்கும் ஓர் ஏடாகவும் அமையும் என்பதில் ஐயமில்லை.

இம்மலர் வெளியிடுவதற்கு துணைபுரிந்த கலாசார உத்தியோகத்தர்கள், கலாசார பேரவை, பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் மற்றும் ஆக்கங்களைத்தந்த கலைர்களுக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

AC. அகமட் அப்கர்
உதவிப் பிரதேச செயலாளர்
காத்தான்குடி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசியோலை



கலை வளர்த்த காத்தான்குடியின் அரசு செயலகத்தின் கலை இதழாய் ஸம் ஸம் வருவதையிட்டு வாழ்த்துகின்றேன்.

கலை கலைக்காகவா? மகிழ்ச்சிக்காகவா? ஆழகுக்காகவா? என்னும் தத்துவ விசாரணைகளுக்கு அப்பால் வாழ்வியலை பதிவு செய்கிறது எனும் பதிவு பரவலாக இருக்கிறது.

தமிழ் எங்கள் மொழி இஸ்லாம் எங்கள் வழி என்பதனாலும் ஆங்கிலேய காலணியின் கட்டாய மதமாற்ற காரணங்காளாலும் எம் எழுது நிலைக்கல்வி பின் தங்கியது.

இவ்வெற்றிடத்தினை நிலைவுறுத்தி அரபு லிபியல் தமிழ் மொழிக்கு அணிகோர்த்து அரபு தமிழ் அவதாரம் எடுத்தது . இவ்வாசியோலை ஊடாக தமது மண்ணில் அரபுத் தமிழ் கிரந்தங்கள் ஆவணப்படுத்தப்பட வேண்டும் எனும் எனது வேணவாவை இவ் ஓலையின் ஊடாக சொல்லிக் கொள்ள விரும்புகின்றேன்.

என்னை ஹாஜர் அவர்கள் மைந்தன் இஸ்மாயிலின் காலடி பொங்கிய நீர்க்கேணிக்கு கூறிய இவ் ஸம் ஸம் வார்த்தை இந்நூலிலும் காலமொல்லாம் இலக்கிய ஊற்றாய் மலர என் உளத்தடாகத்தில் முகிழ்த்த அசித்தாமரைகளைத் தருவதில் ஆனந்தம் அடைகிறேன்.

நன்றி.

MIM.சுபைர் JP
தலைவர்.
பள்ளிவாயல் முஸ்லிம் நிறுவனங்களின் சம்மேளனம்,
காத்தான்குடி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மட்டக்களப்பு மாவட்ட ஜம்இய்யதுல் உலமா மற்றும் ஜம்இய்யதுல் உலமாவின் கௌரவத்தலைவரும் , காத்தான்குடி காழி நீதிபதியுமான மௌலவி அல்ஹாஜ் S.M. அலியார் (பலாஹி) JP அவர்களின் ஆசிச்செய்தி.

அஸ்ஸலாமு அலைக்கும் வறஹ்மதுல்லாகி வபறகாதுஹு



நமது பிரதேசத்தின் சகர நிர்வாகப் பணிகளையும் செம்மையாக சிரமேற்கொண்டு செய்து வருகின்ற பிரதேச செயலாளரும் செயலக உத்தியோகத்தர்களும் தங்களது சேவைகளுக்கு மத்தியில் அலக்கிய பணிகளையும் அதனோடு இணைந்த விடயங்களும் சஞ்சிகையாக வெளிகொணருவதென்பது வரவேற்கத்தக்கதும், பராட்டத்தக்கதுமாகும்.

அரச உத்தியோகத்தின் பணிபுரிந்து கொண்டிருக்கின்ற அரசுத்துறை அலுவலர்கள் சதா காலமும் தாங்கள் பணியினைப்பற்றியும், தமது அன்றாட நிகழ்வுகள் பற்றியுமே சிந்தித்துக் கொண்டிருக்கும் இக்காலத்தில் , தங்களது வேலைப்பளுக்களுக்க மத்தியில் , எழுத்துக துறையில் தமது சிந்தனைகளையும் எண்ணங்கலையும் கட்டுரைகளாக, கவிதைகளாக ,சிறுகதைகளாக ஆய்வுகளுக்கான பந்திகளாக ஸம் ஸம் சஞ்சிகையில் பதிப்பது அரசுத்தறை அலுவலர்கள் எழுத் துறையில் கொண்டுள்ள அவாவின் வொளிப்பாடாகவே எம்மால் காணமுடிகின்றது.

நமது பிரதேசத்தின் கலை கலாசாரத்தை பிரதிபலிக்கும் வகையில் காலத்தின் தேவை கருதி இவ்வாறான சஞ்சிகைகள் வெளியிடப்படவது குறித்து மகிழ்ச்சியடைவதுடன், இதற்கு ஆசிச் செய்தி வழங்கக்கிடைத்தமையைப் பாக்கியமாகக் கருதுகின்றேன்.

மேலும் இப்பிரதேச செயலகம் மாவட்டத்தில் முதலிடம் பெற்று மென்மேலும் சிறந்தோங்க எல்லாம் வல்ல அல்லாஹ் அருள்புரிய வேண்டுமென்றும பிராத்திக்கின்றேன்.

மௌலவி அல்ஹாஜ் S.M.அலியார் (பலாஹி)
தலைவர்,
மட்டக்களப்பு மாவட்ட மற்றும் காத்தான்குடி ஜம்இய்யதுல் உலமா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*கலாசார உத்தியோகத்தரிடமிருந்து....*

"பிஸ்மில்லாஹிர்ரஹ்மானிர்ரஹீம்"



காத்தான்குடி பிரதேச செயலக கலாசாரப் பேரவை வருடாந்தம் நடாத்திவரும் பிரதேச கலை இலக்கிய விழாவின்போது வெளியிடப்படும் நான்காவது"ஸம்ஸம்"சிறப்பு மலரினை உங்கள்முன் சமர்ப்பிப்பதில் மகிழ்ச்சியடைகின்றேன்! "அல்ஹம்துலில்லாஹ்"

தமக்கென தனித்துவம் காத்து வாழ்ந்து வரும் காத்தான்குடிப் பிரதேச மக்களின் கலை,கலாசார இலக்கியப் பாரம்பரியங்களைக் காத்து எதிர்கால சந்ததியினருக்கு கையளிக்கும் பொறுப்பினை"ஸம்ஸம்"சிறப்புமலர் காத்திரமாக நிறைவேற்றி வருவதுயாவரும் அறிந்ததே

இச் சிறப்பு மலர் வெளியீட்டில் மிகுந்த அர்ப்பணிப்புடன் காத்திரமான ஆலோசனைகளையும் வழிகாட்டல்களையும் வழங்கிய எமது மதிப்பிற்குறிய பிரதேச செயலாளரும் கலாசாரப்பேரவைத் தலைவருமான ஜனாப்.எஸ்.எச்.முஸம்மில் அவர்களுக்கு பணிவுடன் நன்றியினைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

மேலும் வாழ்த்துச் செய்திகளை வழங்கிய பிரமுகர்களுக்கும் ஆக்கங்களை வழங்கிய கலைஞ்ஞர்களுக்கும், கலாசாரப்பேரவை உறுப்பினர்களுக்கும் வினைத்திறனாக செயற்பட்டமலர் குழுவினருக்கும் ஒத்துழைப்பு நல்கிய பிரதேச செயலக உத்தியோகத்தர்களுக்கும் பிரதேச கலை இலக்கிய விழாவையொட்டி நடாத்தப்பட்ட போட்டிகளில் பங்கு கொண்ட பாடசாலை மட்ட மற்றும் திறந்தமட்டப் போட்டியாளர்களுக்கும் நடுவர்களாகக் கடமைபுரிந்தோருக்கும் எனது இதயம் நிறைந்த நன்றியினை இச்சந்தர்ப்பத்தில் தெரிவித்துக் கொள்கின்றேன்

"ஸம்ஸம்"சிறப்புமலரின் ஐந்தாவது வெளியீடும் சிறப்பாக அமைய வேண்டும் என வல்ல அல்லாஹ்வைப் பிரார்த்தித்தவனாக விடைபெறுகின்றேன்

ஜனாப்.எம்.எச்.ஜாவீத்
கலாசார உத்தியோகத்தரும் கலாசாரப்பேரவைச் செயலாளரும்,
பிரதேச செயலகம்
காத்தான்குடி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கலாசார அபிவிருத்தி உதவியாளரிடமிருந்து..........



காத்தான்குடி பிரதேச செயலக 2014 ஆம் ஆண்டிற்கான பிரதேச கலாசார சாகித்திய விழாவையொட்டி "ஸம்ஸம்" சிறப்பு மலர் வெளிவருவதையிட்டு மிகவும் மகிழ்ச்சியடைகின்றேன்.

காத்தான்குடி பல்வேறு சிறப்புக்களைக்கொண்ட பிரதேசம். நவீன உலகின் கலாசார தாக்கத்திற்கு மத்திலும் முஸ்லிம்களுக்கு உரித்தான கலாசாரம், பண்பாடு, விழுமியங்களுக்கு ஊடாக இவ்வூர் உலமாக்கள் சமூக தலைவர்களின் வழிகாட்டலினால் நெறிப்படுத்தப்பட்டு தங்களது இருப்பை உறுதிப்படுத்தி வாழ்வது இவ்வூரின் சிறப்பம்சங்களில் ஒன்றாகும்.

தமிழ் மொழியிலும் அறபுமொழியிலும் புகழ்பெற்று பல இலக்கியப் படைப்புகளை வழங்கியவர்கள் இவ்வூரில் வாழ்ந்துள்ளனர் என்பது இவ்வூர் வரலாற்றிலிருந்து தெரிய முடிகிறது. இவை பேன்ற இலக்கிய படைப்புகளை வழங்க வல்லவர்கள் எமக்கு மத்தியில் இலைமறை காய்களாக தங்களது இலக்கிய பணியினை செய்துவருகின்றனர். ஆண்டுதோறும் இலக்கிய விழாக்கள் நடாத்தப்படுவதன் மூலம் அவரகளது ஆற்றல்கள் வெளிக்கொனரப்படகின்றன.

அந்தவகையில் இவ்வருடம் கலாசார சாகித்திய விழாவானது இப்பிரதேசத்தில் கலை, இலக்கியத்துறையில் அதிக ஈடுபாட்டுடன் செயற்பட்டோரைக் கௌரவித்தல் , பிரதேச மட்ட கலை இலக்கியப் போட்டியில் வெற்றிபெற்ற மாணவ மாணவிகளுக்கு கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் சான்றிதழ்களும் பரிசில்களும் வழங்கி ஊக்கமளித்தல், கலாசார கண்காட்சி 2013 இன் இறுவெட்டு வெளியிடல் எனும் வகையில் திட்டமிடப்பட்டுள்ளது.

கலாசார சாகித்திய விழா சிறப்பாக நிறைவேற ஊக்கமளித்து ஒத்துளைத்த பிரதேச செயலாளர் உதவி பிரதேச செயலாளர் கணக்காளர் நிருவாக உத்தியோகத்தர்கள் பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் கலாசாரப் பேரவை உறுப்பினர்கள் அனுசரனை வழங்கிய சமுர்த்தி சங்கங்கள் அனைவருக்கும் எனது மனமார்ந்த நன்றிகளை தெரிவித்துக்கொள்கிறேன்.

அஷ்ஷெய்க் M.I.M. பசீர் மதனி
கலாசார அபிவிருத்தி உதவியாளர்
பிரதேச செயலகம்
காத்தான்குடி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளே நுழையுமுன்...


➢ கலை கலாசார அபிவிருத்தியில் காத்தான்குடி கலாசார மத்திய நிலையத்தின் பங்களிப்பும் முஸ்லிம்களின் கலை கலாசார துறை பாதுகாக்கப்பட வேண்டியதன் அவசியமும்.........01

➢ இலங்கை முஸ்லிம்களின் தொன்மை, வரலாறு பற்றிய கலாசாரக் கண்காட்சி-2013 தொடர்பான பின்னூட்டல்.........04

➢ உலக முஸ்லிம்களின் 1001 கண்டுபிடிப்புக்கள்.........07

➢ வாழ்த்துக் கவிதை (கலாசாரக் கண்காட்சி).........28

➢ தண்ணிர்வெடி (கட்டுரை).........30

➢ எனக்கொரு தாய் வேண்டும்.........34

➢ கலாசாரமும் அதற்கூடான நற்பண்புள்ள புதிய சமுதாயமும்.........36

➢ சூழல் காப்போம் (கட்டுரை).........41

➢ தத்துப் பிள்ளை.........42

➢ நானுமொரு கவிஞன்.........46

➢ மாற்றங்களை எதிர்கொள்ளும் மானிட வாழ்வு (கவிதை).........47

➢ மனிதம் மலரட்டும் புனிதம் வளரட்டும் (கவிதை).........50

➢ அமானிதம் (கட்டுரை).........51

➢ அயல் வீட்டு அந்நியர்கள்.........58

➢ மறு பக்கம் (கட்டுரை).........60

➢ எம்தேசத்து மொட்டுக்கள் (கட்டுரை).........69

➢ ஒற்றுமையா வாழ்வோம் (கவிதை).........72

➢ ஆக்கபூர்வமான படைப்புகளால் எதிர்கால சமுதாயத்தை உருவாக்குவோம் (கட்டுரை).........73

➢ புதுமைப் பெண்கள் (கவிதை).........75

➢ ஆக்கபூர்வமான படைப்புகளால் எதிர்கால சமுதாயத்தை உருவாக்குவோம் (கட்டுரை).........76

➢ நாடும் நாமும் (கவிதை).........80

➢ ஆண்டவனே அருள் புரிவாய் (கவிதை).........82

➢ 2014 பிரதேச கலை இலக்கிய விமாவில் கௌரவிக்கப்படுவோர்.........86

➢ விழாவிற்கு அனுசரணை வழங்கிய நிறுவனங்களும் திவிநெகும சங்கங்களும்.........95


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கலை கலாசார அபிவிருத்தியில் காத்தான்குடி கலாசார மத்திய நிலையத்தின் பங்களிப்பும் முஸ்லிம்களின் கலை கலாசார துறை பாதுகாக்கப்பட வேண்டியதன் அவசியமும்

கலாசார மற்றும் கலை அலுவல்கள் அமைச்சினால் நாடளாவிய ரீதியில் பிரதேச செயலக ரீதியாக கலாசார மத்திய நிலையங்கள் உருவாக்கப்பட்டு செயற்பட்டு வருகின்றது. பிரதேசத்தின் கலை கலாசார விழுமியங்களை வெளிக்கொணர்தல், அபிவிருத்தி செய்தல், மறைந்து போன கலை கலாசார பாரம்பரிய விழுமியங்களை மீள் உயிரூட்டல், பாதுகாத்தல், அதனூடாக நல்லொழுக்கமுள்ள, நற்பண்புள்ள சமுதாயத்தை கட்டியெழுப்பி இந்த நாட்டில் கலாசார விழுமியங்களைக் கொண்ட நற்பிரஜைகளை உருவாக்கும் நோக்கில் கலாசார நிலையங்கள் தனது செயற்பாடுகளை மேற்கொண்டு வருகின்றன.

கலாசார மத்திய நிலையங்களின் பிரதான செயற்பாடாக, அமைச்சின் அறிவுறுத்தலுக்கு அமைய திறன் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் நடனம், சங்கீதம், வாத்தியம் வாசித்தல், சித்திரமும் ஓவியமும் வரைதல், சிற்பம் செதுக்குதல், மேடை நாடகமும் அரங்கியலும், கைப்பணி வேலைகள், சிங்கள மொழி, ஆங்கில மொழி, தமிழ்மொழி, உடல் உள அபிவிருத்தி, பாரம்பரிய தற்காப்புக்கலை, வழிகாட்டலும் ஆலோசனை கூறலும் போன்ற துறைகளில் பயிற்சி நெறிகள் நடாத்தப்பட்டு வருவதுடன் விசேட கலை கலாசார நிகழ்ச்சிகள் நடாத்துதல், கலாசார மண்டபம் வாடகைக்கு வழங்கல், நூலக செயற்பாடுகள் போன்ற பல்வேறு சேவைகளும் மேற்கொள்ளப்படுகின்றன.

காத்தான்குடியின் பல பாரம்பரிய கலை கலாசார விழுமியங்கள், நிகழ்வுகள் இன்று மறைந்து போகும், அழிந்து போகும் நிலையில் இருக்கின்றபோதும் கலாசார மத்திய நிலையம் இப்பிரதேசத்தின் கலை கலாசார துறைகளின் வளர்ச்சிக்காக சேவையாற்றிவருகின்றது. முஸ்லிம்களை தனித்துவமாகக் கொண்ட இப்பிரதேசத்தின் கட்டுப்பாடுகளுக்கும் இஸ்லாம் மார்க்கத்தின் வரம்புகளை மீறாதவகையிலும் கலாசார நிலையம் தனது செயற்பாடுகளை முன்னெடுத்துச் செல்லவேண்டிய தேவை இங்கு காணப்படுகின்றது. இந்த வகையில் வருடாந்தம் அமைச்சினால் வழங்கப்படும் அறிவுறுத்தல்களுக்கு அமைவாக,

01. முஸ்லிம்களின் பாரம்பரிய களிகம்பு / கோலாட்டம் பாடநெறி
02. தகரா வாசித்தல் பாடநெறி
03. சித்திரம் வரைதல் பாடநெறி
04. நாடகமும் அரங்கியலும் பாடநெறி
05. கிராமிய சங்கீத பாடநெறி
06. சிங்கள மொழி பாடநெறி
07. ஆங்கில மொழி பாடநெறி
08. வழிகாட்டலும் ஆலோசனை கூறலும் பாடநெறி
09. சீனடி சிலம்படி பாடநெறி
10. கைப்பணி வேலைகள் பாடநெறி

என பல்வேறு துறைகளில் பயிற்சி நெறிகள் நடாத்தப்பட்டு வருகின்றன. இப்பயிற்சி நெறிகளில் பங்குபற்றி பூர்த்தி செய்யும் பயிற்சியாளர்களுக்கு கலாசார மற்றும் கலை அலுவல்கள் அமைச்சினால் பெறுமதி மிக்க சான்றிதழ்கள் வழங்கிவைக்கப் படுகின்றது. மாணவர்களின் பல்கலைக்கழக, கல்வியல் கல்லூரி மற்றும் ஏனைய கல்வி நடவடிக்கைகளில், வேலைவாய்ப்பு போன்ற நேர்முகப் பரீட்சைகளின் போது இச்சான்றிதழ்கள் புள்ளிகளை பெற்றுக் கொடுப்பதில் பெரிதும் உதவுகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலாசார மற்றும் கலை அலுவல்கள் அமைச்சினால் வருடாந்தம் தேசிய சங்கீத, நடன போட்டிகள் (பிரதீபா) நடாத்தப்பட்டு வெற்றி பெறுபவர்களுக்கு சான்றிதழ்களும் கேடயங்களும் வழங்கிவைக்கப்படுகின்றன. 2014ம் ஆண்டிற்கு நடாத்தப்பட்ட மாகாண மட்ட பிரதீபா போட்டியில் காத்தான்குடி கலாசார மத்திய நிலையம் கிராமிய பாடல் சிரேஷ்ட பிரிவுக்கான போட்டியில் முதலாம் இடத்தினையும் கிராமிய பாடல் கனிஷ்ட பிரிவுக்கான போட்டியில் இரண்டாம் இடத்தினையும், நாட்டின் மறுமலர்ச்சி எனும் தலைப்பிலான நடனத்தில் இரண்டாம் இடத்தினையும், கோலாட்டம் மற்றும் றபான் நடனத்தில் இரண்டாம் இடத்தினையும் பெற்றுக் கொண்டதுடன் தேசிய மட்ட போட்டியில் கிராமிய பாடல் சிரேஷ்ட பிரிவில் இரண்டாம் இடத்தினையும் பெற்றுக் கொண்டது. இதனூடாக மாணவர்கள் பெற்றுக் கொண்ட மாகாணமட்ட, தேசிய மட்ட சான்றிதழ்கள் மாணவர்களின் கல்வி நடவடிக்கைகளுக்கும், வேலைவாய்ப்புகளுக்கும் உதவுவதாக உள்ளது. கலாசார நிலையத்தினால் முஸ்லிம்களின் கலை கலாசார பாரம்பரியங்களை பிரதிபலிக்கும் வகையில் கோலாட்டம் / களிகம்பு குழுக்கள், தகரா குழுக்கள் மற்றும் மேடை நிகழ்ச்சிகள் இலவசமாகவும் கட்டணம் அறவிடப்பட்டும் வழங்கப்பட்டு வருவதுடன் பல்வேறு கலை நிகழ்ச்சிகளுக்கான தகரா போன்ற இசைக்கருவிகள், கலாசார உடைகள் என்பனவும் சேவையடிப்படையில் வழங்கப்பட்டு வருகின்றது.

மேலும் காத்தான்குடி கலாசார மத்திய நிலையத்தினால் வருடாந்தம்,

01. சுதந்திர தினம்
02. மகளிர் தினம்
03. புகைத்தல் எதிர்ப்பு தினம்
04. இப்தார் நிகழ்வுகள்
05. பெருநாள் விழாக்கள்
06. இஸ்லாமிய புதுவருட (முஹர்ரம்) விழா
07. கருத்தரங்குகள்
08. பயிற்சிப்பட்டறைகள்
09. சிரமதான நிகழ்வுகள்
10. கலாசார சுற்றுலாக்கள்
11. விசேட கலை கலாசார நிகழ்வுகள்

என பல்வேறு விஷேட நிகழ்ச்சித்திட்டங்கள் பிரதேசத்தின் தேவைக் கேற்ப நடாத்தப்பட்டுவருகின்றன.

மேற்படி வேலைத்திட்டங்களை நடைமுறைப்படுத்துகின்ற போது எதிர்கொள்ளும் தடைகள், கட்டுப்பாடுகள் எமது நடவடிக்கையில் பாதிப்பை ஏற்படுத்தும் சூழ்நிலை காணப்படுகிறது. மார்க்கரீதியாக ஏற்பட்டுள்ள தெளிவு, இன்று முஸ்லிம்களின் பல்வேறு நிகழ்வுகளில் பின்பற்றப்பட்டு வந்த சடங்குகள், சம்பிரதாயங்கள், பழக்கவழக்கங்கள், கலை கலாசார துறைகள் போன்றவற்றில் மாற்றங்களை ஏற்படுத்தியுள்ளன. இதனால் முஸ்லிம்களின் தனித்துவத்தை,பிரதேசத்தை அடையாளப்படுத்தும் வரலாற்று சான்றுகள், கலை கலாசார பாரம்பரிய நிகழ்வுகள், மரபுரிமைகள் அழிந்துகொண்டிருக்கும் நிலை உருவாகியுள்ளது.

தனித்துவ சமூகம் என்பது அச்சமூகத்தின் இறை நம்பிக்கை, வணக்க வழிபாடுகள், உணவு, உடை, பழக்கவழக்கங்கள், மொழி, கலை கலாசார செயற்பாடுகள், குடும்ப வாழ்வு, உறவுமுறை, அரசியல், கொடுக்கல் வாங்கல்கள், வியாபாரம் போன்ற பல்வேறு விடயங்களில் தமக்கென தனியான பண்புகளை வழிமுறையாகக் கொண்டு காணப்படுவதாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வழிமுறைகளை குர்ஆனும் நபியவர்களின் வழி முறையும் நமக்கு தெளிவாக வழிகாட்டியுள்ளன. எனவே மனித சமூதாயத்தை வழிகேட்டில் கொண்டு செல்லும் செயற்பாடுகளை முற்றாக தவிர்த்து முஸ்லிம்களின் தனித்துவத்தை அடையாளப்படுத்தும் கலை கலாசார துறைகளை இனங்காண வேண்டியது காலத்தின் அத்தியாவசிய தேவையாகவுள்ளது.

இன்று நமது சமூகத்திலே பல்வேறு அரச மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்கள் கலை கலாசார துறைகளுக்கு அளப்பெரிய சேவைகளை செய்து கொண்டிருக்கிறன. இவர்களது சேவைகள் மேம்படுத்தப்பட வேண்டுமாயின் இவர்களுக்கான பாடத்திட்டங்கள், வழிகாட்டல்கள் ஆலோசனைகள், பயிற்சிகள் துறை ரீதியாக வழங்கப்பட வேண்டிய தேவையுள்ளது. பாடசாலைகளை நோக்கும் போது பல்வேறு கலை கலாசார துறைகள் பாடரீதியாக இணைக்கப்பட்டிருப்பது அரிதாகவே உள்ளதுடன் இத்துறைகளோடு சம்மந்தப்பட்ட சித்திரம், நாடகமும் அரங்கியலும் போன்ற பாடங்கள் க.பொ.த சாதாரண தர வகுப்புக்களில் கற்பிக்கப்படுவதும் முக்கியத்துவம் வழங்கப்படுவதும் மிகவும் குறைவாகவே உள்ளது. மேலும் உயர்தர வகுப்புக்களில் இத்துறைகள் கற்பிக்கப்படுவதுமில்லை. இதனால் நமது பிரதேசத்தின் மாணவர்கள் இலகுவான வழியில் தமது பல்கலைக்கழகங்களில், கல்வியல் கல்லூரிகளில் கல்வியினை தொடர்வதற்கான வாய்ப்பினை இழக்கும் சூழ்நிலையும் போட்டிகள் நிறைந்த தொழில் வாய்ப்புக்களில் பின்தள்ளப்படும் நிலையும் காணப்படுகிறது.

எனவே நமது தனித்துவத்தை அடையாளப்படுத்த கலை கலாசார துறைகள் உடனடியாக இனம் கான்பது நமது சமூகக் கட்டாயக் கடமையாகவுள்ளது. இதற்கென சமூகசேவை நிறுவனங்கள், அறபுக்கல்லூரிகள், இஸ்லாமிய பிரச்சார அமைப்புக்கள், பல்கலைக் கழகங்கள், பாடசாலைகள், கலை கலாசார நிறுவனங்கள், அரச துறை நிறுவனங்கள், முஸ்லிம் அரசியல் கட்சிகள், அரசியல்வாதிகள், உலமாக்கள், புத்திஜீவிகள், கல்விமான்கள், கலைஞர்கள், நலன்விரும்பிகள் போன்றோர் ஒன்றுசேர்ந்து முஸ்லிம்களின் கலை கலாசார விழுமியங்களை ஆய்வு செய்து அடையாளப்படுத்தி தனியான பாடத் திட்டத்தினையும் கலை கலாசார பாரம்பரிய வரையறைகளையும் உருவாக்க வேண்டும். அதுபற்றி மக்களிடம் விழிப்புணர்வையும் ஏற்படுத்த வேண்டும். பல்கலைக் கழகங்கள், பாடசாலைகள், அறபுக்கல்லூரிகள், அறநெறிப் பாடசாலைகள், தனியார் கல்வி நிறுவனங்கள் போன்றவைகளில் கலை கலாசார துறைகள் கற்பிக்கப்படுவதன் ஊடாக முஸ்லிம்களின் கலை கலாசார பாரம்பரியங்களை வெளிக்கொணரக்கூடியதாக இருக்கும். இந்நிலையில் வரலாற்றை அடையாளப்படுத்தும் எமது தனித்துவம் கூறும் கலை கலாசார துறைகள் பாதுகாக்கப்பட்டு தனித்துவமிக்க கலை கலாசாரம் கொண்ட முஸ்லிம் சமூகம் என்பதனை எம்மாலும் அடையாளம் காட்ட முடியும் என்பதில் ஐயமில்லை.

எம்.ஐ.எம்.எம்.மஹ்பூழ்
கலாசார மேம்பாட்டு உத்தியோகத்தர்,
பொறுப்பதிகாரி,
கலாசார மத்திய நிலையம்,
காத்தான்குடி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை முஸ்லிம்களின் தொன்மை, வரலாறு பற்றிய கலாசாரக் கண்காட்சி-2013 தொடர்பான பின்னூட்டல்

*MIM. பசீர் மதனி*
கலாசார அபிவிருத்தி உதவியாளர்

இலங்கை முஸ்லிம்களின் தொன்மை மற்றும் பண்டைய வரலாறு, அதற்கான வரலாற்று தடயங்கள், ஆவணங்கள், தொல்பொருட்கள் என்பன பேணிப்பாதுகாக்கப்பட்டு தொடரும் சந்ததியினருக்கு விடப்பபடுவது இன்றயமையாததாகும். அத்துடன் முஸ்லிம்களின் வரலாற்று தொன்மை தொடர்பான தேடல் உள்ள ஆய்வாளர்களுக்கும் இவ்வாறான வரலாற்று தொன்மை காப்பக முனைப்பு பயனுள்ளதாக அமையும்.

இவ்வகையில் இலங்கை முஸ்லிம்களின் வரலாற்றைப் பாதுகாத்து பேனும் நோக்கில் பொருளாதார அபிவருத்தி கௌரவ பிரதி அமைச்சர் அல்ஹாஜ் M.L.A.M. ஹிஸ்புள்ளாஹ் MA,MP அவர்களால் காத்தான்குடியில் அருங்காட்சியகம் ஒன்றை நிறுவதற்கான பூர்வாங்க ஏற்பாடுகள் நடைபெற்று வருகின்றன. இதன் அங்கமாகத்தான் இலங்கை முஸ்லிம்களின் தொன்மை, வரலாறு பற்றிய கலாசாரக் கண்காட்சி கடந்த 2013 பெப்ரவரி 1ம், 2ம், 3ம் திகதிகளில் மட் / மீராபாலிகா வித்தியாலயம் தேசிய பாடசாலையில் பிரதேச செயலகத்தின் ஏற்பாட்டில் பொருளாதார அபிவருத்தி கௌரவ பிரதி அமைச்சர் அல்ஹாஜ் M.L.A.M. ஹிஸ்புள்ளாஹ் MA,MP அவர்களின் நிதி ஒதுக்கீடில் நடாத்தப்பட்டது.

மூன்று தினங்கள் நடைபெற்ற இக்கண்காட்சியை உள்ளூர் வெளியூர் மாணவ மாணவிகளும் பொதுமக்களும் மற்றும் உள்நாட்டு வெளிநாட்டு பிரதிநிதிகளும் பார்வையிட்டு அவர்களது கருத்துகளை பதிந்துள்ளனர்.

பிரதேச செயலாளர் மற்றும் உத்தியோகத்தர்களின் அயராத முயற்சியின் பயனாக நன்கு திட்டமிடப்பட்டு இலங்கையின் பல பாகங்களுக்கும் களப்பயணங்கள் மேற்கொள்ளப்பட்டு பல கலந்துரையாடல்கள் மேற்கொள்ளப்பட்டு வரலாற்று ஆய்வாரளர்களது கருத்துகள் பெறப்பட்டு அதற்கான திட்ட வரைபுகள் வரையப்பட்டு அதன் அடிப்படையில் இக்கண்காட்சி நடாத்தப்பட்டது குறிப்பிடத்தக்க அம்சமாகும்.

திட்ட வரைபு

01. **இலங்கை முஸ்லிம்களின் ஆரம்ப கால தொடர்பை உறுதிப்படுத்தும் ஆவணங்களை சேகரித்தல்**

1. கல்வெட்டுக்கள் 2 சிலாசனங்கள். 3 ஆவணச்சுவடிகள்.

4 வரலாற்று குறிப்புகள் 5. வரலாற்று குறிபேடுகள் 6. புகைப்படங்கள்

**ஆரம்ப கால வர்த்தக நடவடிக்கைள்**

1. வெளிநாட்டு வர்த்தகம்

2. உள்நாட்டு வரத்தகம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மருத்துவம்

1.யூனானி 2. பண்டைய கால அரசர்கள் ஆற்றிய மருத்துவ சேவை

**கட்டிடக் கலை**

1. பள்ளிவயல்கள்

2. வீட்டு அமைப்பு

**அரசியல்**

1.தேசிய ஒற்றுமைக்கான முஸ்லிம்களின் அரசியல் பங்களிப்பு 2. சுதந்தரத்திற்கு முற்பட்ட இலங்கையின் அரசியலில் முஸ்லிம்களின் பங்களிப்பு

**வாழ்வியல்**

மொழி, அரபுத் தமிழ் பற்றிய ஆய்வு, கல்வி, பாரம்பரிய அரபு மத்ரஸாக்களின் வரலாறு, ஆடை அணிகலன்கள், மனைப் பொருட்கள், உணவு பழக்கவழக்கங்கள், திருமணச் சடங்குகள்

**கலையும் இலக்கியமும்**

பொல்லடி, சிலம்படி, நாடகம், வில்லுப்பாட்டு, இலக்கிய மரபுகள்

முஸ்லிம்கள் உலக நாகரிகத்திற்கு ஆற்றிய பங்களிப்பு

1, அறிவியல் , மருத்துவம், கணிதம், கண்டுபிடிப்புக்கள், நாடகான் பயணம்.

இக்கண்காட்சிக்காக பின்வரும் குழுக்கள் நியமிக்கப்பட்டன

1.ஆவணங்களைத் தேடல் 2 பொருட்களை களஞ்சியப்படுத்தல் 3 விளக்கம் எழுதுதல், வரலாறு கூறல் 4 காட்சிப்படுத்தும் முறைமையைத் தீர்மானித்தல், கலை நிகழ்ச்சிகளை ஒழுங்கு படுத்துதல், ஒருகிணைப்புக்குழு, பொதுவான ஏற்பாடுகள், செலவு விபரம் தயாரித்தல் , நலன்புரி , பார்வையாளர்களை ஒழுங்குபடுத்துதல் மண்டப ஒழுங்

ஆரம்ப விழா


கலாசார கண்காட்சியின் ஆரம்ப விழா 2013. 02.01 வெள்ளிக்கிழமை மு.ப 9.00 மணிக்கு மட் மீராபாலிகா வித்தியாலயத்தில் கலாசார கண்காட்சியை அதிதிகள்கள் திறந்துவைத்து பார்வையிட்டதன் பின்பு அதிதிகள் கலை நிகழ்வுகளோடு ஹிஸ்புள்ளா கலாசார மண்டபத்திற்கு அழைத்து செல்லப்பட்டு பிரதேச செயலாளர் ஜனாப் எஸ்.எச் முஸம்மில் SLAS அவர்களின் தலைமையில் ஆரம்ப நிகழ்வு சிறப்பாக நடைபெற்றது. பிரதேச கலைஞர்களின் கலை நிகழ்ச்சிகளும் மேடையேற்றப்பட்டன.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கலாசாரக் கண்காட்சி

ஆரம்ப நிகழ்வைத் தொடர்ந்து கலாசாரக் கண்காட்சி மூன்று தினங்கள் நடைபெற்றது. சுமார் இருபாயித்திற்கு மேற்பட்டோர் இக்கண்காட்சியை கண்டுகளித்தனர். அதன் காட்சிகளில் சில




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலக முஸ்லிம்களின் 1001 கண்டுபிடிப்புக்கள்

1001 கண்டுபிடிப்புக்கள் என்பது பல விருதுகள் பெற்ற அறிவியல் மற்றும் கலாசார பாரம்பரிய சர்வதேச அமைப்பாகும். இவ்வமைப்பானது Golden Age எனப்படும் பெற்காலத்தில் முஸ்லிம்களின் நாகரிகத்தின் அறிவியல் மற்றும் தொழிநுட்ப வளர்ச்சியை உலகமயப்படுத்துவதற்காக தன்னை அர்ப்பணித்துள்ளது. இதன் ஓர் அங்கமாக **"உலக முஸ்லிம்களின் 1001 கண்டுபிடிப்புக்கள்"** எனும் ஓர் அறிவியல் நூல் ஒன்றை வெளியிட்டுள்ளது. இந்நூலில் Dark Age எனப்படும் இருண்டகாலத்தில் உலக நாகரித்திற்கு முஸ்லிம்களின் பங்களிப்பு தொடர்பாக சிறப்பாக குறிப்பிடப்படடுள்ளது. அத்துடன் வீடு, பாடசாலை, சந்தை, வைத்தியசாலை, நகரம், உலகம், பிரபஞ்சம் எனும் ஏழு உபதலைப்புக்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

இது தொடர்பாக கடந்த 2013ம் ஆண்டு பிரதேச செயலகத்தினால் நடாத்தப்பட்ட கலாசார கண்காட்சியிலும் இந்த 1001 கண்டுபிடிப்புக்கள் ஓர் அங்கமாக சேர்த்து பொதுமக்களுக்கு காட்சிப்படுத்தப்பட்டதும் குறிப்பிடத்தக்கது இவ்வரிய தகவல்களினை எமது இளைய சமுதாயமும் அறிந்து கொள்வதற்காகவே இந்நூலில் உள்ள முக்கிய குறிப்புக்களை எமது பிரதேச செயலக உத்தியோகத்தர்களைக் கொண்டு தமிழில் மெழிபெயர்த்து இங்கு சுருக்கமாக தரப்பட்டுள்ளது.




## 01. HOME

எமது (மேற்கத்தேய) கலாச்சாரத்தினதும் நாகரிகத்தினதும் வளர்ச்சி தொடர்பாக

இஸ்லாமிய உலகுக்கு நாம் எந்தளவுக்கு கடமைப்பட்டுள்ளோம் என்பது பற்றிய அறியாமை மேற்குலகில் பரவலாகக் காணப்படுகின்றது.இஸ்லாத்தை ஒரு அந்நிய கலாசாரமாகவும் இம்மேற்குலகின் எதிரியாகவுமே பார்க்கின்ற நாம், இஸ்லாம் எமது சொந்த வரலாற்றுடன் எந்தளவு தொடர்புபட்டுள்ளது என்பதை வேண்டுமென்றே எமது நினைவுகளிலிருந்து அழித்துக் கொண்டிருக்கின்றோம்.



*PrinceCharles*

கோப்பி

01 கி.பி. 9ம் (ஹிஜ்ரி 3ம்) நூற்றாண்டில் காலித் என்ற ஒரு இடையன், ஒரு வகைக் கனிகளை உண்ட தன் ஆடுகள் சுறுசுறுப்படைவதை அவதானித்தான். அக் கனிகளில் இருந்து ஒரு வகைப் பானத்தை தயாரித்து அதற்கு அல் கஹ்வா என்று பெயரிடப்பட்டது.

02. இன்று கோப்பி என அழைக்கப்படும் பெற்றுள்ள அல் கஹ்வா பஸ்கா ரோஸி எனும் துருக்கிய முஸ்லிமால் 1650 ல் இங்கிலாந்திற்கு அறிமுகம் செய்யப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

12ம் நூற்றாண்டுக்கு முன்

01. கோப்பி பானத்தினை உலகுக்கு அறிமுகம் செய்தல்.

★ எதியோப்பியாவில் ஆடுகள் ஒருவகைச் செடியின் காய் உண்ட போது சுறுசுறுப்பு அடைந்தன.

★ (எனவே அச் செடியின்) கோப்பி விதைகள் கொதிக்க வைக்கப்பட்டு அல் கஹ்வா எனும் பானம் தயாரிக்கப்பட்டது.

★ எமன் தேசத்தில் சூபிக்கள் இரவு வணக்கத்தில் தூக்கத்தினைத் தவிர்த்து விழித்திருந்து இரவு வணக்கத்தில் ஈடுபட அல் கஹ்வா பானத்தினை அருந்தினர்.

★ பிரயாணிகள், யாத்திரிகர்கள், வியாபாரிகள் மூலம் முஸ்லிம் உலகுக்கு பரவுதல்.

★ 17ம் நூற்றாண்டில் ஐரோப்பாவை அடைதல்.

★ 16ம் நூற்றாண்டின் கோப்பி அருந்தும் இடத்தில் Coffee House தோற்றம்

★ 17ம் நூற்றாண்டில் லண்டனில் தோற்றம் பெற்ற வுநந டுழைலனள ஊழககநந ர்ழரளந இது வர்த்தகர்கள், கப்பல் சொந்தக்காரர்கள் என்பவர்களின் சந்திக்கும் தளமாகவும் பொது மக்கள் அரசியல் சார்ந்த விடயங்களை கலந்துரையாடும் இடமாகவும் இருந்ததுடன் விடுதலை இயக்கங்களின் உருவாக்கத்திற்கும் வழி வகுத்தது.


**Chess**

சதுரங்கம், சாஷா இப்னு தாஹிர் என்பவரால் இந்தியாவில் தோற்றுவிக்கப்பட்டது. பாரசீகத்திற்கு (தற்கால ஈரான்) அனுப்பப்பட்ட ஒரு தூதுவர் இதனை பாரசீக முஸ்லிம்களுக்கு அறிமுகம் செய்தார். இவ் விளையாட்டில் பல முன்னேற்றங்களை ஏற்படுத்திய பாரசீகர் அதனை "சத்ரஞ்ச்" எனும் புதிய பெயர் கொண்டு அழைத்தனர். யுத்தங்களைத் திட்டமிடுவதில் சத்ரஞ்ச் பயன்படுத்தப்பட்டது. அந்தலூசியா என அழைக்கப்பட்ட ஸ்பெயினை ஆட்சி செய்த முஸ்லிம்கள் அதனை ஐரோப்பியருக்கு அறிமுகம் செய்தனர் ( 9ம் நூற்றாண்டில்).

சதுரங்க விளையாட்டில் பயன்படுத்தப்படும் பிரயோகங்கள் :

Shah - King
Firzan/ General - Queen
Feel / Elephant - Bishop
Faras - Horse
Rukh/ Chariot - Cantle
Baidaq/ Soldier - Pawn
"Shah மௌத்"= Check mate





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுத்தம் - **Some contrast from Al.Jazairi**

**"சுத்தம் ஈமானில் பாதி" - ஹதீஸ்**

**சோப் கண்டு பிடிப்பு**

ஒலிவ் எண்ணெய்யையும், அல் காலி எனும் பதார்த்தத்தையும், கொதிக்க வைத்து ஆற வைத்து, பின் உறையவைப்பதன் மூலம் சோப் உருவாக்கப்பட்டது. "ஹம்மாம்" என்று அழைக்கப்பட்ட பொது குளியலறைகளில் இவை வைக்கப்பட்டன.

ஐரோப்பாவின் இருண்ட காலத்தின்போது சிலுவை யுத்தகாரர்கள் "சோப்"களை ஐரோப்பயவுக்கு கொண்டு வந்த போதும் அது பிரபல்யம் அடையவில்லை. காரணம் குளிப்பதன் மூலம் இறைவனின் சாபம் ஏற்படும் என்ற அவர்களின் மூட நம்பிக்கையாகும்.

18ம் நூற்றாண்டில் மணச் சவர்க்காரமும், மருத்துவ தன்மை கொண்ட மூலிகை சவர்காரமும் உற்பத்தி செய்யும் தொழிற்சாலைகள் சிரியாவில் நிரம்பிக் காணப்பட்டன.

02 **The Elephant clock** - யானைக் கடிகாரம்

அல் ஜஸைரி எனும் முஸ்லிம் இயந்திரவியலாளரினால் கி.பி.13ம் நூற்றாண்டில் உருவாக்கப்பட்டது.

03 **The camera obscura**

பொருட்களின் விம்பம் கண்ணில் எவ்வாறு உருவாகிறது என்பதை முதன் முதல்பரிசோதனை வாயிலாக நிரூபித்தல். இந்த கமராவே தற்போதய நவீன கமராக்கள், வீடியோ தொழில்நுட்பம், சினிமா என்பவற்றிக்கு அடிப்படையாகும்.

**ஒளி / பார்வை**

கண்ணிலே இருந்து புறப்படும் ஒரு வகையான கதிர்கள் நாம் பார்க்கின்ற பொருட்களைத் தொடுகின்ற போதுதான் எம்மால் பார்க்க முடிகின்றது என நம்பியிருந்தார்கள் கிரேக்கர்கள்.

நாம் எந்தப் பொருளைப் பார்க்கின்றோமோ அந்தப் பொருளிலிருந்து எமது கண்களை வந்தடையும் ஒளிக்கதிர்களே எமது பார்வைக்கு காரணம் என்பதை பரிசோதனை மூலம் நிறுவினார் இப்னு அல் ஹைதம்.

ஒளி நேர் கோட்டில் பயணிக்கின்றது என்பதையும், எனவே விழித்திரையிலுள்ள மிகச் சிறிய துவாரத்தினூடாக (வில்லை) விழித்திரையில் விழும் பொருட்களின் விம்பம் தலை கீழாகக் காணப்படும் எனவும், நரம்புகள் மூலமாக விழித்திரையுடன் தொடர்புபடும் மூளையே நாம் பார்க்கும் பொருட்களை நேரான நிலையில் உணர்வதற்கு உதவுகின்றன என்ற மூன்று உண்மைகளையும் எடுத்துக் கூறியவரும் இப்னு அல் ஹைதமே!

இவர் எழுதிய பின்னர் Book of optics என ஆங்கிலத்தில் மொழி பெயர்க்கப்பட்ட புத்தகம் இன்றும் மருத்துவக் கல்லூரிகளில் பயன்படுத்தப் படுகின்றது.

## Three Course Meals

இன்றும் நடைமுறையிலுள்ள வுhசநந ஊழரசளந ஆநயட எனும் உணவுப் பழக்கத்தையும், உணவருந்தும் முறையில் நாகரிகத்தையும் உலகுக்கு அறிமுகம் செய்தவர்கள் அராபிய முஸ்லிம்களே!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு "சூப்" உடன் ஆரம்பித்து, பின்னர் மீன், இறைச்சி, அல்லது பறவை மாமிசத்துடன் பிரதான உணவை உண்ட பின் கனிவகைகளையும்,Nuts களையும் கொண்ட ஒரு இனிப்பான சிறிய உணவுடன் சாப்பாட்டை முடிக்கும் பழக்கத்தையும் ஸ்பெயினுக்கு 9ம் நூற்றாண்டில் எடுத்துச் சென்றவர் ஸிர்யாப் என அழைக்கப்படும் அபுல் ஹஸன் அலி இப்னு நாபி என்பவராவார்.

இவர் அறிமுகப்படுத்திய பழக்க வழக்கங்களில் இன்னும் சில.

01. சுப்ரா என அழைக்கப்படும் விரிப்பில் உணவுகளைப் பரிமாறல்.

02. உண்ணும் போது ஆடைகள் மீது அழுக்குப் படாமல் பாதுகாப்பதற்காக "சேர்வியர்ட்" என அழைக்கப்படும் பெரிய புடைவையை மடி மீது விரித்தல்.

03. உணவுப் பண்டங்களைப் பரிமாறுவதற்காக பளிங்குக் கோப்பைகளைப் பயன்படுத்தவும் இவரே கற்றுக் கொடுத்தார்.

கம்பளத்தின் அறிமுகம்

**Rushes** எனும் தள விரிப்புகள்

15ம் நூற்றாண்டின் எழுத்தாளரான எராஸ்மஸ் (Erasmus), ஆங்கிலேயரின் வீட்டுத்தரையை பின்வருமாறு வர்ணிக்கின்றார்:

"பொதுவாக தரைகள் வெண் களியினால் பூசப்பட்டு, rushes இனால் (ஒரு வகையான தாவர இலைகளினால் பின்னப்பட்ட வலை) மூடப்பட்டுள்ளன.எப்போதாவது ஒரு முறை - சில வேளைகளில் சுமார் 20 வருடங்களுக்குப் பின் - இவை மாற்றப்படுகின்றன.இந்த rushes இன் அடிப்பகுதியில் தொண்டையில் இருந்து வெளியாகும் சளி,வாந்தி,நாய்களினதும் மனிதர்களினதும் திரவக் கழிவுகள், சாராயத்துளிகள்,மீன் துகள்கள் மற்றும் வெளிப்படையாக குறிப்பிட்டுச் சொல்ல விரும்பாத பிற அருவருப்புகளும் காணப்படுகின்றன.

கோடை காலத்தின்போது இதிலிருந்து வெளிவரும் ஆவியானது மனிதனின் சுகாதாரத்திற்கு அச்சுறுத்தலானது என நான் கருதுகின்றேன்."

கம்பளம்

பாரசீக,அரேபிய,துருக்கிய கம்பளங்கள், சதுரம், நட்சத்திரம், நீள் சதுரம், வட்டம் போன்ற பல்வேறு கணித உருக்களைக் காட்டும் பின்னல் வேலைப்பாடுகளைத் தன்னகத்தே கொண்டவை.

முஹம்மது நபியின் காலத்திலிருந்தே அரேபிய முஸ்லிம்களிடம் கம்பளங்கள் உபயோகத்தில் இருந்திருக்கின்றன.

முஸ்லிம்கள், குறிப்பாகப் பெண்கள் தம் ஒவ்வொருக்குமெனத் தனியான 'முஸல்லா' என அழைக்கப்படும் சிறிய கம்பளத்தை தம்மிடம் வைத்திருப்பார்கள்.

முஸ்லிம் திருமண நிகழ்வுகளின் போது மாப்பிள்ளைமாரும் கம்பளங்களிலேயே அமர்த்தப்படுகிறார்கள்.

"துருக்கிய கம்பளங்களை 'காப்பி' யடித்துச் செய்யப்படும் மிகச் சிறந்த 'Imitation' கம்பளங்களுக்கு £ 150 பணப் பரிசு சுழலயா Society of Arts UK அறிவிப்பு. 1757 – 1759"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 2.0 Schools & Literarture

தாருல் ஹிக்மா / அறிவியல் இல்லம்

கி.பி. 9ம் நூற்றாண்டில் பக்தாத்தில் நிறுவப்பட்ட மாபெரும் அறிவியல் இல்லம் தாருல் ஹிக்மாவாகும். முஸ்லிம் உலகின் பல பாகங்களிலும் பரந்து கிடந்த பல்வேறு துறை சார்ந்த அறிவியல் நிபுணர்கள் மட்டுமன்றி,புத்தகங்களின் மூலப் பிரதிகளும் இங்கு ஒன்று சேர்க்கப்பட்டன.

தற்போதைய ஈரானிலுள்ள குராசான் பிரதேசத்திலிருந்து மாத்திரம் 100 ஒட்டகைகளில் கையெழுத்து மூலப் பிரதிகள் வரவழைக்கப்பட்டன.

இன்றைய இத்தாலியின் ஒரு பகுதியான, ஆனால் அன்று உமையாக்களின் ஆட்சியின் கீழ் இருந்த சிசிலி பிரதேசத்திலிருந்து தத்துவம், மற்றும் விஞ்ஞானம் தொடர்பான மூலப் பிரதிகள் அதிகளவில் இங்கு கொண்டு வரப்பட்டன.

முஸ்லிம்களால் எழுதப்பட்ட மற்றும் வழக்கில் இல்லாது போன Latin மொழியில் இருந்து அறபுக்கு மொழிமாற்றம் செய்யப்பட்ட நூல்கள் ஐரோப்பாவை அடைந்தபோது அவை பொதுவாகத் தம் இருண்ட காலத்தை விட்டு வெளியில் வர ஆரம்பித்தன.

அக் காலத்தில் அரபு மொழியே, சர்வதேச இணைப்பு மொழியாகவும் அறிவியலின் மொழியாகவும் காணப்பட்டது.

பாடசாலை

இஸ்லாமிய நாகரிகத்தில் பள்ளிவாசல்களே பாடசாலைகளாகவும் தொழிற்பட்டன.இஸ்லாத்தின் முதற் பாடசாலை மதீனாப் பள்ளிவாயலில் இயங்கியது. (கி.பி. 653).இங்கு வாசிப்பைப் போதிப்பதில் முஸ்லிம் அல்லாத அரேபியரும் நியமிக்கப்பட்டனர்.கி.பி. 744 ல் டமஸ்கஸின் முதல் பாடசாலை நிறுவப்பட்டது.

முஸ்லிம் ஸ்பெயினில் (அந்தலூசியா) 9 ம் நூற்றாண்டில் நிறுவப்பட்டிருந்த அனைத்துப் பள்ளிவாசல்களிலும் ஆரம்பக் கல்வியைப் போதிக்கும் பாடசாலைகள் காணப்பட்டன.

ஆசிரியருடைய வீட்டில் மாணவர்கள் ஒன்றுகூடிக் கல்விகற்கும் முறை முதன் முறையாக 10ம் நூற்றாண்டில் ஈரான் பிரதேசத்தில் தோன்றியது.இது பள்ளிவாசலுக்கு அப்பால் நிறுவப்பட்ட முதற் பாடசாலை.

15ம் நூற்றாண்டில் உதுமானியர்களால் நிறுவப்பட்ட 'குல்லிய்யா' என அழைக்கப்பட்ட பாடசாலைகள் நவீன பல்கலைக்கழகங்களை ஒத்தவை. ஒவ்வொரு குல்லிய்யாவிலும் பள்ளிவாசல்களும் மருத்துவமனைகளும் சமையலறையும் உணவு விடுதியும் காணப்பட்டன. மாணவர்களுக்காக அனைத்துச் செலவுகளும் உதுமானிய அரசினால் மேற்கொள்ளப்பட்டன.

பல்கலைக் கழகம்

உலகில் இன்று இயங்குகின்ற பல்கலைக்கழகங்களில் மிகவும் பழைமையானது எகிப்தில் உள்ள அல் - அஸ்ஹர் பல்கலைக்கழகமாகும். இது சுமார் 1037 வருடங்கள் பழைமை வாய்ந்தது. இப்னு அல் ஹைதம் போன்ற மாணவர்களையும், இப்னு கல்தூன் போன்ற பல் துறை அறிஞர்களை ஆசிரியர்களாகவும் கொண்ட பெருமை இதனைச் சாரும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உலகில் முதலாவது பல்கலைக்கழகம்.

பாதிமா அல் பிஹ்ரி என்ற பெண் ஒருவரால் கி.பி841 ல் மொரோகோவில் குநண நகரில் நிறுவப்பட்ட கரவிய்யீன் பல்கலைக்கழகம் ஆகும்.

இங்கு குர்ஆன், இறையியல், சட்டம், விவாதத் திறன், இலக்கியம், தர்க்கம், எண் கணிதம், புவியியல், மருத்துவம் போன்ற கற்கைகள் இடம் பெற்றன.

இங்கு சேர விரும்பும் சர்வதேச மாணவர்களின் தொகை அதிகரித்தமையால் தேர்வுப் பரீட்சை முதன் முறையாக அறிமுகம் செய்யப்பட்டது.தேர்வுப் பரீட்சையில் மாணவர்களின் குர்ஆன் பற்றிய அறிவும்இஅரபு மொழித்திறனும், அவர்களுடைய விஞ்ஞான அறிவும் பரிசோதிக்கப்பட்டன.கல்வி இலவசமாக வழங்கப்பட்டது.

கடினமான இறுதிப் பரீட்சைகள் வைக்கப்பட்டு 'இஜாஸா' என அழைக்கப்பட்ட "பட்டச் சான்றிதழ்கள்" மாணவர்களுக்கு வழங்கப்பட்டன.இந்த 'இஜாஸா'க்களைப் பெற்றவர்கள் மாத்திரமே ஆசிரியர்களாகத் தொழிற்படமுடியும்.இந்த 'இஜாஸாக்கள்' கற்பிப்பதற்கான அனுமதிப் பத்திரம் என்ற பொருள்படும் "பி ஹக் அல் ரிவாயா" எனும் அரபுப் பதம் கொண்டும் அழைக்கப்பட்டன.இதுவே இன்று 'Baccalareus' என்று ஆங்கிலத்தில் திரிபடைந்துள்ளது. Baccalareus எனும் பெயர் கொண்ட சான்றிதழ்கள் இன்றும் பல்வேறு University களால் வழங்கப்படுகின்றன.

**வாசிகசாலைகள்**

7 ம் நூற்றாண்டில் முழுக் குர்ஆனும் எழுத்துருவில் ஒன்று சேர்க்கப்பட்டுஇபின்னர் இந்த மூலப் பிரதியிலிருந்து பல பிரதிகள் எடுக்கப்பட்டன.இப்பிரதிகள் இஸ்லாமிய கிலாபத்தின் பல பாகங்களுக்கும் அனுப்பிவைக்கப்பட்டதால் அரபு எழுத்துக்களின் வாசிப்பும்இஎழுத்துக்களும் தரப்படுத்தப்பட்டன.அப்பாசிய கலீபா தாறுல் ஹிக்மாவில்இகிரேக்க மொழியிலிருந்து அரபு மொழிக்கு புத்தகங்களை மொழிபெயர்ப்புச் செய்தார்.

இவர் மொழிபெயர்ப்பாளர்களுக்கு மொழிபெயர்க்கப்பட்ட புத்தகத்தின் எடைக்குச் சமமான தங்கத்தை ஊதியமாக வழங்கினார்.இதனால் தாறுல் ஹிக்மாவில் உள்ள புத்தகங்களின் எண்ணிக்கை கணிசமாக உயர்ந்தது. இப் புத்தகங்கள் தாறுல் குதுப் (புத்தக இல்லம்) என அழைக்கப்பட்ட வாசிகசாலைகளுக்கு அனுப்பிவைக்கப்பட்டன.

கி.பி1258 ல் மொங்கோலியர் பக்தாதை ஆக்கிரமித்தபோது அங்குள்ள வாசிகசாலைகளில் பல இலட்சக்கணக்கான புத்தகங்கள் காணப்பட்டன. யூப்ரட்டீஸ் நதியில் இப் புத்தகங்களை நிரப்பியமொங்கோலியரஅப்புத்தகங்கள் மேல் நதியைக் கடந்தனர். புத்தகங்களின் மை கரைந்ததனால் யூப்ரடீஸ் நதி கறுப்பு நிறமாக ஓடியது.

பக்தாத்தில் இருந்தவற்றைப் போல் பாரிய வாசிகசாலைகள் கெய்ரோ, அலெப்போ மற்றும் ஈரான்இமத்திய ஆசியாவின் பிரதான நகரங்களிலும் காணப்பட்டன.

வாசிகசாலைகளில் புத்தகங்களை பிரதி எடுக்கும் வசதியும் காணப்பட்டது.இதனைச் செய்வதற்காக 'வர்ராக்' எனும் பிரதி செய்யும் நிபுணர்கள் நியமிக்கப்பட்டிருந்தார்கள்.

நூலாசிரியர்களும், பிற அறிஞர்களும் தாம் எழுதியஇவாசித்த புத்தகங்களை பிறருடன் கலந்து ஆய்வு செய்யும்(விமர்சனம் செய்யும்) வசதியும் இங்கு காணப்பட்டன.

புத்தகங்கள் வகைப்படுத்தப்பட்டு தனித்தனியான 'ராக்கை'களில் வைக்கப்பட்டதுடன் வாசகர்களுக்கு இரவலாகவும் வழங்கப்பட்டன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கதைகளும் நாவல்களும்

ஒரு தீவிலே தனித்துவிடப்பட்ட ஒரு மனிதன் எவ்வாறு தன் வாழ்கைப் போராட்டத்தை எதிர் கொள்கிறான் என்பதைச் சித்தரிக்கும் நாவல் 'ரொபின்சன்குருசோ' ஆகும். இது 1720ம் ஆண்டு எழுதப்பட்டது.

இதே கதையோட்டத்தை மையமாகக் கொண்ட 'Cast Away' எனும் சினிமாப் படம் ஹொலிவூட்டில் தயாரிக்கப்பட்டது.

ஆனால் இவை இரண்டுமே அலி இப்னு சீனா என்ற இஸ்லாமிய அறிஞரினால் 11ம் நூற்றாண்டில் எழுதப்பட்ட 'ஹை இப்னு யக்ழான்' என்ற அரபுக் கதையின் காப்பிகளே. இந்தக் கதை 1709 ம் ஆண்டு ஆங்கிலத்திற்கு மொழி பெயர்க்கப்பட்டது.

## 3.0 எழுத்தணிக் கலை மற்றும் விவசாயப் புரட்சி

**Vitruvian man எனஅழைக்கப்படும் 1490ல் லியனார்டோடாவின்சி என்பவரால் வரையப்பட்ட படம்**

படைப்புகளில் மிகச் சிறந்தது மனிதப் படைப்பு. இவ்வகையில் நேர்த்தியான முழுமையான ஒரு மனிதனின் அவயவங்கள் ஒவ்வொன்றும் தமக்கிடையில் நுணுக்கமான விகிதார ஒழுங்கு பேணப்பட்ட நிலையில் மனிதன் படைக்கப்பட்டுள்ளான்.

எனவே டாவின்சி வரைந்த **Vitruvian man** எனும் வரைபடம் மனிதனின் ஒவ்வொரு அங்கமும் எந்த விகிதாசாரத்தில் காணப்பட வேண்டும் என்பதை விளக்குவதனை அவதானிக்கலாம்.

இந்த விகிதாசாரம் பற்றிய அறிவு ஓவியர்கள், சிற்பிகளுக்கு மாத்திரமன்றி கட்டிடக்கலைஞர்கள், (Geometry) வடிவவியல் மேதைகளுக்கும் அத்தியாவசிமானது.

டாவின்சியின் Vitruvian man கி.பி 10ம்நூற்றாண்டில் வசித்த'இஹ்வான் சபா' சகோதரர்கள் சிலரால் எழுதப்பட்ட Rassa'டை என்ற நூலிலிருந்து பெறப்பட்ட ஆய்வுகளின் விளைவு எம்மில் அநேகர் அறியாத விடயம்.

இருண்ட காலத்திலுருந்து ஐரோப்பா விடுபட்டமைக்கான காரணம் அவர்கள் அனைத்து அறிவியல் துறைகளிலும் முஸ்லிம்களை முன்மாதிரியாக ஏற்றுக் கொண்டமையே இதற்கு இது ஓர் உதாரணம்.

எழுத்தணிக் கலையும் அரபு எழுத்தலங்காரமும்

உருவங்கள் வரைவதை இஸ்லாம் தடைசெய்த காரணத்தினால் முஸ்லிம்கள் அற்புதமான எழுத்தணிக் கலையை உருவாக்கி வளர்ப்பதில் கவனம் செலுத்தினர்.

அரபு எழுத்தாளர்களால் கவரப்பட்ட ஐரோப்பிய கிறிஸ்தவர் எழுத்தணிகளில் காணப்பட்ட அர்த்தங்களைப் புரியாமலேயே அவற்றைப் பிரதி செய்ய ஆரம்பித்தனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Prof. ThomasArnold, Legacy of Islam என்ற தனது நூலில் பிஸ்மில்லாஹ் என்ற அரபு எழுத்தை கொண்ட ஒரு சிலுவை அயர்லாந்தில் கண்டெடுக்கப்பட்டது பற்றிக் குறிப்பிடுகின்றார்.

விவசாயப் புரட்சி

முஸ்லிம்களின் வருகைக்கு முன் மத்தியதரைக் கடல் சார்ந்த ஐரோப்பாவில் குளிர்காலப் பயிர்கள் மாத்திரமே விவசாயம் செய்யப்பப்பட்டன.

ஸ்பெயினை வெற்றி கொண்ட முஸ்லிம்கள் அரேபியாவிலிருந்தும், இந்தியாவின் உஷ்ணவலய பிரதேசங்களில் இருந்தும பல் வேறுபட்ட பயிரினங்களை அங்கு எடுத்துச் சென்றனர்.முதன் முறையாக கோடைகாலப் பயிர்கள் அங்கு பயிரிடப்பட்டன.

முஸ்லிம்களால் ஐரோப்பாவுக்கு எடுத்து வரப்பட்ட சில கனிவர்க்கங்களும்,தாவர இனங்களும் கீழ்வருமாறு :

ஆரஞ்சு,எலுமிச்சை,ஈச்சை,அத்தி,அரிசி,பீச்,prunes,அப்ரிகோட்,பருத்தி,மஞ்சள்,கரும்பு,பட்டு,…..

விவசாயம் தொடர்பாகக் காணப்பட்ட ஒரு சட்டம் :

ஒருநிலச் சொந்தக்காரர் தொடர்ந்து 3 வருடங்கள் தனது நிலத்தைப் பயிரிடாது தரிசாக வைத்திருந்தால் அந்நிலம் அரசினால் பறிமுதல் செய்யப்பட்டு விவசாயிகளுக்கு வழங்கப்பட்டது. இதனால் விவசாயம் விருத்தி கண்டது.

விவசாயச் செய்கை பற்றிய புத்தகம் :

பஸ்ஸால் எனப்படும்,டொலடோ நகர அமீரின் தோட்டப் பொறுப்பதிகாரி,விவசாயம் பற்றி ஒரு புத்தகத்தை 1085 CE ல் எழுதினார். இவர் தண்ணீரையும் மண்ணையும் பல்வேறு வகைகளாக வகைப்படுத்தி எந்த தண்ணீர அல்லது மண் வகை எப்பயிருக்குப் பொருத்தம் என்பதைக் குறிப்பிட்டார்.

இவ்வாறான ஒரு புத்தகம் இப்னு அல் அவ்வாம் என்பவரால் 12ம் நூற்றாண்டிலும் எழுதப்பட்டது.ஒருநிலத்தில் எவ்வாறு விலங்கு வேளாண்மையையும் விவசாயத்தையும் செய்யலாம் என்பது பற்றி இவர் விவரித்தார்.

இந்நூலில் இவர் 585 வகைத் தாவரங்களையும் அவைகளை எவ்வாறு ஒட்டு முறையில் வளப்படுத்தலாம்? அவற்றுக்குப் பொருத்தமான மண் வகைகள் எவை? மண்ணை எவ்வாறு வளப்படுத்தலாம? அத்தாவரங்கட்டு ஏற்படும் நோய்கள் எவை? அவற்றை எவ்வாறு கட்டுப்படுத்தலாம்? என்ற விடயங்கள் பற்றியும்,நீர்ப்பாய்ச்சல்,தேனீ வளர்ப்புக்குத் தேவையான மரவகைகள் பற்றியும் குறிப்பிடுகின்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு பாத்திரத்தை மரத்தினடியில் புதைத்து அம்மரத்தின் நீர்த்தேவைக்கும்,மண்ணின் தன்மைக்கும் கால நிலைக்கும் ஏற்றாற் போல் அளவான துவாரத்தை அமைத்து கச்சிதமாக நீர்ப்பாய்ச்சல் செய்யும் முறையை இவரே உலகுக்கு அறிமுகம் செய்தார்.

Cordovacalendar 961 CE ஒவ்வொரு மாதத்திலும் பிரதான விவசாய செயற்பாடுகளை இக்கலண்டர் காட்டியது.

(உ+ம்) March மாதம்

1. அத்திமரம் Graftins.
2. Cereal வகைகளில் தோற்றம்.
3. கரும்பு நடல் .
4. றோஸ் ,Lilac மலர்கள் மலரும்.
5. Quails களின் வருகை.
6. பட்டுப்பூச்சிகளின் சந்ததிப் பெருக்கம்.
7. Mullets up river.
8. கக்கரிக்காய் நடல்.
9. பருத்தி மஞ்சல், கத்தரி விதைத்தல்.
10. குதிரைகளின் கொள்வனவுக்கான ஓடர்களை அனுப்புதல்.
11. வெட்டுக்கிளிகள் (locusts) வருகை அவற்றை அழிப்பதற்கான ஏற்பாடுகள் ஆரம்பம்.
12. பலவகைப் பறவைகளின் (mating season) இனவிருத்திக் காலம்.

படம் :

முஸ்லிம்கள் தம் தோட்டங்களிலேயே பாரிய, 60 அடிவரை உயரம் கொண்ட புறா வீடுகளை அமைத்தனர் . அவற்றின் பெருக்கத்தை அதிகப்படுத்தினர். புறாக் கழிவுகள் சேகரிக்கப்பட்டு விவசாய நிலங்களை வளப்படுத்துவதற்கான உரமாகப் பயன்படுத்தப்பட்டது.

**கனாத்துக்கள் :**

விவசாய வேலைகளுக்காக சில வேளைகளில் தூர இடங்களிருந்து தண்ணீரைப் பெற வேண்டிய தேவை இருந்தது. இந்த தண்ணீர் ஒரு வகைக் கான்களினூடாகக் கொண்டுவரப்பட்டது . பாலை வனங்களில் எற்படும் ஆவியுயிர்ப்பைத் தவிர்ப்பதற்காக இந்தக் கான்கள் நிலத்தின் அடியில் அமைக்கப்பட்டன. இவை கனாத்துக்கள் (சுரங்கக் கான்கள்)எனஅழைக்கப்பட்டன. இந்த கான்களை நிலமட்டத்துடன் தொடர்பு படுத்துவதற்காக பாரிய கிணறுகள் தேவையான இடங்களில் அமைக்கப்பட்டன. இவற்றை இன்றும் ஈரானின் பல பகுதிகளில் காணலாம்.

சிவில் பொறியற்துறை வரலாற்றாசிரியர்கள், குறிப்பாக அணைக்கட்டுகளைப் பற்றிப் பேசும் வரலாற்றாசிரியர்கள் முஸ்லிம்களின் பங்களிப்புக்களை இருட்டடிப்புச் செய்கின்றனர்.உமையாக்கள், அப்பாசியரின் காலங்களின் போது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அணைக்கட்டுகள்,நீர்ப்பாசனம் போன்ற துறைகள் புறக்கணிக்கப்பட்டு,அவை அறவே இல்லாது போயின என்ற கூற்று பொய்யானதும் அநீதியானதும் ஆகும்.

Worman Smith'அணைக்கட்டுகளின் வரலாறு'எனும் நூலில் (1971)

காற்றுலை

காற்றுலையைப் பயன்படுத்தி தானியம் அரைக்கும் முறை முதன் பாரசீகத்தின் சிஸ்தார் நகரில் முதலாககி.பி. 634 ல் கலீபாஉமர் (ரழி) அவர்களால் நிறுவப்பட்டது.

பெரும்பாலான ஐரோப்பிய நாடுகளில் உள்ள அதி வேகமோட்டார் பாதைகளால் இணைக்கப்பட்டிருக்கும். இப்பாதைகளில் பிரயாணிகள் ஓய்வெடுத்துச் செல்வதற்கும் தேவையானவசதிகள் காணப்படும்.இந்த இடங்களில் பொதுவாகபெற்றோல் நிலையங்கள்,தேநீர் சாலைகள்,உணவுவிடுதிகள் என்பன காணப்படும் .

இஸ்லாமியதேசங்களில் காணப்பட்டுபிரதானநகர்கள் யாவும் தமக்கிடையிலும் , ஹஜ் ஜ"க் குரிய இடங்களானமக்காவுடனும் பாதைகளால் இணைக்கப்பட்டிருந்தன.வசதிக்காக சுமார் 30 மைல்கள் இடைவெளியில் தங்குமிடவசதிகள் செய்யப்பட்ருந்தன .

இங்குதரிக்கும் பிரயானிகளுக்கு 3 நாட்கள்வரை இலவசமாகதங்குமிடம் உணவும் ,மருத்துவவசதிகளும் சில இடங்களில் பொழுதுபோக்குவசதிகளும் வழங்கப்பட்டன இதற்கானசெலவுகள் கிலாபத்தின் பைத்துல் மால் (திறைசேரி) இல் இருந்தும் மக்கள் வழங்கும் தான தர்மங்களிலிருந்தும் மேற் கொள்ளப்பட்டன .

தடுப்பூசி (vaccination)

பலவீனமான அல்லது இறந்த நோய் கிருமிகளை ஒரு மனித உடலில் செலுத்தும் போது அந் நோய்க்கு எதிரான நோய் எதிர்ப்பு சக்தியை அந்த உடல் பெறுகின்றது. இதனை முதன் முதலில் கண்டு பிடித்தவர்கள் துருக்கிய முஸ்லிம்கள் ஆகும் . கி.பி. 1717

இதனை ஐரோப்பாவுக்கு அறிமுகம் செய்தவர் லெடிமோன்டு என அழைக்கப்படும் இவர் 1761-1717 காலப்பகுதியல் துருக்கியில் கடமை புரிந்தார். இங்கிலாந்தின் தூதுவரின் மனைவி.

எட்வார் ஜென்னர் என்ற ஐரோப்பிய பெண்ணே 1769 ல் தடுப்பூசி முறையைக் கண்டு பிடித்தவர் என்ற தகவல் பெய்யானது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காசோலை–"செக்"

ஸ்பெயின் முதல் பரந்திரந்த இஸ்லாமிய தேசத்தக்குள் ஒரு எல்லையிலிருந்து மற்றொரு எல்லைக்கு வியாபாரத்திற் கேற்ப பயணிக்கும் போது தீனார்களையும் திர்ஹம்களையும் சுமந்துசெல்வது இலகுவானதல்ல.

எனவே, "சக" என அரபியில் அழைக்கப்படும் செக்கை கலீபா ஹாறூன் அல் றசீத் 763 – 766 வரையான தனது ஆட்சிக் காலத்தில் அறிமுகப்படுத்தினார்.

## பிரிட்டனில் நூதனசாலையில் உள்ள தங்கநாணயம்

Offer Rex என்ற மத்தியகாலத்து இங்கிலாந்து மன்னன் முஸ்லிம்களின் தங்கநாணயமான தீனரையும் அப்படியே'காப்பியடித்து'தனது நாட்டின் நாணயமாக வெளியிட்டான்.

இந்நாணயத்தில் லாயிலாஹ இல்லல்லாஹ் முஹம்மதுர் ரஸுலல்லாஹ் என்ற பெறிக்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

கடதாசி

இஸ்லாமிய உலகின் முதலாவது கடதாசி ஆலை 751 CE ல் பக்தாதில் நிறுவப்பட்டது

751 CE ல் இடம் பெற்ற டல்லாஜ் யுத்தத்தில் சிறைப் பிடிக்கப்பட்ட கைதிகளிடமிருந்து கடதாசி தயாரிக்கும் முறையை முஸ்லிம்கள் கற்றுக் கொண்டனர்.

Hemp எனும் தாவரத்தை பயன்படுத்தி கடதாசி உற்பத்தி செய்யும் முறையைக் கண்டுபிடித்தவர்கள் சிரிய முஸ்லிம்கள் . மீளப் பயன்படுத்தக் கூடியதும் ,சூழலுக்கும் பாதிப்பில்லாததும் விலை குறைந்ததுமான இக் கடதாசி இனம் உலகில் பிரபலமாக உள்ளது.

950 CE ல் வசித்த முஸ்லிம் கடினமானதும் வழுவழுப்பானதுமான'சாத்திபி'எனப்படும் (glossy) கடதாசியை கண்டுபிடித்தனர்

கிறிஸ்தவ ஐரோப்பாவின் முதலாவது கடதாசி ஆலை பொலக்னர் (Bologana) நகரில் 1293 ce நிறுவப்பட்டது .

இங்கிலாந்தில் முதன் முறையாக 1329 ல் தான் கடதாசி பயன்படுத்தப்பட்டது.

## 4.0 மருத்துவத் துறைக்கான உலக முஸ்லிம்களின் பங்களிப்பு

"ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் மருத்துவ பராமரிப்பு (Medical care) அனைவருக்கும் இலவசமாக வழங்கப்பட்டதுடன் சிகிச்சைகள் மிகவும் நுட்பம் வாய்ந்ததாகவும் காணப்பட்டன.

மத்தியகால இஸ்லாமிய மருத்துவமனைகள் உலகின் நவீன மருத்துவமனைகளாக காணப்பட்டன. அவர்களிடம் சிறந்த மருத்துவ அறிவு காணப்பட்டது. வருகின்ற அனைவருக்கும் இலவசமாக மருத்துவமும் மருந்துகளும் வழங்கப்பட்டன. அவர்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேசிய சுகாதார சேவைகள் (National Health Services) முறைமையின் முன்னோடிகளாக இருந்தனர்.

இஸ்லாமிய ஆட்சியாளர்கள் என்ற வகையில் மிகவும் சிறப்பான கட்டுமானங்களை அமைத்ததாலும் இத்துறை மேலும் வளர்ச்சியடைந்தது. சில மருத்துவமனைகள் மிகவும் பாரியதாகவும், இன்னும் பல சூழவும் பூந்தோட்டங்களையும், பழத் தோட்டங்களையும் கொண்டிருந்தன. மேலும் நோயாளிகளுக்கு இசை மூலமான சிகிச்சைகள் உட்பட உயர்ந்த சமூக நலச் சேவைகளும் வழங்கப்பட்டன.

அவர்கள் பயன்படுத்திய வசதிவாய்ப்புக்கள் இன்று தேவைக்கு ஏற்ப வடிவமைக்கப்பட்டுள்ளதுடன் அறுவைச் சிகிச்சை உபகரணங்கள் (Surgical Instruments) இன்னும் பாவனையில் உள்ளன. முஸ்லிம் சத்திர சிகிச்சை நிபுணர்களால் ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் வடிவமைக்கப்பட்ட "இடுக்கி" (Forceps) எனும் கருவி இன்று வரையும் பயன்படுத்தப்படுகின்றது.

கண் வில்லை மாற்றுச் சிகிச்சைகள்(Cataract Operations) போன்ற வெட்டிச் செய்யும் (Cutting edge) சிகிச்சை முறைகள், ஒழுங்கு முறையான தடுப்பு ஊசி ஏற்றல் (Regular vaccination), உட்தையல், எலும்பு சீரமைப்பு போன்றன தரம் வாய்ந்த நடைமுறைகளாக இன்றும் உள்ளன. அவ்வாறே நெறிமுறையோடு கூடிய மருத்துவ கல்வியை வழங்கக் கூடிய போதனா வைத்தியசாலையும் (Teaching Hospital) காணப்பட்டது."

வைத்தியசாலை அபிவிருத்தி **(Hospital Development)**

"கிரேக்கர்கள் நோய்களை குணப்படுத்துவதற்கு விஞ்ஞான ஆய்வு நடைமுறைகளுக்குப் மாறாக தேவாலயங்களின் அதிசயமாக (Miraculous) கருதி வந்தனர். இதன் போது 8 ஆம் நூற்றாண்டில் பக்தாதில் இஸ்லாமியர்கள் மருத்துவமனைகளை நிறுவத் தொடங்கினர்.

இருப்பினும் கி.பி. 872 – 874ம் ஆண்டு முதலாவது ஒழுங்குபடுத்தப்பட்ட முறையான மருத்துவமனையான (Organized Proper Hospital) "அகமத் இப்னு துலூன் மருத்துவமனை" எகிப்தின் கெய்ரோவில் நிர்மாணிக்கப்பட்டது. இங்கு அனைத்து நோயாளிகளுக்கும் இலவசமாக சிகிச்சை வழங்கப்பட்டதுடன் இலவச மருந்துகளும் வழங்கப்பட்டன.

இங்கு ஆண், பெண்களுக்கென்று தனியான குளியலறைகள், அனைத்து வசதியுடனான நூலகம், மன நோயாளிகளுக்கென தனியான ஒரு பகுதியும் (a section for the insane) அமைக்கப்பட்டிருந்தது. இது நம்ப முடியாத அளவுக்கு ஒரு சிறந்த நிறுவனமாக காணப்பட்டது. வருகின்ற நோயாளர்கள் தங்கள் ஆடைகளையும் பெறுமதியான பொருட்களையும் பாதுகாப்பாக வைப்பதற்கான பாதுகாப்பு அறைகள் காணப்பட்டதுடன் வைத்தியசாலையால் வழங்கப்படும் விஷேட ஆடைகளை நோயாளிகளுக்கு அணிவித்து அவர்களுக்கென ஒதுக்கப்பட்ட கட்டில்களில் வைக்கப்பட்டனர்."

"கி.பி. 982 ஆம் ஆண்டு பக்தாதில் மற்றுமொரு பாரிய "பக்தாத் மருத்துவமனை" நிர்மாணிக்கப்பட்டது. 24 மருத்துவர்களை கொண்டு இங்கு மருத்துவ சேவைகள் வழங்கப்பட்டன."

"12 ஆம் நூற்றாண்டில் டமஸ்கஸில் "அந்நூரி மருத்துவமனை"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரமாண்டமான வைத்தியசாலையாக நிறுவப்பட்டது. இங்கு மருத்துவ ஆலோசனைகள், அறிவுரைகள் வழங்கப்பட்டன. மேலும் மருந்தாளர்கள்(Druggists), நாவிதர்கள் (Barbers), எலும்பு முறிவு அறுவைச் சிகிச்சை நிபுணர் (Orthopedists), கண் மருத்துவ நிபுணர் (Oculist) மற்றும் மருத்துவர்கள் (Physicians)

போன்றோரும் பரிசோதகர்களும் காணப்பட்டனர்.

1284 ஆம் ஆண்டில் அல் மன்சூரி மருத்துவமனை நிர்மாணிக்கப்பட்டதுடன் விஷேட மருத்துவர்கள் பணிக்கமர்த்தப்பட்டனர். ஆண், பெண் தனியான வாட்டுகள் அமைக்கப்பட்டன. ஆண், பெண் உதவியாளர்கள்(Attendants) நியமிக்கப்பட்டனர். கட்டில்கள், மெத்தைகள், குடிநீர் வசதிகள் ஏற்படுத்தப்பட்டன. சிரேஷ்ட மருத்துவர்களுக்கான தனியான அறைகளும், கற்பித்தல் பிரிவுகளும் (Room for Teaching & Lecturing) உருவாக்கப்பட்டதுடன், நோயாளர்கள் வீடுகளுக்கு கொண்டு சென்று பாவிப்பதற்கான மருந்துகளும் வழங்கப்பட்டன.

ஸ்பெயின் அன்தலூஸியா, சிசிலி, வட ஆபிரிக்கா உட்பட முஸ்லிம் உலகம் எங்கும் இந்த மருத்துவமனைகள் விஸ்தரிக்கப்பட்டன. இதன் மூலம் ஐரோப்பாவில் மருத்துவமனைகள் அதிகரிப்பதற்கு முஸ்லிம் மருத்துவர்கள் பெரும் பங்காற்றியுள்ளனர். தென் இத்தாலியில் உள்ள பிரபல சலர்னோ வைத்தியசாலை (Salerno Hospital) முஸ்லிம்களால் உருவாக்கப்பட்டதாகும்.”

**போதனா வைத்தியசாலைகள்**

**(Teaching Hospitals)**

**“யார் மருத்துவ அறிவின்றி மக்களுக்கு சிகிச்சையளிக்கின்றாரோ அதற்கு அவரே பொறுப்பாளியாகின்றார்.”**

**-நபி (ஸல்) அவர்கள். ஆதாரம் புஹாரி, முஸ்லிம்**

“அதிசிறந்த சத்திர சிகிச்சை நிபுணரின் பின்னால் உள்ள ஒரு இளம் ஆர்வமுள்ள திறமையான மருத்துவரது கனவு புதிய 21 ஆம் நூற்றாண்டில் எவ்வாறு கற்பனை யல்லாமல் இருக்கின்றதோ அவ்வாறே 800 ஆண்டுகளுக்கு முன்னர் பல்கலைக்கழக மருத்துவமனைகளை(University Hospitals) முஸ்லிம்கள் கொண்டிருந்தனர். இந்த மருத்துவமனைகள் மாணவர்களுக்கு முதற்தர கற்பித்தல்களை கொள்கை அடிப்படையிலும் (Theoretical Lessons) நடைமுறைப் பயிற்சிகள் (Practical) மூலமாகவும் வழங்கின.”

**சத்திர சிகிச்சை (Surgery)**

“நவீன சத்திர சிகிச்சைகள் மனித உயிர்களை காப்பாற்றுவதில் அதிசிறந்த உச்ச நிலையில் உள்ளன. இந்த உயிர் காக்கும் அறநெறியானது ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் தென் ஸ்பெயினில் இருந்த முஸ்லிம்களின் உயிர் மூச்சாக இருந்தது. அங்கிருந்த முஸ்லிம்கள் மூன்றுவகை சத்திர சிகிச்சை முறைகளை மேற்கொண்டனர்.

1. குருதிக் குழாய் சத்திரசிகிச்சை (Vascular)
2. பொதுவான அறுவைச் சத்திர சிகிச்சை (General Surgery)
3. எலும்பு முறிவு (Orthopedic)”



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கண்நோய் சிகிச்சை (Ophthalmology)**

"மத்தியகால ஐரோப்பாவின் இருண்ட யுகத்தில் முஸ்லிம்கள்தான் கண்நோய் சிகிச்சை முறை ஆய்வுகளுக்கு ஒளி ஏற்றினர்.

இது ஸ்பெய்னில் இருக்கும் குஅடெல்குயிவிர் பள்ளத்தாகிலிருந்து எகிப்தின் நைல் நதி வரைக்கும், ரஷ்யாவின் ஒக்ஸஸ் நதி வரைக்கும் பரவியது.

மத்தியகால ஐரோப்பாவில் முஸ்லிம்கள் மாத்திரம்தான் கண்நோய் சிகிச்சை (Ophthalmology) முறையில் முதுநிலையடைந்தவர்களாக (Masters) காணப்பட்டனர்."

(ஆதாரம்: அமெரிக்க மருத்துவ பேரவை, ஜுலை 1905)

**நகரம் 9ம் 10ம் நூற்றாண்டுகளில்**

9ம் 10ம் நூற்றான்டுகளில் ஸ்பெய்னின் "குர்துபா" (CORDOBA) ஈராகின் "பக்தாத்" (BAGHDAD) என்பவற்றின் வாழ்வது ஒரு தனி இன்பம்.

நாகரீகத்தின் உச்சத்தில் இருந்த இவை பின்வருமாறு காட்டப்பட்டன.

1. இலவச கல்வி வசதிகள்.
2. இலவச சௌக்கிய நலன்புரி சேவைகள்.
3. இரவில் ஒளியூட்டப்பட்ட செவ்வனே அமைக்கப்பட்ட பாதைகள்
4. பொதுவசதிகள் என இன்று அறியப்படும் நூலகங்கள்,புத்தக நிலையங்கள் மற்றும் குளியல் தடாகங்கள்
5. கழுதை வண்டி மூலம் ஒழுங்கு படுத்தப்பட்ட அட்டவணைப்படி குப்பை கூழங்கள் சேகரிப்பு
6. நிலக்கீழ் அமைக்கப்பட்ட கழிவு நீர் காண்கள்களை கழிவகற்றும் கட்டமைப்பு
7. மஸ்ஜிதை மையமாகக் கொண்ட நகர அமைப்பு. நேர்த்தியாக வடிவமைக்கப்பட்ட இல்லங்களும் சந்தை கொகுதிகளும் அவற்றை இணைக்கும் இருமருங்கும் மரங்களால் சூழப்பட்ட "ஜில்" எனக் காற்று வீசும் ஒடுக்கமான வீதிகள்
8. வியாபார நடவடிக்கைகள் முழுக்கவும் பிரதான தெருக்கள், பொது இடங்கள மற்றும் பூங்காக்களும் மட்டுப்படுத்தப்பட்டு இருந்தன.
9. பிரமாண்டமான நீர் இறைக்கும் இயந்திரங்கள் ஆற்றுப் படுக்கைளிலிருந்து களனி நிலங்களுக்கும் நீர் பாய்ச்சும் ரம்மியமான காட்சிகள் இன்றும் 650 வருடங்களுக்கு முன் முஸ்லிம் பொறியிலாலர்களின் கைவண்ணத்தில் உருவான FOUNTAIN நீர் ஊற்று தடாகம் ஸ்பெயினின் கிரானடா நகரிலுள்ள "அல்ஹம்றா மாளிகை"யில் பாவனையில்
10. கட்டிடகலையின் உச்சகட்ட தொழில் நுட்பம் கையாளப்பட்டு ARCH மற்றும் VAULT உம் கொண்ட கட்டிடங்களும் "குப்பா"க்களும் DOME மனாறாக்களும் வளாவி நின்று எழிலூட்டின
11. "அஹ்யா" என வலயங்கள் பிரிக்கப்பட்டு சக வாழ்வுக்கான வசதிகள நல்கப்பட்டன.
12. "சூக" என சந்தை தெகுதிகளில் தற்போதைய "சுப்பர் மார்கட்"கள் பிரதி பலித்தன. சமூக ஒன்று கூடலுக்கான தளங்களும் காணப்பட்டன

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நகரத்திட்டமிடலின் குணாதிசயங்கள்

மரபுரீதியான ஐரோப்பிய நகரங்களில் காணப்படும் சந்தை தொகுதிகள், தேவாலயங்கள், தரிப்பிடங்கள் போன்று அவ்வப்பகுதி மக்களின் தேவைகளை மையப்படுத்தி பின்வரும் 4 பிரதான கூறுகளில் அடிப்படையில் முஸ்லிம் நகர்களும் வடிவமைக்கப்பட்டன

1. காலநிலையும் நிலவமைப்பும்
2. மதரீதியானதும் கலாசார ரீதியானதுமான நம்பிக்கைகள்
3. இஸ்லாமிய ஷரீஆச் சட்டம்
4. சமூக மற்றும் இனக்கூறுவகைகள்

9ம் ஆண்டு நூற்றாண்டில் ஸ்பெயினின் "குர்த்துபா" நகரம் கொண்டிருந்த கட்டமைப்பு வசதிகளை 700 வருடங்களாக லண்டன் , பரிஸ் கூட கொண்டிருக்கவில்லை BBC Rageh umar "An Islamic History of Europe" எனும் நிகழ்ச்சியில் கூறுகிறார்.

**ஐரோப்பாவில் அழகு சேர்க்கும் கட்டிடகளை அம்சங்களில் அஸ்திவாரம் முஸ்லிம் உலகே**

1. திட்டமிடப்பட்ட நகர வடிவமைப்பு Town Planning
2. Arabitectave
3. எழில் கொளிக்கும் 'ஆசி' வடிவங்கள்
4. vaults
5. கும்மட்டங்கள் Dome
6. மனாறாக்கள்
7. புத்தக சாலைகள் Book shops
8. பொது குளியல் தடாகங்கள் Puplic Baths
9. கூடாரங்கள் Tent
10. பூங்காக்கள் Gardens
11. செயற்கை உற்றுக்கள் Fountation

## பிரபஞ்சம் - UNIVERSE

## ASTRONOMY - வானியல்

"அவன் அல்லாஹ்தான் இரவு-பகல், சூரியன்-சந்திரன் யாவற்றையும் படைத்தான், அவை (சூரியன்-சந்திரன் வான்-நட்சத்திரங்கள், வான்பொருட்கள்) அவற்றின் ஒழுங்கின் வழியே நீந்திச் செல்கின்றன". அல்குர்ஆன் (21:33)-

முஸ்லிம்கள் வானியலிலும் கூட வரலாறு காணாத கண்டுபிடிப்புக்களை மேற்கொண்டுள்ளனர். உதாரணமாக பால்வீதி மண்டலத்திற்கு அப்பாற்பட்ட நட்சத்திரக் கூட்டம், சந்திரனின் சுழற்சி அசைவு, நவீன வானியலின் அடித்தளத்திற்கு வழிவகுத்த வானியல் உபகரணங்கள் போன்றவற்றைக் கூறலாம்.(வானியல் உபகரணங்கள் (உ ம்) Celestial Globes - வான் மண்டலம், Armillary Spheres, Universal Astrolabes &

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

SEXTANTS - சர்வதேச கோணத்தை அளக்கும் கருவி இது எல்லாம், 8ம் நூற்றாண்டில் முதலாவது வானிலை ஆராய்ச்சி நிலையத்தின் கண்டுபிடிப்போடும், துல்லியமான வானிலை அட்டவணையின் கண்டுபிடிப்போடும் ஆரம்பமானது.

முஸ்லிம்களின் 2ம் கடமையான நாளாந்த தொழுகையின் நேரங்கள் சூரியனின் நிலையில் தங்கி இருப்பதால் (அதாவது வைகறை, நண்பகல், பின்னேரம் சூரியனின் மறைவு), வானியல் அறிந்திருப்பது முக்கியமாகின்றது.

**Al Battani- அல்பத்தானி- (வானியல் சாஸ்திரி கணித மேதை)**

இவர் மேற்கத்தேய நாடுகளில் அல்பெத்தேஜினியல் என்று அழைக்கப்படுபவர். 929 CF இல் மரணித்தார்.

சேபியன் வானிலை அட்டவணையை (Sabian Table) எழுதியவர்.

இது பிற்கால வானியலின் எழுச்சிக்கு மாபெரும் செல்வாக்கு செலுத்தியது.

புதிய சந்திரன்களை / கோள்களினை காணக் கூடிய நேரத்தினை கணித்தார்.

பூமி சூரியனை ஒரு முழுச்சுற்று (Sidereal year) சுற்றி வரும் காலம், சூரிய கதியை(Solar year) வைத்து அளக்கும் ஆண்டளவு என்பவற்றையும் கண்டு பிடித்தார்.

கிரகணங்களையும் Parallax Phenomenon ஐயும் கண்டுபிடித்தார்.

இன்றைய கால திரிகோண கணிதவியலுக்கும் அவர் பெரும் பங்காற்றியுள்ளார்.

தொலமியின் விதிகளில் மாற்றங்களை கண்டுபிடித்தவர். இது தற்போதைய வானியலில் பெரும் செல்வாக்கு செலுத்துகின்றது.

கிரேக்க வானியல் சாஸ்திரி சூரியனை 65° நெட்டாங்கில் உள்ளதென கண்டுபிடித்ததை பொய்ப்பித்து 82° நெட்டாங்கில் இருப்பதை கணித்து இதனை சூரிய குடும்பம் அசைவில் உள்ளது என்பதை நிருபித்தார்.

**அல் பிருனி (Al Biruni)**

973-1048 காலப்பகுதியில் வாழ்ந்தவர்.

இவர் புவி தன்னைத்தானே ஒரு அச்சில் சுற்றுகிறது என்பதை கண்டுபிடித்தவர்.

புவியின் சுற்று வட்டத்தை கணித்தவர்.

உலகின் எந்தப் புள்ளியிலிருந்தும் மக்காவின் திசையை விஞ்ஞான ரீதியாக கண்டறிந்தவர்.

150 புத்தகங்களை எழுதியிருந்தாலும் அதில் 35 கிரந்தங்கள் தூய வானியல் புத்தகங்களாகும்.

அதில் 6 மட்டுமே எஞ்சியுள்ளதைக் தற்போதும் காணலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**இப்னு யூனுஸ் ibn yoonus**

1.4 மீட்டர் விட்டமுடைய Astrolabe (தொலை நோக்கியின் கண்டுபிடிப்புக்கு முந்தையதான மிகவும் முக்கியமான வானியல் கணிப்பீட்டு உபகரணம்)

இவர் பத்தாயிரத்திற்கும் மேற்பட்ட சூரியனின் நிலைகளை பதிவு செய்துள்ளார்.

**Al Fargani- அல் பர்கானி**

கலீபா அல் மஃமுனின் வானியல் சாஸ்திரிகளில் ஒருவர்

Astrolabe உபகரணத்தை அதன் கணிதத் தத்துவத்திற்கமைய வரைந்தவர். அதனால் மத்திய துண்டின் பிழையான பூகோள அமைப்பினை மாற்றியமைத்தவர்.

இவரின் மிகவும் பிரசித்தி பெற்ற புத்தகமான "Sun movement & Encyclopedia of star science on cosmography" 30 அத்தியாயங்களை கொண்டது.

இப்புத்தகம், புவியின் வசிக்கத்தக்க இடத்தினளவு, புவியின் கனபரிமானம், வான் பொருட்களுக்கும் புவிக்கும் இடையிலான தூரம் அவற்றின் கனபரிமானம் என்பவற்றை விலாவாரியாக விளக்குகிறது.

**Al Zarqali-அல் ஸர்க்காலி**

அஸார்குயேல் என ஐரோப்பாவில் அழைக்கப்பட்டவர்.

1087 இல் மரணித்தவர்.

Toleclan- வானியல் அட்டவணையை தயாரித்தவர்.

புவியின் எந்த ஒரு புள்ளியிலும் பயன்படுத்தக் கூடிய, "SAFIHA" என்றழைக்கப்படும் தரமுயர்ந்த Astrolabe ஐக் கண்டுபிடித்தவர்.

அதனோடு எண்ணிலடங்கா வானியல் விளக்கவுரைகளையும் நமக்கு வழங்கியவர்.

**Jabir Ibn Aflah - ஜாபிர் இப்னு அப்லாஹ்**

1145இல் மரணித்தார்.

வான் பொருட்களுக்கு இடையிலான விசையினை அளக்கின்ற எங்கும் கொண்டு செல்லக் கூடிய (வான் கோளத்தினை) (Celestial Sphere) இனை முதன் முதலாக உருவாக்கியவர்

கோள முக்கோணவியலில் பிரசித்தி பெற்றவர்ஸ்ரீ

**இப்னு ருஸ்த் - Ibn Rushd**

இவர் பிரசித்தி பெற்ற "கொடோபா" நகர வைத்தியரும், வானியல் சாஸ்திரியும் ஆவார்.

சூரியனில் உள்ள சுவடுகளை(sunspots) கண்டுபிடித்தவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**(Big heaving) observatories** -வானியல் ஆராய்ச்சி நிலையங்கள்

கலீபா ம.்.முன் (813-833 CE-பக்தாத்) காலத்தில் வாழ்ந்த ஒரு முஸ்லிம் வானியல் சாஸ்திரிதான் முதன் முதலாக, நிலையாகப் பொருத்தப்பட்ட பாரிய உபகரணங்களையும், வேலைத்திட்டங்களையும், அதற்கேற்ற விஞ்ஞான ஆய்வாளர்களையும் கொண்ட வானிலைஆராய்ச்சி நிலையமொன்றை நிறுவினார்.

கலீபா ம.்.முன் காலத்தில்தான் பக்தாத்தில் வரலாற்றின் முதன்முதல் உலகின் வானிலை ஆராய்ச்சி நிலையம் கட்டப்பட்டது என்பது மறுக்க முடியாத உண்மை எனலாம்..

அடுத்தடுத்தாக

1. அல்சம்மாசியா சதுக்கம்- பக்தாதிலும்
2. காசியுன் மலை – டமஸ்கஸிலும்
3. அடுத்து எல்லா முஸ்லிம் பிரதேசத்திலும்
4. மறாகா வா.ஆ.நி ஹுலாகு கானினாலும்
5. சமர்கண்ட் வா.ஆ,நி உலுக்பெக்கினாலும் நிறுவப் பெற்றன.
6. மாலிக்சாஹ் வா.ஆ.நி இஸ்பகானிலும
7. தப்றிஸ் வா.ஆ.நி கஸன் கானினாலும்

அமைக்கப்பட்டன.

வானிலை ஆராய்ச்சி நிலையத்தின் பிரதான வேலை வானிலை அட்டவணைகளை தயாரித்தலேயாகும்.

இது (Astronomical Tables) கோள்களின் நிலைகள், சந்திரனின் வெவ்வேறு தோற்றங்கள் நாட்காட்டி சம்பந்தமான ஆதாரங்களை கணிப்பதற்கு உதவுகின்றது.

இது வானியல் உபகரணங்களின் செயற்பாடு பற்றியும் விளக்கவுரைகளைக் கொண்டது.

01. கலீபா ம.்.முன் கால முதல் வா.ஆ.நி ஆனது சூரிய, சந்திர வானியல் அட்டவணைகளையும், நட்சத்திரப் பட்டியலையும் கோள்மண்டல அவதானங்களையும் அன்றைய காலத்திலேயே தயாரித்தது எனலாம்.

02. சம்மாஷியா வா.ஆ.நி ஆனது சூரியன் சந்திரன், கோள்கள் மற்றும் சில நிலையான நட்சத்திரக் கூட்டம் என்பவற்றை அவதானித்துக் கூறியது. இப்படியாகச் சேகரிக்கப்பட்ட தகவல்களை கிரந்தமாக தந்தவர் இப்னு அபி மன்சூர் என்ற பெறியியலாளர் ஆவார்.

இந்நூல் "முன்தஹான் ஸிஜ் / Verified Tables என அழைக்கப்படுகிறது

03. மறாகா வா.ஆ,நி

1263 இல் ஈரானில் இருந்து தப்றிஸ்- தெற்குப் பகுதி வரை நிறுவி அமைக்கப்பட்டது.

இன்னும் அதன் அடித்தள இடிபாடுகளை காணக்கூடியதாக உள்ளது.

40000ற்கும் மேற்பட்ட நூல்களை கொண்ட ஒரு வானியல் நூலகத்தையும் இது உள்ளடக்கியுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அத்தோடு பிரதானமாக புதிய வானியல் அட்டவணைகளை தயாரித்து வெளியிட்டது.

**Nasir Al-Din-Al Tush + Quth Al-Din Al Shirasi**

**நாஸிர் அல் டின் அல் தூஷ் + குத்ப அல் டின் அல் சிறாஸி**

இவர்கள் தான் வானவில் எவ்வாறு உருவாகின்றது என்பதற்கான உண்மையான காரணத்தை கண்டுபிடித்த இரு பிரசித்தி பெற்ற வானியலாளர்கள் ஆவார்கள்.

முதலாமவர்- இல்கனைட் வானியல் அட்டவணைகளை தயாரித்ததோடு மட்டுமல்லாது, நூற்றுக்கணக்கான ஆண்டுகளாக வானில் தென்படுகின்ற நிலையான நட்சத்திரக் கூட்டப் பட்டியலை தயாரித்தவரும் ஆவார்.

மறாகாவை சேர்ந்த வானவியலாளர் ஒருவர் சீனாவுக்கு அனுப்பப்பட்டு அங்கு வானியல் உபகரணம் ஒன்றை உருவாக்குவதற்கு உதவினார் என்பது வரலாற்று உண்மை.

**உலுக்பெக் மன்னர்/ சக்கரவர்த்தி.**

15 ம் நூற்றாண்டில் திமுரிட் சாம்ராஜ்யத்தை ஆண்டவர்.

இவரின் ஆட்சி மத்திய, தென்மேற்கு ஆசியாவரைக்கும் பரவியது.

இவர் ஒரு சக்கரவர்த்தி மட்டுமல்லாது வானியலும் கணிதவியலும் கற்ற மேதை ஆவார்.

4. மூன்று மாடிகளை கொண்ட சந்திர, சூரிய, கோள் ஆராய்கின்ற வா.ஆ.நிலையத்தை சமர்கண்டில் நிறுவியவர்.

நீண்டகாலம் நிலைக்கப்பெற்ற ஒரு ஆராய்ச்சி சாலையாகவும் வானிலை ஆராய்ச்சி நிலையங்களுக்கெல்லாம் ஒரு இலச்சினையாகவும் பாரிய, மிக உயர்ந்த, தரமான வானியல் உபகரணங்களைக் கொண்ட ஞாபகார்த்த கட்டிடமாகவும் சமர் கண்ட வா.ஆ.நிலையம் பிரசித்தி பெற்றது.

உதாரணம்

இதன் Meridian ARC இன் ஆரை 50m இஸ்தான்புல் அயசோபா பள்ளிவாயலின் கூரையின் உயரத்திற்கு ஒப்பானது.

கோணக் கருவி- துல்லியமாக கோணங்களை அளக்கக் கூடியது. "பக்ரி கோணமானி"(Fakhri Sextant) 40.4m ஆரையைக் கொண்டது.இதுவே உலகின் மிகப் பெரிய கோணமானியாகும்.

உலுக் பெக் அரசின் வானியல் ஆராய்ச்சியானது மிகவும் துல்லியமானதும், மிகச் சரியானதாகவும் இருந்தது.

உதாரணம்

Stellar Year –எனப்படும் வருடமானது அவரின் கணக்குப் படி 365 நாட்களும் 6 மணித்தியாலங்களும் 10 நிமிடங்களும் 8 செக்கன்கள் அடங்கியதாகும்.

University of Peradeniya
18 MAY 2015
LIBRARY

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்போதைய கணக்குப் படி இது 62 செக்கன்கள் மட்டுமே கூடுதலானது என்றால் எவ்வாறு துல்லியமாக கணக்கிடப்பட்டுள்ளது என்பது பாராட்டுக்கும் வியப்புக்கும் உரிய விடயமாகும்.

**தக்கி அல்டின் -வானியல் மேதை**

முக்கியத்துவமிக்க முஸ்லிம் விஞ்ஞானி ஆவார்.

16 ம் நூற்றாண்டில் மிகப் பாரிய ஒரு வா.ஆ.நிலையத்தை இஸ்தான்புல்லில் உருவாக்கினார்.

இஸ்தான்புல்லின் புதிய மன்னராகிய சுல்தான் 3ம் முறாத் என்பவரே அந்த **வானிலை ஆராய்ச்சி நிலைத்தை** நிறுவுவதற்கு பொருளாதார ரீதியாக உதவியவர்.

இன்றைய நவீன **வானிலை ஆராய்ச்சி நிலையம்** போன்று இரவு வானை தடையின்றி அவதானிக்கக் கூடிய ஒரு **வானிலை ஆராய்ச்சி நிலையத்தினை** இஸ்தான்புல் மலையுச்சியில் நிறுவினார். இது இரு கட்டிடங்களை கொண்டதாயிருந்தது.

ஒன்று வானியல் நூலகமாகவும், தொழிநுட்பவியலாளர்கள் இருப்பிடமாகவும் அமைந்தது, அடுத்த கட்டடம், தகி அல்டின் தாமாகவே உருவாக்கிய அறிவுறுத்தக்கூடிய வானியல் உபகரணங்களின் தொகுதியையும் கொண்டிருந்தது.

உதாரணம்

1. உருப்பெருத்த பாரிய Armillary Sphere எனும் உபகரணமும் கோள்களில் நிலையையும் வேகத்தையும் கணிப்பிடும்.
2. கடிகார இயந்திரம். Mechanical Clock

அது மட்டுமல்லாது தகி அல்டின் அளவில்லாத வானியல், கணிதவியல் பொறியியல் நூல்களின் கர்த்தாவாகவும் விளங்கியவர்.

**CORDOBAN கோடபன்- வானியல் மேதை**

முஸ்லிம்கள் உலகின் முதலாவது வா.ஆ.நி உருவாக்கியது மட்டுமல்லாது சரித்திரத்தின் முதலாவது செயற்கை கோள் மண்டலத்தையும் உருவாக்கிய பெருமையும் அவர்களையே சாரும்.

19ம் நூற்றான்டில் கோடபன் எனும் வரலாற்று மேதைதான் வா.ஆ.நி போன்றல்லாது நட்சத்திரங்கள், கோள்கள் வான் பொருட்கள் போன்ற உருவங்களை கொண்ட Planetarium எனப்படுகின்ற ஒரு செயற்கை கோள் மண்டல அறையை உருவாக்கியுள்ளார்.

**Ibn Firnas இப்னு பிர்னாஸ்**

கண்ணாடியாலான சுவர்களை கொண்ட செயற்கை கோள் மண்டலத்தினை தனது வீட்டிலேயே ஆக்கிக் காட்டியவர். இதனால் இரவு வானத்தை தெளிவாகக் காட்டியதோடு மட்டுமல்லாது செயற்கை இடி மின்னலையும் அத்தோடு சேர்த்தவர்.

10 MAY 2015

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்றைய செயற்கை கோள் மண்டலத்தை ஒத்த‌தான செயற்கை கோள் மண்டலம் ஆகும்.
அத்தோடு இவர் அளப்பெரிய எண்ணிலடங்கா கண்டுபிடிப்புக்களை செய்தவர்.
உதாரணம்
பறக்கும் இயந்திரத்தின் (விமானம்) முன்னோடி, இதனால் மனிதர்களை வானில் பறக்கச் செய்தவர்.
Crystal –பளிங்கு படிகத்தை கண்டு பிடித்தவர்.
கோள் மண்டலம்
கவிதை, இலக்கியம், வானியலில் தேர்ச்சி பெற்றவர்.
கீரீஸ்.'.கிரேக்க மொழியில் புலமை பெற்றவர், அதனால் கிரேக்க தத்துவ, இசை, கையெழுத்துப் பிரதிகளை மொழி பெயர்த்தவர்.
துரதிஷ்டவசமாக அவரின் திறமைகளின், கண்டுபிடிப்புக்களின் எச்சங்கள் அருகிவிட்டன அழிந்து விட்டன.

### 1. Astronomical Instrument/ விண்ணியல் உபகரணங்கள்

முஸ்லிம்கள் விண்ணியல் உபகரணங்களின் கண்டுபிடிப்புக்கு முன்னோடிகளாக திகழ்கின்றனர்.
பாரிய உபகரணங்கள் வடிவமைக்கப்பட்டதால் தவறான தகவல்களினை பெறும் வீதங்கள் குறைக்கப்பட்டன.
டமஸ்கஸின் வி.ஆ.நி- கோணமானியானது. 20 அடி நாற்கோனியையும் 56 அடி அறுகோணி(Sextant) அளவையும் கொண்டது.(10 கார்களை நீட்டாக அடுக்கியது போன்றது)
மறாகா வி.ஆ.நி- பெரிய Armilliary Spheres ஐயும் Astro Labes கொண்டதாயிருந்தது.

**ஜாபிர் இப்னு அப்லா- வானியல் மேதை**
1145 நூற்றாண்டில் மரணித்தார்.
கொண்டு செல்லக் கூடிய தூக்கிச் செல்லக் கூடிய (Portable Celestial Sphere) வான் கோளத்தினை முதன் முதலாக உருவாக்கியவர்.
இது இரு வான் பொருட்களுக்கு இடையிலான தூரத்தையும் விசையையும் அளக்க பயன்படுகிறது.

**அல்பத்தானி**
Celestial Globes உருவாக்கத்திற்கு காரணகர்த்தா.

**அப்த் அல் றஹ்மான் அல் சூபி**
903 இல் பிறந்தார்.
முஸ்லிம் நாடுகளிலும் ஐரோப்பாவிலும் இப்போது பிரசித்தி பெற்றுள்ள வான் கோளத்தின் உருவாக்கத்திற்காக நட்சத்திரக் கூட்ட உருவங்களைப் பற்றிய (Constellation Images) ஆராய்ச்சி கட்டுரைகளை தாபித்தவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்துக் கவிதை (கலாசாரக் கண்காட்சி)

எம்.எச்.எம். றஹீம்



பிஞ்சுப் பருவத்தில் கண்கள் கண்டவை
பிரிய மூத்தம்மா கூறிடக் கேட்டவை
கண்முன் திரட்டிக் காட்டிய காட்சியை
கண்டு கண்டு நாம் துய்த்த மகிழ்ச்சியை
என்ன வென்றுரைப்பேன்?
எப்படியுரைப்பேன்?.....

காவல் வீரரை ஒத்த மரத்தூண்கள்
களிமண் ஓலைக் குடிசையில் தொடங்கி
ஆவல் கொள்ளும் பான்மையில் அமைந்த
அத்தனை காட்சியும் அருமையோ அருமை

இன்றைய சிறுவர் இளைஞர் யுவதிகள்
இருகண் புருவம் உயர்த்தி வியந்த
அன்றைய காலக் காட்சி கலாசாரம்
அனைத்துமே அறிந்தார் அகம்மிகமகிழ்ந்தார்.

சீனடி சிலம்படி குத்துவாள் வெட்டு
சிந்தையை கவரும் தீப்பந்த வீச்சு
காலடியே கொண்டு காட்டிய காட்சியை
கண்கள் மறக்குமோ?.... கண்கள் மறக்குமோ?....

விஞ்ஞான முன்னோடிகள் எம் முஸ்லிம்கள்
விஞ்ஞான வித்துக்கள் எம் முஸ்லிம்கள்
வானியல், பௌதீக உண்மைகள் என்று
வழங்கிய இவர்களின் 1001 கண்டுபிடிப்புகள் - வரலாறால்
என்றும் மறையாத உண்மை

வர்த்தகர் என்ற முஸ்லிம்கள் அடைமொழி
இன்னாரின் ஆய்வைப் பார்த்தோருக்குப் புரியும்
வர்த்தகரல்லர் முஸ்லிம்கள், வாழும் மனிதர்க்கு
வாழ்வைக் கொடுத்தவரின்
கண்டு பிடிப்புகள் காலாய் அமைந்தன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பழைமை பண்பாடு கலாசாரம் வரலாறு
பற்பல விந்தைப் பொருட்களின் காட்சிகள்
அலையெனத் திரண்ட அனைவரும் பார்த்திட....
அனைத்தையும் ஒன்று திரட்டிய முயற்சியோ
விலைமதிப்பற்றவை... விலைமதிப்பற்றவை...
வியக்கின்றேன் இவர்களை, வியக்கின்றேன் இவர்களை

எங்கள் செயலக செயலர் அவர்கள்
இரரோடிணைந்த நற்சிந்தனையாளர்கள்
இரவாய்ப் பகலாய் உழைத்திட்ட தொண்டர்
இன்னும் பல்வகைத் தொண்டுகள் புரிந்தோர்
அனைவர்க்கும் எங்கள் ஆழ்மன நன்றிகள்
அனைவர்க்கும் எங்கள் ஆழ்மன நன்றிகள்

மதியைச் சுற்றிய நட்சத்திரங்கள் நீர்...
புதிய தலைமுறை புரிந்திடா காட்சிகள்
எங்கள் மண்ணினில் கொண்டுதான் கொட்டினீர்
தங்கமனங்களே! தங்கமனங்களே! உங்கள் சேவையும்
எங்கள் செயலகத் தலைவரின் முயற்சியும்
மக்கள் மனங்களில் மறையுமோ? என்றும்
யாவரும் வாழ்கவே! நலமுடன் வாழ்கவே...

**கிழக்கு மாகாண கலை இலக்கியப் பெரு விழா - 2014**



நாட்டார் பாடல் - கனிஷ்ட பிரிவு
**(பிரதேச மட்டம்: 1ம் இடம், மாவட்ட மட்டம்: 1ம் இடம்)**
முஹம்மது தௌபீக் பாத்திமா ஹனானா, தரம் - 09
மட்/மம/ அல்-அமீன் மகா வித்தியாலயம்

**கிழக்கு மாகாண கலை இலக்கியப் பெரு விழா - 2014**



கவிதை எழுதுதல் - சிரேஷ்ட பிரிவு
**(பிரதேச மட்டம்: 1ம் இடம்)**
செல்வி. எம்.ஜே.ஏ. அஃப்ரோஸ் ஜமீரா
மட்/மம/ மிரா பாலிகா தேசிய பாடசாலை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தண்ணிவெடி (மருதமைந்தன்)

அது மார்கழி மாதம். பருவகால மழையின் அட்டகாசம் ஊரையே முழ்கவைத்துவிட்டது. காலை முதல் பாடசாலை விடுதிக்குள் மனைவியுடன் அடைபட்டுக்கெண்டிருந்த நான் பொறுமையை இழந்து அந்தப் பழைய குடையை விரித்தவண்ணம் அவ்வூர்ச் சந்தியை நோக்கிச் செல்ல ஆயத்தமானேன். இதனைக் கண்ட மனைவி, 'இந்தாங்க, சந்தியிலே கருவாடுகள் கிடந்தா வாங்கி வாங்க' கறிபுளி ஒண்டும் வரமாட்டுது. அதோட ரெண்டு பக்கட் பிஸ்கட்டும் வாங்கி வாங்க' என்று கூறினாள். மனைவியின் வார்த்தைகளைச் செவிமடுத்தவனாக மழைக்குள் இறங்கி நட்க்கலானேன்.

பலத்த காற்றுடன் பெய்துகொண்டிருந்த பாரிய மழையை தாங்கிக்கொள்ள முடியாத அந்தக்குடை என் உடல் முழுவதையும் நனையச் செய்து என்னை நடுங்க வைத்துவிட்டது. தலையை மட்டும் காப்பாற்றிக்கொண்டு நசீர் நாநாவின் தேனீர்க் கடைக்குள் நுழைந்தேன்.

'என்ன மாஸ்டர் இந்த மழைக்குள்ள பழைய கொடையையும் பிடித்துக் கொண்டு நனைஞ்சுபோய் வாறீங்க? வாங்க, வாங்க, உள்ளே வந்து முதலிலே சாறனைக் களைந்து இந்தச் சாறணை மாத்துங்க' என்றவாறு அவருடைய சாறன் ஒன்றை எடுத்து நீட்டினார். அவர் நீட்டிய சாறனை வாங்கிக்கொண்ட நான் அதனை எடுத்துக்கொண்டு குசினிப்பக்கம் சென்று நனைந்திருந்த சாறனைக் களைந்து அங்கு கட்டப்பட்டிருந்த கயிற்றுக்கொடியில் போட்டுவிட்டு நசீர் நாநா கொடுத்த சாறனை அணிந்துகொண்டு வெளியே சந்தேன்.

நசீர் நாநா நீட்டிய ஆவி பறக்கின்ற தேனீரைப் பெற்றுக்கொண்ட நான் கண்ணாடிப் பெட்டிக்குள் இருந்த சீனி பனிஸ் ஒன்றையும் எடுத்துக் கடித்த வண்ணம் முன்னால் போடப்பட்டிருந்த வாங்கில் அமர்ந்தேன். மழை தொடர்ந்து பெய்துகொண்டே இருந்தது.

நான் இந்த ஊர்ப் பாடசாலைக்கு எங்களது ஊர் பாராளுமன்ற உறுப்பினரால் அவரது எதிராளிக்கு நான் வேலை செய்த காரணத்துக்காக 'தண்ணியில்லாக் காட்டுக்குப் போவென அனுப்பு வைக்கப்பட்டவன். ஆனால் நான் இந்த ஊரை ஒரு சுவர்ண பூமியாகக் கண்டதால் மனைவியையும் அழைத்து வந்து இரண்டு வருடங்களாக அதிபராகக் கடமையாற்றுகிறேன். போக்குவரத்து லைற் வசதிகள் இல்லாவிட்டாலும் ஏனைய தொழில் வசதிகள் சாப்பாட்டு வசதிகள் நிறையக் காணப்பட்டன. பால்,தயிர்,முட்டை, தேன், இறைச்சிவகைகள் தாராளமாகக் கிடைத்ததால் வாழ்க்கை சந்தோசமாவே கழிகிறது.

தொடர் மழையைச் சகித்துக்கொள்ள முடியாதிருந்த எனக்கு ஏதாவதொன்றில் ஈடுபட்டுக் காலத்தைப் போக்கவேண்டும் போல் இருந்தது. அவ்வேளையிற்றான் 'தண்ணி வெடி' ஞாபகம் எனக்கு திடீரென ஏற்பட்டது. வெள்ளம் ஏற்படும் காலங்களில் அவ்வூர் மக்களிற் சிலர் சேர்ந்து தோணிகளிற் சென்று காடுகளிற் தத்தளித்து வருகின்ற மான், மரை போன்றவற்றை வேட்டையாடிக்கொண்டு வந்து ஊர்மக்கள் மத்தியில் பகிர்ந்தளித்து கறிப் பிரச்சினையை நிவர்த்தி செய்வார்கள். இப்படி தோணியிற் சென்று வேட்டையாடுவதை அம்மக்கள் 'தண்ணி வெடி' என்று சொல்வார்கள்.

தண்ணி வெடி ஞாபகம் ஏற்பட்டதும் நானும் உஷாரானேன். தேனீர்க்கடை நசீர் நாநாவுடன் கலந்தாலோசித்துக்கொண்டு தண்ணிவெடியில் நன்கு பரிச்சயமான தாவூத்ஷாவை சந்திக்க அவர் வீட்டை நோக்கி வெள்ளைத்தையும் பொருட்படுத்தாது செல்லலானேன்.

வெள்ளத்தினூடே மிகமிக கஷ்டப்பட்டு நடந்து வந்த நான் தாவூத்ஷாவின் வீட்டை அடைந்ததும் தாங்கொணாச் சந்தோசத்துடன் படலையைத் தள்ளிக்கொண்டு உள்ளே சென்றேன். முதலில் என் வருகையைக் கண்ட

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாவூத்ஷாவின் மனைவி 'வாங்க சேர்' என வரவேற்றபடி திண்ணையில் படுத்திருந்த கணவனை அசைத்து, 'இஞ்சங்க, ஸ்கூல் சேர் வந்திருக்காங்க எழும்புங்க' என்னாள்.

கண்விழித்த தாவூத்ஷா என்னைக் கண்டதும் 'வாங்க சேர், வாங்க. இந்த வெள்ளத்துக்குள்ளே வந்திருக்கிறீங்களே? இப்படி உட்காருங்க' என்றபடி அவர் முன்னால் கிடந்த பாயை எடுத்து விரித்துப் போட்டார். நானும் அமர்ந்துகொண்டேன்.

தாவூத்ஷாவின் வீடு அமைந்திருந்த இடம் மேடாக இருந்ததால் வீட்டினுல் வெள்ளம் ஏறாது, வீட்டைச் சுற்றி நீர் தேங்கி நின்றது.

உங்க பகுதியில் வெள்ளம் கடுமையாக இருக்குமே? அது பள்ளப் பகுதியாச்சே? என விசாரித்தவர், ஏன் சேர் இந்த மழை நேரத்தில் வந்திருக்கிறீங்க? எனக் கேட்டார்.

'இன்றைக்கெல்லாம் விடுதிக்குள்ளேயே முடங்கிக் கிடந்த நான் நசீர் நாநாவின் தேயிலைக்கடைக்கு போனேன். அங்கு வச்சுத்தான் தண்ணிவெடிக்குப் போகலாம் என்ற எண்ணம் வந்திச்சு அதனால்தான் உங்களுக்கிட்ட ஆலோசிக்கலாம் என்று வந்தேன். என்றேன்.

'நானும் நேத்துக் கூட யோசிச்சேன்தான். ஆனா ஆக்கள்தான் செட்டுப்படல, நீங்க விரும்பினா நாளைக்குக் காலத்தாலே போவம்' என்றார்.

'தோணி யாருகிட்ட இருக்கு?' என வினவினேன்.

"தோணிக்கா பஞ்சம், நம்முட உதுமான் கண்டக் கூப்பிட்டா தோணியோட வருவாரு" என்று கூறியவர், "இஸ்மாலெவ்வையையும் கூட்டிகிட்டா நல்லது, அவன் நல்லா இறைச்சி வேல செய்வான். சரி சரி நான் அவங்கள செட் பண்ணுறன் நீங்க ஒரு பத்து பதினைஞ்சு தோட்டாவும் நல்ல கத்தி ஒன்றும் எடுத்துகிட்டு வாங்க, எனக்கிட்டேயும் தோட்டா இருக்கிறது போதாது" என்றார்.

" சரி சரி எடுத்துக்கொண்டு வாறன்" எனக்கூறிய படி எழுந்த என்னை தாவூத்ஷாவின் மனைவி பரிதா கொண்டுவந்து நீட்டிய தேனீர் சற்று தாமதமாகிவிட்டது.

அடுத்த நாட்காலை தோட்டாக்களையும் கத்திகளையும் எடுத்துக்கொண்டு தாவூத்ஷாவின் வீட்டை அடைந்தேன். அங்கே உதுமான்கன்டு இஸ்மாலெவ்வை ஆகிய இருவரும் தாவூத்ஷாவுடன் என்னை எதிர்பார்த்துக்கொண்டிருந்தனர். மூவரும் தோணிமீது ஏறினர். நானும் அவர்களுடன் சேர்ந்து ஏறிக்கொண்டேன்.

தோணியின் முன்பக்கத்தில் ஏறிய தாவூத்ஷா துவக்கை ஆயத்தமாகப் பிடித்தபடி இருந்தார். உதுமான்கன்டு அணியத்தில் இருந்தபடி தோணியை வலித்துக்கொண்டிருந்தார். தோணி வெள்ளத்தில் மிதந்தபடி பற்றைகள் கொடிகள் முதலியவற்றை ஊடறுத்துச் சென்றுகொண்டிருந்தது.

பத்து நிமிடங்கள் சென்றிருக்கும் முன்னால் இருந்த தாவூத்ஷா எழுந்து நின்றவாறு துவக்கை நீட்டிப் பிடித்தவராக, "தோணியை நிப்பாட்டு, மரை ஒன்று வருவது போல் இருக்கு" என்றார். உடனே உதுமான்கண்டு சவளை தரையில் பாய்ச்சி தோணியை நிறுத்திப் பிடித்துக்கொண்டார். நாங்கள் ஆவலோடு நாலா பக்கமும் கண்களைச் சுழலவிட்டோம். அங்கு எந்தவித மிருகமும் வருவதாகத் தெரியவில்லை. எனக்கு முன்னால் இருந்த இஸ்மாலெவ்வையின் முதுகைச் சுரண்டி

"மரை எங்கே வருகுது?" என மெதுவாய்க் கேட்டேன்.

"தண்ணிக்குள்ளே நடந்துவரும் சத்தத்தை மோப்பம் புடிச்சி சொல்லுறாரு போல" என மெதுவாகச் சொன்னார் அவர்.

"என்ன ஆச்சரியம், அவர் சொன்னதுபோல பெரியதொரு மரை தண்ணிரை ஊடறுத்து முன்னால் சற்றுத் தூரத்தில் வந்துகொண்டிருந்தது. தோணியை பக்கத்திலிருந்த பற்றைக்கு அப்பால் கொண்டு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போகுமாறு கூறிய தாவூத்ஷா துவக்கை முறித்து தோட்டாவை உட்செலுத்திக்கொண்டு அதை நீட்டியபடி ஆயத்தமாக நின்றார்.

தண்ணீரினூடே தத்தளித்துக்கொண்டு முன்னோக்கி வந்த மரை சற்று தூரத்தில் காணப்பட்ட உயர்வான திடலென்றைக் கண்டதும் அதனை நோக்கிச் சென்றது. திடலில் ஏறிக்கொண்ட மரை தனது உடலை சிலிர்த்தி உடலில் பட்டிருந்த நீரை வெளியாக்கிவிட்டு தனது கொம்புகளினால் உடலின் இருபக்கங்களையும் சொறிந்து கொண்டு வானத்தை அண்ணார்ந்து பார்த்தபடி நின்றது. இதுதான் தருணமென ஊகித்துக்கொண்ட தாவூத்ஷா மரையைக் குறிவைத்து துவக்கின் விசையை விரலால் நசித்துவிட்டார். பாய்ந்து சென்ற சன்னங்கள் மரையின் முன்பக்கச் சந்தைத் தாக்கியதால் மரை தடாரெனத் தரையில் வீழ்ந்தது.

சற்று தாமதித்த தாவூத்ஷா "மயக்கம் தெளியும் முன்னே 'தக்பீர்' செய்ய வேண்டும் எனக் கூறியவாறு கத்தியை எடுத்துக்கொண்டு மரையை நோக்கி ஓடினார். நாங்களும் அவரின் பின்னால் ஓடிச்சென்றோம். சாய்ந்து கிடந்த மரையின் படரிப் பக்கமாக நின்ற தாவூத்ஷா கத்தியை கையில் எடுத்தவாறு அதன் கழுத்தைப் அறுப்பதற்காக குனிந்தார். அதே நேரம் எதிர்பாராத விதத்தில் தனது நாலுகால்களையும் வேகமாக உதறியவண்ணம் கொம்பையும் பலமாக ஆட்டிக்கொண்டு எழுந்து நின்ற முற்பட்டது மரை. அவ்வளவுதான் வேகமாக ஆட்டிய கொம்பினால் தாக்குண்ட தாவூத்ஷா சற்று தூரத்தே வீசப்பட்டு தண்ணீருக்குள் போய் விழுந்தார்.

நாங்கள் மூவரும் ஓடிச்சென்று வீழ்ததுகிடந்த தாவூத்ஷாவை தூக்கி நிமிர்த்தினோம். மரையின் கொம்பின் தாக்கத்தால் அவரது நெஞ்சில் ஏற்பட்டிருந்த பாரிய காயத்திலிருந்து 'குபு குபு' என இரத்தம் கொப்பளித்து வழிந்துகொண்டிருந்தது.

மூவரும் எங்களது சாரங்களை களைந்து உள்ளாடையுடன் நின்றவண்ணம் இரத்தத்தைத் தடுப்பதற்காக காயத்தின் மீது வைத்துக் கட்டினோம். ஆனால் இரத்தம் பாய்வது நின்றபாடில்லை. தாவூத்ஷாவைத் தூக்கி வந்து தோணியில் வைத்து தாங்கிய படி ஊரை நோக்கி விரைந்தோம்.

வழி நெடுகிலும் வலியினால் அவதிப்பட்டுக்கொண்டிருந்த தாவூத்ஷா ஊருக்கு சற்றுத் தொலைவில் வைத்து மூர்ச்சையாகிவிட்டார். அதன்பின் அவரிடம் எந்தவித அசைவுமே தென்படவில்லை.

பயத்துடன் வீட்டை அடைந்த எங்களைக் கண்டு ஓடிவந்த அவரது மனைவி விசயத்தை அறிந்து கீழே விழுந்தவண்ணம் அழுது கூக்குரல் இட்டாள். அக்கம் பக்கத்தாரும் கூடிவிட்டார்கள்.

"என்ற புருஷன இந்த மாஸ்டருதான் கொன்று போட்டாரு. சும்மா இருந்த என்ற புருஷனக் கூட்டிகிட்டுப்போய் கொலை செஞ்சு போட்டாரு" எனச் சத்தமிட்டு அழுத தாவூத்ஷாவின் மனைவி, என்னிடம் ஓடிவந்து எனது நெஞ்சில் இரு கைகளாலும் அடித்தபடி "நீதான் என்ற புருஷனின் மௌத்துக்கு காரணம், நீதான் என்ற புருஷனைச் சாவடித்துப் போட்டாய், உன்னை நான் சும்மா விடமாட்டேன்" என்று சத்தமிட்டவாறு ஓடிச்சென்று ஒரு மண்வெட்டியைத் தூக்கிக்கொண்டு என்னை நோக்கி ஓடிவந்தாள். கூடி நின்றவர்கள் அவளைத் தடுத்து நிறுத்தி ஆறுதல் சென்னபோதும் அவள் எதனையும் செவிசாய்க்காது என்னையே அவளது புருஷனின் சாவுக்கு காரணம் காட்டி தரையில் விழுந்து அழுது புலம்பினாள். எனக்கு அவள்மீது அநுதாபமாகவே இருந்தாலும் முழுக்க முழுக்க அவள் என்மீதே பழியைப் போடுவதை என்னால் சகிக்க முடியாமலும் இருந்தது. என்றாலும் உணர்வுகளை அடக்கிக்கொண்டு பொறுமை காத்தவண்ணம் ஒரு ஓரமாக நின்றேன். எனது உள்ளமும் என்மீதே குற்றம் சாட்டுவது கோண்ட பிரேமையோடும் தாங்க முடியாத வேதனையுடனும் மன அழுத்தத்தோடு தடுமாறிக்கொண்டிருந்தேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'மாஸ்டர் நீங்க இதப்பத்தி ஒன்னும் யோசிக்காதிங்க. அவள் புருஷனின் மௌனத்தைத் தாங்கிக்கொள்ள முடியாம சத்தம் போடுகிறாள். தயவு செய்து நீங்க இங்க நில்லாம ஊட்டுக்குப் போய் உடுப்ப மாத்திக்கொண்டு பள்ளிவாசலுக்கு வாங்க. நாங்க மய்யத்தைக் குளிப்பாட்டி கபன் செய்து பள்ளிவாசலுக்கு தூக்கிகிட்டு வாறம்'' என அவ்வூர்ப் பெரியவர்கள் என்னிடம் கேட்டுக்கொண்டதால் நானும் அதற்கிசைந்து விடுதியை நோக்கி நடந்தேன். பாரிய தவறைச் செய்துவிட்டது போன்ற மனவழுத்தம் என்னைத் தாக்கிக்கொண்டே இருந்தது.

நான்கு ஐந்து நாட்கள் இதே நினைவினால் உன்னவோ உறங்கவோ முடியாத நிலையில் தத்தளித்தேன். எனது பரிதாப நிலைகண்டு என் மனையாளும் பாரிய வேதனைக்குள்ளானாள். நிம்மதியாக இருக்க முடியாது தவியாய்த் தவித்தேன். எனது மனைவியின் ஆறுதல் மொழிகள் கூட என்னால் ஏற்றுக்கொள்ள முடியவில்லை.

ஐந்தாவது நாள், காலை நேரம் கட்டிலில் சாய்ந்தவண்ணம் கவலையில் மூழ்கிய படி சிந்தித்துக்கொண்டிருந்தேன். அவ்வேளை என் பக்கத்தில் வந்து அமர்ந்துகொண்ட என் மனைவி எனது தலையை வருடியவண்ணம் "இப்படி கவலைப்பட்டுக்கொண்டிருப்பதில் அர்த்ததமில்லை. தயவு செய்து என் வார்த்தைகளைக் கொஞ்சம் கேளுங்க. எழுந்து குளித்துவிட்டு உடுப்பை மாத்திக்கொண்டு என்னுடன் வாங்க. நாம் இருவரும் ஒரு இடத்துக்குப் போய்வருவோம்'' என்றாள்.

"எங்கே ஏன் போக வேனும்?'' எனக்கேட்டேன்.

"தயவுசெய்து அதுபற்றி ஒன்றும் கேட்காதிங்க. அல்லாஹ்வுக்காக என்னுடன் வாருங்கள்'' என அழைத்தாள். அவளுடைய பரிதாப நிலையைப் பார்த்துச் சகித்துக்கொள்ள முடியாத நான் அவளுடன் செல்வதற்கு சம்மதித்தேன்.

அவள் நெரடியாக தாவூத்ஷாவின் வீட்டை நோக்கி அழைத்துச் சென்றது எனக்கு ஆச்சரியமாகவே இருந்தது. என்றாலும் ஒன்றுமே கேட்காது அவளைத் தொடர்ந்து சென்றேன்.

அங்கே ஊர்த்தலைவருடன் பள்ளிவாசல் கதீப் உட்பட பல பெரியார்கள் காணப்பட்டனர். என்னைக்கண்டதும் 'வாங் சேர்' என மரியாதையாக அழைத்து இருக்கச் செய்தனர். எதையுமே தெரிந்துகொள்ளாத நான் பரக்கப்பரக்க முழித்தபடி ஊர்த் தலைவரின் பக்கத்தில் அமர்ந்தேன்.

"சேர்'' என அழைத்த ஊர்த் தலைவர் என்னைப் பார்த்து "மௌத்தாப்போன தாவூத்ஷாவின் பெஞ்சாதியை அவளுடைய இத்தாக்கடமை நாலுமாசம் பத்து நாள் முடிந்த பிறகு நீங்க அவவை ரெண்டாம் தாரமாகக் கல்யாணம் முடிக்கிற ஒரு யோசனையை உங்க மனைவி சொல்லுறா. அதிலே உங்கட சம்மதத்த அறியத்தான் கூட்டிவரச்சொன்னோம். நீங்க என்ன சொல்லுறீங்க? எனக் கேட்டுவிட்டு எனது முகத்தைப் பார்த்தார்.

எதிர்பாரத செய்தியால் அதிர்ந்து போன நான் நிமிர்ந்து எனது மனைவியின் முகத்தைப்பார்த்தேன். அவள் புன்சிரிப்பைச் சிந்திய வண்ணம் 'ஓம்' என்று சொல்லுங்க நானும் அவளை எனது தங்கையாக ஏற்றுக்கொள்வேன். இது சத்தியம் என்று கூறியவள், "நீங்க கட்டாயம் ஏற்றுக்கொள்ளுவீங்க என்ற நம்பிக்கையாலேதான் இந்த யோசினையைச் சொன்னேன்.'' என்றாள்.

எனது மனக்கஷ்டத்திலிருந்து என்னைக் காப்பாற்றுவதற்காக என் மனைவி எடுத்த புத்திசாலித்தனமான முடிவை வியந்த நான் அங்க கூடியிருந்தவர்களையும் மறந்து எழுந்தோடிச் சென்று கட்டியனைத்தபடி அவளை முத்தமிடலானேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எனக்கொரு தாய் வேண்டும்

[காத்தான்குடி பாத்திமா]

உம்மா...
உங்களுக்குள்ளாகி உங்களில் கலந்து
உருவான உங்கள் உதிரத் துளி...
உங்கள் மகன் பேசுகின்றேன்.
ஏனிந்த பிடிவாதம்...
கூனலாய்க்குறுகலாய்த் துடிக்கும்
உங்களது துடிப்பை
உற்றுருக... என் இதயத்தில் வலுவில்லையம்மா...

உங்கள் ஹீன அலறலை...
இன்னும் கேட்க இயலாதும்மா...
தாயே! நானெனப்பாடுபட்டேனும்
இறைவன் உதவியால் -
எட்டுலெட்சம் சேர்த்துவிட்டேன்
என் தாய் இதயம் பிளந்து அடைப்பெடுத்து
இனிய தாயின் துயர் களைவேன்.
வீடு வளவு ஆவண அடைமானம்
வேண்டியவரை முயற்சித்து
நிதி சேர்த்து என் தாயை...
உம்மா புறப்படுங்கள் இறைவன்துணை.



மகனே... என் ஆருயிர் மகனே...
உன்னைச் சுமக்கும் இந்த இதயத்தில்
எண்ணற்ற கோளாறு என்று விட்டனர்
வைத்திய வித்தகர்கள்
அதைப்பிளந்து அடைப்பெடுத்தால்
ஆகுவது என்ன? மகன் சொல்லுங்கள்.
என் இதயம் பிளந்தாள் - அதிலிருந்து
நீ வருவாய் - உன் தந்தை வருவார்.

இன்னும் பிளந்தால்
எதுவுமில்லாத கோது வரும்
வெட்டிப்பிளந்திடு...
ஸ்கேன் செய்திடு - என்றாலும்
என்னவரும் என்னநடக்கும்
எதுவுமில்லை. இறை ஆணைவரும்
என் இதய பிளப்புக்கு டாக்டர்கள்
எஸ்ரிமேற் தந்துள்ளனர்.
அப்பலோவில் பத்து லட்சம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆஸிறியில் எட்டு லட்சம்
நவலோக பன்னிரண்டு
டெல்மனில கொஞ்சம் கம்மி
டேடன்ஸ் பதினைந்து -
சுலைமானில் - கொஞ்சம் குறை
ஸிலிங்கோவில் மிக அதிகம்

என்னில் பிறந்த மகன்
இதைக்கேட்டு அலைகின்றான்.

எனதன்பு மகனே...
நானோ வாழ்ந்து முடித்த சரித்திரம்
நானோ முன்னுரை கண்டு முகவுரை நின்று
இன்றோ முடியும் வரையும் கடந்துவிட்டேன்
அல்லாஹ்வின் அழைப்பிற்கு - அவசரமாய் எ
இப்படியாய் இருக்கையில் - ஏன் மகனே பண
வாழ்ந்து முடித்தேன் - உன்னை
வாழ்வதற்காய் உயர்த்திவிட்டேன்
என்ன பணி இனி எனக்கு...
ஏன் மகனே இவையெல்லாம்?



வாழ்க்கையில் கடமைகளைச்
சீராக முடித்தால்...
வாழும் வரையிலும் இறைபணியில் நனைந்தா
இதய வருத்தமென்ன... எதுவரினும் நிம்மதிதா

சொற்ப நாள் வாழ்வுக்காக -
சொத்துக்கள் - பிள்ளைகளின்
சுகமான வாழ்வுநிலை
இவையெல்லாம் அழித்துப் பொருளியல் நலிவாக்கி
வாழ்வதும் ஒருவாழ்வா?
வாருங்கள். வாழ வழிவிடுங்கள்.
வாழ்பவர்கட்கு வழிவிடுங்கள் - இதயம் பிளந்து...
அடைப்பெடுத்து -
இருபது இலட்சத்தை இழந்து - இன்றும்
இருவாரம் மட்டும் வாழ்ந்து - இழக்கும் நிலை கழைந்து
எல்லாம் இறை சித்தம் என்னும்
ஈமான் பலம் கொண்டு
என் மகனே நான் வாழ்வேன்
இனிய மகன்... கலங்காதே!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கிழக்கு மாகாண கலை இலக்கியப் பெரு விழா - 2014**
கட்டுரைப் போட்டி – கனிஷ்ட பிரிவு
(பிரதேச மட்டம்: 1ம் இடம், மாவட்ட மட்டம் : 3ம் இடம்)

எம். ஜே. முகம்மட் ஜாஸில், தரம் - 6
மட்/மம/ காத்தான்குடி மத்திய கல்லூரி (தே.பா)

## கலாசாரமும் அதற்கூடான நற்பண்புள்ள புதிய சமுதாயமும்

கலாசாரம் என்பது ஒருதனி மனித வாழ்வில் ஒருவன் கொண்டுள்ள உளரீதியானதும் செயல் ரீதியானதும் பண்பாட்டு வளர்ச்சியையே குறித்து நிற்கின்றது.இவ்வாறு பரந்துபட்ட நல்லதொரு கலாசாரப் பின்னணியைக் கொண்டுள்ள சமூகத்தினால் மட்டுமே உண்மையான அபிவிருத்தியையும் நிலைபேறான பண்பாடுகளையும் உள்வாங்கிக் கொள்ள இயலுமாக இருக்கின்றது.எனினும் மேற்கத்தேய நாகரீக மோகத்தினாலும் தொழில் நுட்ப வளர்ச்சியின் பின்னடைவான பக்கங்களினாலும் அனைவரினதும் பாரம்பரிய கலாசாரங்கள் பின்னடைவுகளை எதிர்கொண்டுள்ளமையானது தற்போது ஏற்பட்டுள்ள பாரிய சவாலாகும்.இவ்வாறான சீர்கேடுகளைக் களைந்து மக்களை நல்வழிப்படுத்துவதன் வாயிலாக நற்பண்புள்ள புதிய சமூகத்தினரைக் கட்டியெழுப்ப வேண்டியது காலத்தின் தேவையாக அனைவராலும் உணரப்பட்டுள்ளது.

உலகில் ஒவ்வொரு மனிதனும் தான்சார்ந்த ஏதோவொரு கலாசாரத்தின்பால் உள்வாங்கப்பட்டவனாக இருக்கின்றான்.அதன் மூலம் அவனுடைய தனித்துவம் பிரதிபலிக்கின்றது.அதுமட்டுமன்றி அவனால் அது உயர்வாகவும் மதிக்கப்படுகின்றது.இதேபோன்று நாம் வாழும் சூழலிலும் பலதரப்பட்ட இன,மத, மொழி வேறுபாட்டுடன் வேறுபட்ட கலாசாரப் பின்னணியைக் கொண்ட மக்கள் வாழ்வதையும் அவதானிக்க முடியும். அம்மக்களும் தாம் பின்பற்றும் கலாசாரத்தில் பற்றுள்ளவர்களாகளாகவும் அதனைப் பின்பற்றுபவர்களாகவும் காணப்படுகின்றனர்.இவ்வாறு நன்கு கட்டியெழுப்பப்பட்ட கலாசாரப் பின்னணியைக் கொண்ட சமுதாயத்தினால் மட்டுமே நற்பிரசைகளையும் சந்ததியினரையும் வளர்த்தெடுக்க இயலும்.

இதற்கேற்ப ஒருவர் மற்றவரினது கலாசாரத்தையும் பண்பாட்டையும் மதித்து நடக்க வெண்டிய தேவை இன்றியமையாததாகும்.இதுவொரு அவசியமான பண்பாகும்.இவ்வாறு ஒவ்வொரு தனிமனிதனினதும் மனப்பாங்கில் மாற்றத்தினை ஏற்படுத்தும்போது அவர்களது நடத்தைக் கோலத்திலும் காலப்போக்கில் சிந்தனைப் போக்கிலும் பாரிய மாற்றத்தினை ஏற்படுத்தும் வல்லமையைப் இப்பண்பாடு பெற்றுக் கொள்கின்றது.இவ்வாறு சிறந்ததொரு கலாசாரப் பின்னணியில் பயிற்றப்பட்ட சமூகத்தினால் மட்டுமே தேவையான இன நல்லுறவினைக் கட்டியெழுப்ப முடியும் என்பது அனுபவரீதியான உண்மையாகும்.எனினும் தற்காலத்தில் எம்மத்தியில் ஊடுருவியுள்ள பல்வேறு சமூகக் காரணிகளாலும் சிந்தனைப் போக்குகளாலும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அனைத்து சமூகங்களினதும் வாழ்வியல் அம்சங்களில் குறிப்பிடத்தக்களவு தாக்கத்தினை இவை ஏற்படுத்தியுள்ளன.

பொதுவாகக் கலாசாரம் என்பது "இனங்களுக்கிடையிலான ஒரு புரிந்துணர்வுப் பாலம்" என்றால் அது மிகையாகாது.இதற்குக் கலாசாரம் தொடர்பான மானுடவியல் விஞ்ஞான ஆராய்ச்சியாளர்களின் சிந்தனையான "எந்தவொரு சமூகத்தின் கலாசாரம் இன்னொரு இனத்தின் கலாசாரத்தை விட உயர்வானதல்ல" எனும் கூற்றின் மூலம் உணர்ந்து கொள்ளமுடியும்.இதற்கேற்ப அவை கீழானதுமல்ல என்பதுவும் ஏற்றுக்கொள்ள வெண்டிய சிந்தனையாகும்.உதாரணமாக எம்மத்தியில் நிலவுகின்ற ஆங்கில மொழி மீதான மோகத்தினைக் குறிப்பிட்டுக்கூற முடியும்.அம்மெழியைப் பேசுகின்ற மக்களின் கலாசாரம் எம்மை வெகுவாகக் கவர்ந்துள்ள போதிலும் எமது கலாசாரம் எந்த வகையிலும் அதனைவிடக் குறைவானதல்ல என்பதை மறந்துவிடக்கூடாது.ஏனெனில் எமது கலாசாரப் பாரம்பரியமானது எமது சமூக, பொருளாதார, பௌதீக, புவியியல் காரணிகளுக்கேற்ப வடிவமைக்கப்பட்டுள்ள சம்பிரதாயங்களாகும்.மேற்கத்தேய மக்கள் கரண்டிகளால் உணவு உட்கொள்ளும் போது நாம் கைவிரல்களால் உட்கொள்கின்றோம். இதில் எவ்வித குறைபாடும் இல்லை. இப்பழக்கத்திற்கு நாம் சிறுவயது முதல் பழக்கப்பட்டிருப்பதால் அது கீழானதுமன்று.அதுமட்டுமன்றி தற்காலத்தில் எமது உணவுண்ணும் முறையே விஞ்ஞான ரீதியாகச் சமிபாடடைவதற்கான சரியான வழிமுறை எனக் கண்டறியப்பட்டுள்ளது.

ஒரு தனிமனிதனின் உடலும் உயிரும் ஒன்றித்த வடிவத்தில் அவனது கலாசாரமும் குருதியில் சேர்ந்தே ஓடிக்கொண்டிருக்கிறது என்பதை மறுப்பதற்கில்லை.துரதிஸ்ட வசமாக கடந்த முப்பது வருட காலமாகப் புரையோடிப் போன இனமுரண்பாட்டுச் சூழலால் ஏற்பட்ட யுத்தத்தின் காரணமாக அனைத்து சமூகங்களினதும் கலாசாரம் சீரழிந்து திசைமாறிச் சென்றுள்ளதைத் தற்காலத்தில் கண்டுகொள்ள முடிகின்றது.இதற்குக் காரணமாகத் தற்காலத்தில் பலராலும் பற்பல காரணிகள் முன்வைக்கப்பட்ட போதிலும் ஆழமாகச் சிந்தித்து நோக்குவோமாயின் இனங்களுக்கிடையே ஏற்பட்ட கலாசாரப் புறக்கணிப்பே மூலகாரணி என்பதை உணரமுடியும்.ஏனெனில் அதனைப் பின்பற்றுவதில் எதுவித இடையூறும் ஏற்படுத்தப்படுவதனை எவரும் அனுமதிப்பதுமில்லை.மாறாக இதன்மீது மற்றவரினால் ஏற்படுத்தப்படும் கலாசாரப் புறந்தள்ளுகையானது அவனது ஆழ்மனதில் தாக்கத்தை ஏற்படுத்துகின்றது.இதனால் மற்றவர் மீது தீவிர உணர்ச்சியும் எதிர்ப்பும் ஆட்கொள்ளப்படுகின்றது.அத்துடன் விரக்தி மனநிலையுடன் முரண்பாட்டுச் சூழலுக்கும் இட்டுச் செல்கின்றது. இவ்வாறு ஏற்படுத்தப்பட்ட பாரிய மனப்பதிவின் தாக்கத்தினை இலகுவில் மாற்றிட இயலும் என எண்ணுவது அறியாமையாகும். இவ்வாறான பிறழ்வு நடத்தையானது காலப்போக்கில் சமூகத்தின் தொற்று நோயாக மாறிப் பிற சமூகங்களுக்கிடையிலான நல்லுறவிலும் பாரிய பாதிப்பையும் விரிசலையும் ஏற்படுத்தி விடுகின்றது.

இன்று நவீன மயமாகும் நகரமயமாகும் போட்டா போட்டி நிறைந்த உலகப் பொருளாதார முறைமைக்கேற்ப ஏற்பட்டுள்ள உலகளாவிய போட்டித்தன்மை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காரணமாக புதிய வழிகளில் பொருளீட்டல் நடைபெற்று வருகின்றது.இதற்காக மனிதன் நிம்மதியற்று இயந்திர வேகத்தில் இயங்கிக் கொண்டிருக்கிறான்.சற்று ஓய்வெடுத்தாலும் தனக்கான சந்தர்ப்பம் கைநழுவிச் சென்றுவிடுமோ என்ற அச்சத்துடன் உழன்று தவிக்கின்றான். இதனடிப்படையில் உழைப்பானது சுரண்டல்கள் மூலமாக இடம்பெறும் வியாபார யுக்தியைச் சிந்தித்துணராத மக்கள் சடத்துவத்தின்பால் மோகம் கொண்டு தங்களின் தனித்துவத்தையும் கலாசாரத்தையும் மறந்து வாழும் சூழ்நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.உதாரணமாக சினிமாத் திரைப்படங்களின் தாக்கத்தினைக் குறிப்பிட முடியும்.இவற்றின் அறிமுகத்தினால் பிற்போக்கான முன்மாதிரிகள் விளம்பரப்படுத்தப்படுவதுடன் பொருத்தமற்ற முறையில் பாலியல் உணர்ச்சிகளும் தூண்டப்படுகின்றன.இவற்றின் விளைவாக புதிய நாகரீகம் என்ற போர்வையில் ஆபாச நடை,உடை,பாவனை என்பன ஆதிக்கம் பெற்றுள்ளமையினால் முறையற்ற பாலியல் நடத்தைகளும், பலாத்காரங்களும், விபச்சார நடவடிக்கைகளும் எம்மத்தியில் வெகுவாக அதிகரித்துள்ளதை அவதானிக்க முடிகின்றது.இதற்கும் ஒரு படி மேற்சென்று ஆபாசக்காட்சிகளின் மலிவான இறக்குமதிப் போக்கும் அவற்றினூடான வியாபாரத் தந்திரமும் வயது வித்தியாசமின்றி இம்மாய வலையில் அனைவரையும் சிக்கவைத்துள்ளது.இதனால் இவர்கள் உணர்ச்சிகளுக்கு அடிமைகளாகிய மனநோயாளர்களாக மாறியுள்ளனர். இவற்றின் தேறிய பயனாக சமயங்களின் போதனைகளும் வழிகாட்டுதல்களும் புறந்தள்ளப்பட்டு சினிமாக் கதாபாத்திரங்களின் வாசகங்களை வேதவாக்காகக் கொண்டு வாழும் துர்ப்பாக்கிய நிலை எம்சமூகத்தில் காணப்படுகின்றது.இவ்வாறான நிலைப்பாடே நற்பண்புள்ள சமுதாயம் உருவாக்கம் பெறுவதற்குத் தடையாயுள்ள பிரதான காரணி எனலாம்.

“ஒழுக்கம் என்பது உயிரிலும் மேலானது” எனும் சான்றோரின் வாக்கிற்கமைய இளம் தலைமுறையினரின் ஒழுக்கம் தற்போது கேள்விக்குறியாகியுள்ளது.ஏனெனில் தற்காலத்தில் மாணவப் பருவத்தினரது ஒழுக்கப் பண்பாட்டு விழுமியங்கள் முன்னைய காலத்துடன் ஒப்பிடுகின்றபோது சற்றுக் குறைந்த காணப்படுகின்றது.முன்னைய காலத்தில் ஆசிரியர்களையும் பெரியோர்களையும் மதித்து நடந்த இவர்கள் பாடசாலையின் பண்பாட்டு பாரம்பரியங்களையும் பின்பற்றி நடந்தனர்.ஆனால் இன்று நிலைமை மாறி பரீட்சையை மையமாகக் கொண்ட கற்பித்தல் முறைமையினால் ஒழுக்கம் வீழ்ச்சி கண்டுள்ளமையைக் குறிப்பிட முடியும். கற்றல் செயற்பாடுகளுடன் சேர்த்து புறக்கீரத்திச் செயற்பாடுகளில் ஈடுபடுவதற்கான சந்தர்ப்பம் மாணவர்களுக்கு வழங்கப்பட்டுள்ள போதிலும் இவை சரியான முறையில் வழிகாட்டப்படாமையானது ஒரு பின்னடைவாகும்.இன்று மாணவர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் இடையிலான உறவு வெகுவாகப் பாதிக்கப்பட்டுள்ளது.இன்று கடமைக்காக மட்டுமே கற்பித்தல் பணி நடைபெறுகின்றதே தவிர அர்ப்பணிப்பான சேவை கேள்விக்குறியாகியுள்ளது.இதனால் மாணவர்களின் எதிர்பார்ப்பும் சிந்தனைப் போக்கும் வித்தியாசமாகக் காணப்படுகின்றது.இது மாணவர் சமூகத்தின் கலாசாரத்தில் ஏற்பட்டுள்ள பின்டைவுகளுக்குக் காரணமாக அமைந்துள்ளன.மாணவர்கள் கல்வியிலும் ஒழுக்கத்திலும் மட்டுமன்றி வாழ்க்கைக்குத் தேவையான சகல துறைகளிலும் செதுக்கிச் செப்பனிடப்பட

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேண்டிய இடமாகப் பாடசாலைகள் திகழ வேண்டும்.இதற்குப் பொருத்தமான ஊடகமாகத் தங்களின் கலை கலாசார விடயங்களுடனான ஈடுபாட்டினை மாணவர்கள் மத்தியில் அதிகரிக்கச் செய்வதனூடாகவும் வாசிப்பு மற்றும் எழுத்துத் துறைகளில் நன்கு ஊக்கப் படுத்துவதினூடாகவும் சிந்தனைப் போக்கினையும் பண்பாட்டு ஒழுக்க விழுமியங்களையும் வளர்த்தெடுக்க இயலுமாகவிருக்கும்.

அடுத்து தற்கால உலகமயமாகலின் விளைவாக தனிமனிதனின் பெறுமதியானது புறக்கணிக்கப்பட்டு பணம் பணம் என்று சுயநலமாக வாழக்கூடிய மக்களையே கூடுதலாகக் காணமுடிகின்றது.அதனால் பிறர் நலம் பேணல் என்பது வழக்கொழிந்து சுயநலமே அனைவரினதும் மனதிலும் தலைதூக்கி நிற்கின்றது.இதன் விளைவாக ஒருவர் மற்றவரை முண்டியடித்து, வீழ்த்தி பிழையான வழிகளில் தங்களின் தேவைகளை நிறைவேற்றிக் கொள்ள முயல்கின்றனர். இதனால் மனித நேயம் என்பது இல்லமற்போயுள்ளதுடன் பலாத்காரமும் மனித உரிமை மீறல்களும், அனாச்சாரங்களும், கொலை, கொள்ளை ,ஆட்கடத்தல் போன்ற சமூக விரோத செயல்ளும் மலிந்த ஒரு சமூகக் கட்டமைப்பு தோற்றுவிக்கப் பட்டுள்ளது.நாளுக்கு நாள் இவை கூடிச்செல்கின்றனவே தவிர அவை குறைந்த பாடில்லை.இவற்றுக்குப் பிரதான காரணம் மேற்கத்தேய வாடகைக் கலாசாரத்தின் ஊடுருவலும் எமது சமூகத்தின் பாரம்பரிய நடைமுறைகளின் புறந்தள்ளுகையும் என்றால் அது மிகையாகாது.

மேலும் இன்றைய நவீன யுகத்தில் எம்மனைவரையும் ஆட்கொண்டுள்ள தொழில் நுட்ப வளர்ச்சி தொடல்பில் நோக்குவோமேயானால்,இதன் பரிசாக இன்ரநெட், கையடக்கத் தொலைபேசி என்பவற்றின் ஆதிக்கத்தினைச் சுட்டிக்காட்ட இயலும். இக்கணனி யுகத்தின் பயனாக உலகம் கண்டுள்ள பிரதிபலன்கள் எண்ணிலடங்காதவை.இருப்பினும் நவீன வர்த்தக விரோதிகளால் மேற்கொள்ளப்படும் வியாபாரத் தந்திரத்தினை உணர்ந்து கொள்ள முடியாத எமது அப்பாவிச் சமூகம் அவர்களின் மாயவலையில் சிக்குண்டு தவிப்பதைப் பின்வரும் புதிய தகவல்கள் நிரூபிக்கின்றன.அதாவது உலகம் முழுவதும் தகவல் களஞ்சியமாகப் பயன்படுத்தப்படும் 'கூகுள்' மூலம் ஒரு நிமிடத்திற்கு இருபது இலட்சத்திற்கும் மேற்பட்டவர்கள் தேடுதல் செய்கின்றனர். முகப்புப் புத்தகப் பக்கங்களில் அறுபது லட்சம் பேர் இரவு பாலாக முகமபுதைத்துத் தொடர்பிலிருக்க, ஒருநிமிடத்திற்கு மூவாயிரம் படங்கள் அப்லோட் செய்யப்படுவதுடன் இரு கோடிப் புகைப்படங்கள் பார்க்கப்படுகின்றன.ஆச்சரியம் தரும் இத்தகவல்கள் தரும் செய்தியானது எவ்வாறு வாழிவினைச் சீரழித்து வாழ்ந்து வருகின்றனர் என்பதைப் பறைசாற்றி நிற்கின்றது.

தற்காலத்தில் சிலர் அதற்கப்பாலும் சென்று முகம் தெரியாக் காதலுக்காகவும் அற்ப சொற்ப விடயங்களுக்காகத் தங்களைத் தற்கொலை முயற்சிவரை இழுத்துச் செல்வதற்கும் இடமளித்துள்ளனர் என்பது வெளிப்படையான உண்மையாகும்.இதற்கு தனிமைப்படுத்தப்பட்ட வீட்டுச்சூழலும் முக்கிய பங்கு வகிப்பதனால் பிரச்சினைகளைப் பகிர்ந்து கொள்ளும் தன்மை அற்றுப்போய் நற்பண்புள்ள சமுதாயத்தினை உருவாக்குதலில் பெற்றோரின் பங்கும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெற்றிடமாகவுள்ளது.அதற்காகப் பெற்றோரும் தங்கள் பிள்ளைகளின் நடத்தைக் கோலங்களை நன்கு அவதானித்து வழிப்படுத்த வேண்டுமெயன்றி பாராமுகமாக இருப்பதானது தங்களுக்கும் எம்சமூகத்திற்கும் இழைக்கின்ற அநீதி என்றே கூறமுடியும்.

உண்மையில் அபிவிருத்தி என்பது வெறுமனே வெளித்தோற்ற அம்சங்களில் மட்டும் தங்கியிருப்பதன்று.அவை உளரீதியாக உணரப்படும் போதுதான் நிலைபேறானதாக அமைகின்றது.அவ்வாறற்ற நிலைமையில் அச்செயற்பாடுகள் புறக்கப்படுபவையாகவே கருதப்படும்.இதற்காக சமுதாயத்தில் நற்பண்புள்ள சமூகம் கட்டியெழுப்பப்படல் வேண்டும்.கடந்த காலங்களில் ஏற்பட்ட இயற்கை அனர்த்தங்களால் வெளிநாட்டவர்களின் வருகையும் அவர்களின் உதவிகளும் தவிர்க்க முடியாது போனாலும் அதனால் ஏற்படுத்தப்பட்ட கலாசாரச் சீரகேடுகள் தவிர்க்க முடியாதவை. அதனால் தனிமனித முன்னேற்றச் செயல்பாடுகள் மழுங்கடிக்கப்பட்டுள்ளன.மேலும் எம்மக்கள் சுய ஆக்கத் திறன் அற்றசமூகமாகவும் பிறரிடம் தங்கள் தேவைகளுக்காகக் கையேந்துவதற்கும் எதிர்பார்ப்பதற்குமான சமூகமாக மாறியுள்ளமையானது கவலைக்குரிய விடயமாகும்.இதனால் ஏற்படுத்தப்பட்ட கலாசாரக் கலப்பினால் சமய, சமூக, பண்பாட்டு விழுமியங்கள் குழிதோண்டிப் புதைக்கப்பட்டு, இறக்குமதி செய்யப்பட்ட கலாசாரங்களின் ஆதிக்கம் மேலோங்கிக் காணப்படுகின்றது.

இவ்வாறு பல்வேறுபட்ட காரணிகளால் சிதைவுண்டு காணப்படும் கலாசாரத்தை மீண்டும் கட்டியெழுப்புவதும் அதன்மூலம் நற்பண்புள்ள சமுதாயத்தை உருவாக்கவதும் தற்காலத்தின் அத்தியவசிய தேவையாகும்.

இதனடிப்படையில் சமூகத்தில் காணப்படும் கலை அலக்கிய ஆர்வலர்கள் இனம் காணப்பட்டு ஊக்கவிக்கப்படல் வேண்டும். "மொழிகளாலும் இலக்கியத்தாலும் வெளிப்படுத்த முடியாதது ஒன்றுமில்லை" என்ற அறிஞர்களின் கூற்றுக்கமைவாக மொழிகளின் பிறப்பிற்குப் பின்னரே இலக்கியங்களும் தோன்றியுள்ளன.அத்துடன் கல்வி சுகாதாரம் என்பவற்றுக்கு வழங்கப்படும் முக்கியத்துவம் போன்று கலாசார அம்சங்களுக்கும் அந்தஸ்து வழங்கப்படுவதன் மூலமாக பின்தள்ளப்பட்டுத் தூரமாகிப் போயுள்ள கலாசார அம்சங்களை வளர்த்தெடுக்க முயற்சி செய்ய வேண்டும்.மேலும் தொழில்நுட்பத்துறை வல்லுனர்களுக்கு வழங்கப்படும் அங்கீகாரமும் கௌரவமும் வழங்கப்பட்டு பாடசாலை மட்டத்தில் அவற்றினைக் கற்பிக்கின்ற ஆசிரியர்கள் நியமிக்கப்படுவதனால் மாணவர்களால் கவனிப்பாரற்று கைவிடப்பட்ட கலை கலாசார அம்சங்களை உயிரூட்டமுடியும்.இவற்றின் வாயிலாக கலாசாரம் என்பது நற்பண்புள்ள சமூகத்தை உருவாக்குவதில் பெரும் பங்கு வகிக்கின்றது என்றால் அது மிகையாகாது.

**கிழக்கு மாகாண கலை இலக்கியப் பெரு விழா – 2014**



உறுப்பெழுத்துப் போட்டி - கனிஷ்ட பிரிவு

**(பிரதேச மட்டம்: 1ம் இடம்)**

செல்வி. ஏ.எம்.எப். மம்தூஹா

மட்/மம/ மில்லத் மகளிர் வித்தியாலயம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கிழக்கு மாகாண கலை இலக்கியப் பெரு விழா - 2014**

பாடலாக்கப் போட்டி - கனிஷ்ட பிரிவு

(பிரதேச மட்டம்: 1ம் இடம், மாவட்ட மட்டம்: 1ம் இடம்)

எம். ஜே. முகம்மட் ஜாஸில், தரம் - 6
மட் மம காத்தான்குடி மத்திய கல்லூரி (தே.பா)

சூழல் காப்போம்
சின்னத்தம்பி சின்னத்தம்பி!
எங்கே செல்கிறாய்?
வீதிக்கு சென்று நானுங்குப்பை
வீசப் போகிறென்.

ஐயோ! தம்பி அப்படியெல்லாம்
செய்திடாயடா!
சூழல் கெட்டு துர்நாற்றம்
வீசுமேயடா!

அநுதினமும் நீ எறியும்
கழிவுகளாலே
முழுத்தெருவும் கூழத்தால்
நிரம்பிப் போச்சுடா

மீழ்சுழற்சி என்று கூறி
அறியத்தந்தாலும்
நடக்கின்றீர் அறிவற்ற
மூடராகவே

சிக்கனமாய்ப் பொலித்தீனைப்
பாவித்தாலுமே
பறந்துவரும் பைகளையும்
குறைத்திடலாமே

தொல்லை தரும் ஈக்களையும்
நுளம்புகளையுமே
ஒழித்திடவே பலவழிகளுண்டு
நீயறிவாயோ?

தீவிரமாய் பரவி வரும்
தொற்று நோயினால்
மரணத்தை அஞ்சுகிறோம்
சுகாதாரமின்றி.

புறச்சூழல் எனுமிந்த
நற்கொடையினை
பேணியே காத்திடுதல்
எம்கடனாகும்.
(நிறைவு)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கிழக்கு மாகாண கலை இலக்கியப் பெரு விழா - 2014**
**சிறுகதைப் போட்டி - கனிஷ்ட பிரிவு**
**(பிரதேச மட்டம்: 1ம் இடம், மாவட்ட மட்டம்: 2ம் இடம்)**

எம். ஐ. பாத்திமா, தரம் - 09
மட்/மம மெத்தைப்பள்ளி வித்தியாலயம்

# தத்துப் பிள்ளை



ஒரு அழகிய காலைப்பொழுது.....!

அவ் இனிய வேளையில் 'சித்திரைப் புதுவருட கச்சேரி' இடம்பெற்றுக்கொண்டிருந்தது. கச்சேரி என்பது தலைசிறந்த பாடகர்களையும், கலைஞர்களையும் கொண்டதல்ல. குயில் கூவும் ஓசைதான் அது. 'பச்சைப் பசேல்' எனக் காட்சியளிக்கும் விவசாய நிலங்களும் மனதிற்கு மகிழ்ச்சி தரும் காகம் கரைவதும், சேவல் கூவுவதும், ஆலயங்களினதும் ' டங், டங்' எனும் மணியோசையும் காலைப்பொழுதினை மிகவும் பரபரப்பாக்கும் இவ்வழகிய கிராமத்தில் பிறந்தவள்தான் 'கல்பனா'.

அன்பிற்காகவும், கருணைக்காகவும் ஏங்கும் ஒருத்தியாகிவிட்டாள். அவளினை மகிழ்ச்சியூட்டுவதும், சிரிக்கவைப்பதும் அவளுடைய குட்டி நாய் 'டாடு' மட்டும் தான். சாம்பல் நிற உடலில் வெள்ளை நிற புள்ளியைக்கொண்ட டாடுவை கல்பனாவிற்கு மிகவும் பிடிக்கும். நான்கு சுவர்கள், உட்பட்ட தளம், மேற்கூரையுடன் ஒரேயொரு அறைதான் வீடு. துருப்புடித்த ஒரு அடுப்பு தட்டுமுட்டுச் சாமன்கள் வைக்கும் இரண்டு அடுக்கு மரப்பெட்டி ஒன்று, கயிற்றினால் வேயப்பட்ட இரண்டு (கட்டில்கள்) படுக்கைகள். இவையனைத்தும் கல்பனாவின் வீட்டில் இருந்த பொருட்கள். இவ்வாறு தனது கடந்த கால வாழ்வினை கொஞ்சம் நினைத்துப் பார்க்கிறாள்.

அவளுக்கு ஒரேயொரு ஆசைமட்டும்தான். பாடசாலைக்குச் சென்று கல்விகற்க வேண்டும் என்பது மட்டும்தான். ஆனால் அவளது குடும்ப நிலையோ மிகவும் பரிதாபமானது. கல்பனாவின் தந்தை குமார் அன்றாடம் கூலிவேலை செய்து அவர் கொண்டுவரும் ஒரு சில நாணயங்களுக்கு அவளது அம்மா லட்சுமி அருகில் உள்ள கடைகளுக்குச் சென்று கொஞ்சம் அரிசி வாங்கி வருவாள். அதனைக்கொண்டு கஞ்சியினை வடித்து தனது கணவருக்கும் தனது ஐந்து பிள்ளைகளுக்கும் கொடுத்துவிட்டு எஞ்சிய சிறிதளவினை தானும் சாப்பிட்டுவிட்டு தூங்கிவிடுவாள். சிலவேலைகளில், கல்பனாவின் தந்தை நெஞ்சு வலி ஏற்பட்டு எழுந்து நடக்கக்கூட முடியாமல் அவதிப்படும் போது லட்சுமியும் கல்பனாவும் அயல்வீடுகளுக்குச் சென்று பாத்திரங்களை கழுவிக்கொடுத்தால், அவர்கள் எஞ்சும் உணவினை இவர்களுக்குக் கொடுப்பர்.

அவ்வுணவினைக்கொண்டு அனைவரும் பசியாறுவர். இவ்வாறு, வறுமையினைக் கொண்டு வாழ்ந்து வந்த இக்குடும்பத்திற்கு திடீரென ஒரு அதிர்ச்சி 'வழமை போல் தொழில் செய்யச் சென்ற குமாரிற்கு நெஞ்சு வலி அதிகரித்து இறந்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விட்டார்' என்ற செய்தி அக்குடும்பத்தினை நடுநடுங்க வைத்தது. அக்குடும்பத்திற்கு அனைவராலும் ஆறுதல் கூற மட்டுமே முடிந்தது.

லட்சுமியின் சகோதர, சகோதரிகள் அனைவரும் வசதியுள்ளவர்கள். ஆனால் லட்சுமி மிகவும் ஏழை என்பதால் அவர்கள் தமது குடும்பத்தை விட்டு ஒதுக்கிவைத்து விட்டனர். லட்சுமி என்ன செய்வதென்று புரியாமல் தவித்தாள்.

கல்பனாவிற்கு வயது ஏழு. அவளுக்குப் பின் உள்ளதோ ஐந்து தம்பி, தங்கைகள். கல்பனா குடும்ப நிலவரத்தினை புரிந்து கொள்வாள். ஆனால், அவளது தம்பி, தங்கைகளுக்கு என்ன தெரியும். அவர்கள் அம்மாவிடம் 'அம்மா பசிக்குதும்மா, பசிக்குதும்மா' என நச்சரித்துக்கொண்டேயிருப்பா லட்சுமி மன வேதனையுடன் பக்கத்து வீடுகளில் வேலை தேடிச்சென்றாள்.

பக்கத்து வீட்டு சரஸ்வதி அக்காவின் வீட்டின் திண்ணையில் பலர் உட்காந்து கதைத்ததுக்கொண்டிருந்தனர்.

லட்சுமி, சரஸ்வதி அக்காவிடம் சென்று 'ஏதாவது வேலை உள்ளதா?' எனக் கேட்டாள்.

'எனது சகோதரர்கள் வந்திருக்கின்றனர். உணவு சமைக்க வேண்டும் எனக்கு நீ உதவ முடியுமா? எனக் கேட்டார்.

நிச்சயமாக, ஆனால் எனக்கும் எனது பிள்ளைகளுக்கும் உணவு தரவேண்டும்.

எனக்கு சமைக்க உதவினால் நிச்சயமாக, எஞ்சும் உணவைத் தருவேன், என்றார் சரஸ்வதி அக்கா.

லட்சுமியும் சரி என ஒப்புக்கொண்டு சமைத்துக்கொடுத்துவிட்டு எஞ்சும் உணவினை தனது வீட்டிற்கு எடுத்து வந்து தானும் உண்டு தன் பிள்ளைகளுக்கும் கொடுத்தாள்.

ஒரு சில நாட்களின் பின்னர் சரஸ்வதி அக்கா, லட்சுமியின் வீடு தேடி வந்தார். லட்சுமியும் அவரினை வரவேற்று உரையாடிக்கொண்டிருக்கும் போது 'லட்சுமி, உன்ர புள்ளை கல்பனாவை எனது தம்பி மனைவி பார்த்து விட்டாள், அவங்களுக்கும் ஒரு புள்ளை இல்லாம நிறைய நாள் கஷ்டப்பட்டாங்க என்பது உனக்குத் தெரியும்...., அதனால..... உன்ட கல்பனாவ அவுக தத்தெடுக்குரதா சொல்ராங்க......!' எனத் தயங்கியபடி கேட்டார் சரஸ்வதி.

லட்சுமி செய்வதறியாது திகைத்து நின்றாள்.

'ஒரு நல்ல முடிவ சொல்லு எனக்கூறிய சரஸ்வதி, உன்னையும் சும்மா விடமாட்டாக.. உன்ட மத்த நாலு புள்ளைகளையும் நல்லா படிக்க வைக்கிறதோடு, கல்பனாவையும் அவுகட புள்ளமாதிரி பார்த்துக்குவாங்க, நீயும் கடுமையா கஷ்டப்படுறாய்தானே?' எனக்கூறிவிட்டுச் சென்றுவிட்டாள்.

இங்கு நடந்த சம்பவம் அனைத்தையும் கல்பனா மறைவிலிருந்து கேட்டுக்கொண்டிருந்தாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'ஏழையாய் இருந்தா பெத்த புள்ளயயும் விட மாட்டாங்களா?' எனக்கூறி அழத்தொடங்கினாள் லட்சுமி.

கல்பனாவும் அம்மாவிடம் சென்று 'நான் அவுகளோட போறேன். அம்மா தம்பி, தங்கைகளையும் நல்லா பாத்துக்குவாங்க, நான் அவகளோட போறேன், என அம்மாவின் கண்ணீரைத் துடைத்தபடி கூறினாள்.

அன்றுமுழுக்க லட்சுமியின் கண்களில் கண்ணீரைத்தான் பார்க்கமுடிந்தது.

வேறுவழி தெரியாமல் லட்சமி, சரஸ்வதி அக்காவிடம் சென்று கல்பனா அவர்களோடு செல்லப்போகும் செய்தியை கூறினாள்.

கல்பனா அவர்களுடன் செல்லவேண்டிய நாளும் வந்தது.

அவர்களுடைய காரில் கல்பனாவை ஏற்றிக்கொண்டு செல்ல அவர்களது காரினை கொண்டுவந்தனர். தனது அம்மாவின் மடியில் நீண்ட நேரமாக உட்கார்ந்து அழுதுவிட்டு அனைவரையும் பிரிந்து சென்றாள்.

தனது புது வீட்டினை கல்பனா அண்ணார்ந்து பார்த்தாள். 'இரண்டு அடுக்கு மாடிவீடும், பலவகையான தளபாடங்களும், விளையாட்டுப் பொருட்களும் என காணப்பட்ட அவ்வீட்டை கல்பனாவிற்குப் பிடித்துவிட்டது. தனது அம்மாவை மறந்து நீண்ட நேரம் விளையாடினாள்.

அவளது புது அம்மாவும், அப்பாவும் இவளை மிகவும் அன்புடன் நடத்தினர். இவளது ஆசையும் நிறைவேறியது.

அதாவது, பாடசாலைக்குச் சென்று மற்ற பிள்ளைகளைப்போல் இவளும் ஆர்வமாகக் கற்றாள்.

இவளிற்கு தேவையான அனைத்துப்பொருட்களும் அவ்வீட்டில் இருந்தன. இவ்வாறு, மகிழ்ச்சியோடும் குதூகலத்தோடும் வாழ்ந்துவந்த கல்பனாவிற்கு ஒருதம்பியும் தங்கையும் கிடைத்துவிட்டனர்.

ஆனால் தங்கையும் தம்பியும் பிறந்ததின் பின்னர் அப்பா இவளிடம் காட்டிய அன்பு குறைந்து கொண்டே சென்றதே தவிர அதிகரிக்கவில்லை. இவ்வீட்டில் இவளுக்கு அன்பு காட்டுவது அவள் அம்மா மட்டும்தான்.

பாடசாலையில் அவளுடைய பெயர் கல்பனா என்றது மறைந்து 'தத்துப்பிள்ளை; என அனைவரும் அழைக்க ஆரம்பித்துவிட்டனர்.

கல்பனாவினை அவளது அம்மாவிற்கும் பிடிக்கும். ஆனாலும் மற்றவர்களைப் போன்று தனக்கும் பாசம் காட்டுவதில்லைதான் தனது அம்மாவின் அன்புப் பரிசுதான் 'டாடு' கல்பனா ஒரு முடிவிற்கு வந்துவிட்டாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒவ்வொருமுறையும் தம்பிக்கும் தங்கைக்கும் மட்டுமே அப்பா உணவு வாங்கி வருவார்.

அதே போன்று, நாளையும் வாங்கி வருவார்.

கல்பனாவின் இதயம் பாறாங்கல்லாக கனத்தது. உண்மையான தந்தைப்பாசத்திற்காக கல்பனா அழுததேயில்லை. வளர்ப்புப்பிள்ளை என்பதால் தான் என் தந்தை என்னை ஒதுக்கிவைக்கின்றார் என நினைக்கும் போது பிஞ்சுப்பறவை சிறகு உடைந்துவிட்ட வேதனை ஏற்பட்டது. இப்படியானதொரு துயரக்கணம்தான் நம்மை வீழ்த்தி விடுகிறது. பின் கொன்றுவிடுகிறது. தற்கொலை செய்பவர்கள் கோழைகளல்ல. கோழையாக்கப்பட்டவர்கள். கல்பனா புத்தகப் பையினை எடுத்தாள். எழுத ஆரம்பித்தாள். பேனா சிவப்ப நிறத்தில் எழுதியது.

'என் வளர்ப்பு அம்மாவிற்கு'

உங்கமேல எனக்கு கோபமில்லை, அப்பா மேலதான் கோபம். என்னை ஏன் தத்து எடுத்தீங்க. நான் ஏன் உங்க பிள்ளையாக பிறக்கல்ல. அப்பா எல்லோரிடமும் அன்பாகத்தான் உள்ளார். என்னைத்தவிர. உங்களவிட்டுட்டுப் போறேன்மா எனது அம்மா லட்சுமிட்டயும் இப்படித்தான் சொல்லிட்டு உங்களோட வந்த மறுபடியும் உங்ககிட்ட சொல்றேன். நான் போறேன். உங்க கனவில் வருவேன் அம்மா.... கடைசியா உங்களுக்கு 100000 முத்தங்கள்

'கல்பனா'

கண்ணீர்த்துளி கடிதத்திற்கு முற்றுப்புள்ளி வைத்தது. இடது கையை விரித்துப் பார்த்தாள். தூக்க மாத்திரைகள் வெள்ளை உடம்போடு பளிச்சிட்டன. கண்ணாடி கிளாஸில் தண்ணீர் எடுத்து வந்தாள். அப்பாவைத்தவிர அனைவரையும் பார்த்துவிட்டுவந்தாள். டாடுவையும் கூட. மாத்திரைகளோடு வாழ்வைப் பார்த்து புன்னகைத்தாள். உள்ளங்கையிலிருந்து ஒவ்வொரு மாத்திரையாக வாயிலிட்டு தண்ணீர் குடித்தாள். மரணத்தைத் தவிர கண்ணாடி போன்று மனம் வெறுமையாக இருந்தது அவளுக்கு.

'கண்ணாடி கிளாஸில் ஓரங்கள் மட்டும் அவளுக்காய் உருகி அழுவது போன்று தோன்றியது'

முற்றும்.



**கிழக்கு மாகாண கலை இலக்கியப் பெரு விழா – 2014**

உறுப்பெழுத்துப் போட்டி - சிரேஷ்ட பிரிவு

**(பிரதேச மட்டம்: 1ம் இடம்)**

செல்வி. கே.எம்.எப். நிஹ்லா

மட்/மம/ மில்லத் மகளிர் வித்தியாலயம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நானுமொரு கவிஞன்

உயிரறியேன் மெய்யறியேன்
உயர்மெய் யெழுத்தறியேன்

சொல்லறியேன் அசையறியேன்
சொல்லாட்சி தானறியேன்

குறிலறியேன் நெடிலறியேன்
குற்றெழுத்துத் தானறியேன்

தளையறியேன் தொடையறியேன்
தக்கமொழித் திறனறியேன்

கருவறியேன் விளமறியேன்
கருவிளமோ தானறியேன்

தேனறியேன் மாவறியேன்
தேமாங்கனி தானறியேன்

கூவிழமோ புளிமாவோ
கூடுவதும் நானறியேன்

காசு, மலர், பிறப்பு
கனவிலுமே அறியேன் நான்
கலிப்பாவோ வெண்பாவோ
களிநெடிலோ யிவையொன்றும்

எனக்குத் தெரியாது
என்றாலுமொரு கவிஞன் நான்

ஊருக்குள் எத்தனையோ
உருப்படிகள் அமைதிகொள்ள

பேருக்கு முன்னால்
பெயர்போட்டுக் கொண்டவன் நான்

என்ன இருந்தாலும்
எனையெண்ணி எள்ளாமல்

பொன்னா டையொன்று
போர்த்துங்கள் நான்மகிழ

நீண்டநாள் ஈறலதை
நிறைவேறு மென்றாக்கால்

தனித்தனியாய் அன்பளிப்பு
தங்களுக்கு நான்தருவேன்

என்றுதின மெண்ணி
எதிர்பார்த் தலைகின்ற

தம்பியரே சற்று
தமிழைப் படியுங்கள்

பொன்னாடை பூமாலை
புகழ்விருந்து நற்சான்று

அத்தனையும் தேடிவரும்
அவதிப்பட வேண்டாம்காண்.

(பாவலர் சாந்தி முகைதீன்)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிழக்கு மாகாண கலை இலக்கியப் பெரு விழா - 2014
கட்டுரைப் போட்டி - கனிஷ்ட பிரிவு
(பிரதேச மட்டம்: 1ம் இடம்)
எம். ஜே. பாத்திமா அப்றா், தரம் - 13
மட்/மம/ மீரா பாலிகா மகா வித்தியாலயம் (தே.பா)

# மாற்றங்களை எதிர்கொள்ளும் மானிட வாழ்வு

காலவோட்டத்துடன் தொடர்ந்து செல்லும் மானிட வாழ்வு பல மாற்றங்களையும் தன்னுடன் பயனிக்கச்செய்கிறது. அவற்றை சிறந்த முறையில் பயன்படுத்தி சாதகமாக்கிக் கொள்வதும் தீய முறைகளில் பயன்படுத்தி பாதகமாக்கிக் கொள்வதும் எம் கைவசமே 'மாற்றம் ஒன்றுதான் வாழ்வில் மாறாது நிலையாக நிற்கக் கூடியது' என்ற பெரும்பாலானோரின் கருத்தும் சமூகத்தில் உலாவக் கூடியது. இதனை இவ்விடத்தில் நினைவு கூர்வது சிறப்பானதாகும்.

இவ்வுலகம் படைக்கப்பட்ட காலம் முதல் இன்று வரை எத்தனையோ மாற்றங்களுக்குட்பட்டு காணப்படுகின்றது. திண்மம், திரவம், வாயு போன்ற சடப்பொருட்களால் நிறைந்து காணப்படும் இப்பூமியிலே பல மாற்றங்கள் நிகழ்ந்திருக்கும் பொழுது அதே பூமியில் வாழும் உயிருள்ள அதிலும் குறிப்பாக பகுத்தறிவுள்ள மனிதனின் வாழ்விலே எவ்வளவு மாற்றங்கள் நிகழ்ந்திருக்குமென்பது எண்ணிக் கணக்கிட முடியாதது.

மனிதன் ஆரம்பத்தில் இப் பூமியில் வெறும் தசைப்பிண்டமாகப் படைக்கப்பட்டான். பின்னர் அவன் தன்னை இனப் பெருக்கிக் கொண்டு குடும்பங்களாக பல குடும்பங்கள் சேர்ந்து சமுதாயமாகின. எந்தவொரு மனிதனும் தனித்து வாழ்ந்திட முடியாது. இதுவே சமூகம் உருவாகுவதற்கு அடிப்படைக் காரணமாக இருந்தது. இவ்வாறு சமுதாயமாகிய மனிதன் தனது மானத்தை மறைப்பதற்காகவும், பாதுகாப்பாக வாழ்வதற்காகவும், தனது உடலியற் தேவைகளை நிறைவேற்றுவதற்காகவும் இயற்கையை நாடினான். ஆரம்பத்தில் இலை குழைகளை ஆடையாகவும் மரப்பொந்துகளையும் குகைகளையும் உறைவிடமாகவும், மிருகங்களையும் பறவைகளையும் வேட்டையாடி உணவுக்காகவும் பயன்படுத்தினர். இதனை வேராகக் கொண்டு இதிலிருந்து ஆரம்பித்த மாற்றங்கள் தற்போது பல நவீன ஆடைகளாகவும், மாட மாளிகைகளாகவும், உடனடி உணவுகளாகவும் மாற்றமடைந்துள்ளன. இவ்வாறான மாற்றங்களுக்குள் சம்பிரதாயங்களும் கலாசாரங்களும் உள்ளடங்குகின்றன.

சமுகங்கள் தோன்றிய வேளையில் மனிதரின் ஆளிடைத் தொடர்பு காரணமாக ஒருவரை ஒருவர் புரிந்து கொள்ள வேண்டியேட்பட்டது. புரிந்து கொள்ளகை சீராக இல்லாவிடின் முரண்பாடுகளும், பிரச்சினைகளும் தோற்றம் பெற்றன. முரண்பாடுகளும், பிரச்சினைகளும் ஏற்பட்ட சமுகத்தை ஒரு கட்டுக்கோப்புக்குள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டுவர மயம் தோன்றியது. சமயங்கள் மூலம் சம்பிரதாயங்களும், கலாசாரமும் தோற்றம் பெற்றன. சமயங்கள் மனித வாழ்வை நெறிப்படுத்தவும், ஒழுக்கத்தைப் போதிக்கவும் தோன்றியவை. சமய விழுமியங்களைப் பேணுவதன் மூலம் வாழ்கையை செப்பனிட்டுக் கொள்ள முடியும். இதனையே 'சமயமின்றேல் வாழ்வில்லை' எனும் தொடர் விளக்குகின்றது.

ஒவ்வொரு சமயங்களும் ஒவ்வொரு விதமான சம்பிரதாயங்களையும், கலாசாங்களையும் பின்பற்றுகின்றன. வணக்க வழிபாட்டு முறை, திருமணச் சடங்கு முறை, பூப்பெய்தல் சடங்கு, பொழுதுபோக்கு முறை என்பன ஆரம்பகாலத்தில் மிகவும் கண்ணியமாக கடைப்பிடிக்கப்பட்டு வந்தன. ஆனால் கற்காலத்தில்லோ அவை 'மாறுதல் இந்த ஜகத்தின் முதலாவது விதி' என்ற பாரதியாரின் கூற்றுக்கிணங்க மாறி வருகின்றது.

ஆரம்பத்தில் காலங்களில் தமிழர் பண்பாட்டு விழுமியங்களை ஒரு திருமண நிகழ்விலேயே கண்டு கொள்ளலாம். திமணத்தை ஆயிரம் காலத்துப் பயிர் என வர்ணித்தனர். திருமணத்திற்கு முதல் நாள் சடங்குகள், பந்தற்கால் நடுதல், மணமகன் - மணமகள் விளையாட்டுக்கள் போன்றன நடைபெற்று வெகு விமர்சையாக திருமணங்கள் நடைபெறும். இஸ்லாமிய சம்பிரதாயங்களின் படி பெண்கள் அழைப்பு, பெண்கூட்டுதல், வலீமா என திருமணச் சடங்குகள் நடைபெறும். ஆனால் தற்காலத்தில் பாடசாலை விளையாட்டுப் போட்டி போல் ஒரே நாளில் திருமணம் முடிந்து விடுவததாகச் சுருங்கிவிட்டது.

இதே போல் தான் பெண்களது பூப்பெய்தல் சடங்கு முறைகளும் மாற்றமடைந்துள்ளன. ஆரம்பகாலத்தில் ஒரு பெண் பருவ வயதை அதாவது வயதுக்கு வந்தால் சம்பிரதாயங்களின் படி மஞ்சள் நீராட்டுதல், சத்துணவுகள் உண்ணக்கொடுத்தல் குறிப்பிட்ட காலத்திற்கு வீட்டிற்குள் வைத்திருத்தல் என்பன நிகழ்த்தப்படுகின்றன. இவற்றைப் பெண் அடிமைத்தனம் எனக் கூறுவது மாற்றான்களுடைய கருத்தாகும். இவையே சமூகத்தில் பெண்களுக்குள்ள அந்தஸ்த்தை அதிகரிக்கின்றது. அனால் தற்காலத்திலோ பெரும்பாலான சமுதாயங்களில் இதனை அலட்சியமாக நினைத்து விடுகின்றனர.

அது மட்டுமல்லாமல் சம்பிரதாயங்களும், கலாசாரங்களும் சமூக வாழ்க்கையோடு மட்டுமல்லாமல் அரசியல், விளையாட்டு, இலக்கியங்கள் போன்ற பல்வேறு துறைகளிலும் பேணப்படுகின்றன. ஆனால் அமையும் காலவோட்டத்தால் மாற்றத்திற்கு உட்பட்டுத்தான் வருகின்றது. இவை எமது சமுகத்தில் கண்கூடு. அரசியல் என்பது மக்கள் நலனுக்காக பாடுபடும் ஒரு செயலொழுங்கு. அச்செயலொழுங்கு ஆரம்பத்தில் முறையாக வழிப்படுத்தப்பட்டது. ஆனால் தற்காலத்திலோ ஜனநாயகம் என்ற போர்வைக்குள் இருந்து கொண்டு சர்வாதிகாரம் நடாத்தும் ஒன்றாக மாறியுள்ளது. அதே போல் விளையாட்டுக்களில் கூட முன்னைய காலங்களில் பொழுது போக்காக இருந்தாலும் சம்பிரதாயங்களும் கலாசாரமும் கொண்டதாக கிராமியப் பண்புகளை வெளிப்படுத்தக் கூடியன. இலக்கியங்கள் ஆரம்பகாலங்களில் மன்னர்களதும், வள்ளல்களதும் வீரம், கொடை, நாட்டு வளம்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்பனவற்றை காட்டுவதன் மூலம் கலாசாரப்பாரம்பரியம் பேணப்படுகிறது. எடுத்துக்காட்டாக நளவெண்பா, நந்திக்கலம்பகம் போன்றவற்றைக் குறிப்பிடலாம். ஆனால் தற்கால இலக்கியங்களோ வெற்றுச் சொற்களுடன் சமகால நிகழ்வுகளையும், நவீனத்துவத்தையும் கொண்டுள்ளது.

இவ்வாறாக பல்வேறு துறைகளிலும் மாற்றங்கண்டு வரும் கலாசார, சம்பிரதாயங்கள் எவ்வாறு மனித வாழ்வில் செல்வாக்குச் செலுத்துகின்றன? இம்மாற்றங்களுக்குரிய காரணங்கள் எவை? என ஆராய்வது மிகவும் பயன்மிக்கதாக அமையும்.

சம்பிரதாய கலாசார மாற்றங்களுக்கு மிகப் பிரதான காரணம் நாகரிக வளர்ச்சியும் மாற்றங்களும் ஆகும். மனிதனது சிந்தனைத் திறன் நாளுக்க நாள் அதிகரிக்கக் கூடியது. இதன் மூலம் அறிவு வளர்ச்சியில் மிக்க உத்வேகத்துடன் செயற்படும் மனிதன் காலத்திற்கேற்றாற்போல் தனது நடை, உடை, பாவனை மற்றுமன்றி பழக்கவழக்கங்களிலும் மாற்றங்களை ஏற்படுத்திக் கொண்டான் ஆரம்ப காலங்களில் வீட்டில் நடைபெறவிருக்கும் சில விழாக்களில் விருந்தினர்களை வரவேற்பதற்காக பசு மர இலைகள், மரங்கள் என்பவைகளால் அலங்கரித்து மாக்கோலமிட்டு வரவேற்பர். நாகரிக மாற்றத்தின் காரணமாக தற்காலத்தில் 'வோர்ம்லி வெல்கம்' (Warmly Welcome) என ஆங்கிலத்தில் ஒரு பலகையில் எழுதிவிட்டு அலங்கார படங்கள் சுவரில் ஒட்டி பாரம்பரிய சம்பிரதாய கலாசாரங்களைப் புறக்கணிக்கின்றனர்.

---

**கிழக்கு மாகாண கலை இலக்கியப் பெரு விழா – 2014**

நாட்டார் பாடல் இசைத்தல் - திறந்த பிரிவு

**(பிரதேச மட்டம்: 1ம் இடம், மாவட்ட மட்டம் : 2ம் இடம்)**

ஜனாப். ஏ.எல்.எம். காலித்

**கிழக்கு மாகாண கலை இலக்கியப் பெரு விழா – 2014**

சித்திரம் - திறந்த பிரிவு

**(பிரதேச மட்டம்: 1ம் இடம், மாவட்ட மட்டம் : 1ம் இடம்)**

திருமதி. எச்.யு.ஏ. அஸீஸ்

**தேசிய இலக்கிய கலைப் பெருவிழா - 2014**

சிரேஷ்ட பிரிவு – கவிதை பாடல் போட்டி – முதலாம் இடம்

செல்வி. ஏ.ஆர். பாத்திமா அதீபா

மட்/மம/ மீரா பாலிகா தேசிய பாடசாலை, காத்தான்குடி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கிழக்கு மாகாண கலை இலக்கியப் பெரு விழா - 2014**

பாடலாக்கம் - சிரேஷ்ட பிரிவு

**(பிரதேச மட்டம்: 1ம் இடம்)**

செல்வி. ஏ. இஸெட். எப். ஜெய்றூஸா
மட்/மம/ மிரா பாலிகா தேசிய பாடசாலை

மனிதம் மலரட்டும்
புனிதம் வளரட்டும்

மண்ணில் மனிதம் மலரட்டும்!
கண்ணில் கருணை இருக்கட்டும்!
தன்னில் புனிதம் வளரட்டும்!
தத்துவம் வாழ்வில் நிலைக்கட்டும்!

வேற்றுமை உணர்வு அழியட்டும்!
வேதாந்த கொள்கை ஒழியட்டும்!
ஒற்றுமைக் கீதம் ஒலிகட்டும்
ஓரணியில் அனைவரும் சேரட்டும்!

நேசம் நெஞ்சில் பரவட்டும்!
பாசம் உறவில் படரட்டும்!
வேசம் என்றும் கலையட்டும்!
கோசம் ஒன்றாய் இருக்கட்டும்!

சாதிவெறி நீங்கட்டும்!
நீதி நெறி ஓங்கட்டும்!
ஆதியிறை படைப்பினை
அனைத்தையும் ஒன்றாக பார்க்கட்டும்!

சாந்தி சமாதானம் மலரட்டும்!
சகவாழ்வு வாழ்வில் கிடைக்கட்டும்!
சுதந்திரம் என்றும் இருக்கட்டும்!
சுபீச்சம் நாளும் சுரக்கட்டும்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கிழக்கு மாகாண கலை இலக்கியப் பெரு விழா - 2014**
சிறுகதை - சிரேஷ்ட பிரிவு
**(பிரதேச மட்டம்: 1ம் இடம், மாவட்ட மட்டம்: 3ம் இடம்)**
ஆதம் லெப்பை பாத்திமா அப்கா
மட்/மம/ மத்திய கல்லூரி (தே.பா)

# அமானிதம்

"சஹ்றானாம்மா....."

நேற்று பூராகவும் என்னுல் இருகிப்போயிருந்த மௌனம் விலகி...;

முதன் முதலில் வெளிவந்த வார்த்தை;

இதோ வந்திட்டன்;

சொல்லிக் கொண்டே ஓடி வந்தவள் மெல்லிய மூச்சிறைப்புடன் நின்று;

என் பக்கமாக நீட்டிய வலது கையில் கடையின் சாவிக் கொத்து; ஒரு சின்ன அதிர்வுடன் அவள் கண்களைப் பார்க்கிறேன். அதில் அப்படியொரு தீர்க்கமான தெளிவு. என் கைகள் இரண்டையும் வாஞ்சையோட பற்றி மேடான தன் வயிற்றில் வைத்தாள்...

'நான் மட்டுமில்லை. இன்ஷா அல்லாஹ். உங்க பிள்ளையும் உங்கள புரிஞ்சுக்குவான்; அது உங்க கடை. அதை நிமிர்த்த உங்களால் முடியும். அல்லாஹ்ட காவலா போயிட்டு வாங்க'

வெந்த நெஞ்சை மயிலிறகால் தடவி விட்டது போன்ற ஆறுதலான வார்த்தைகள். கண்கள் கலங்க அவள் முகத்தை நிமிர்ந்து பார்க்கிறேன்.

சஹ்றானா.... என் இரண்டாவது மனைவி முதல் மனைவி மும்தாஜ்; அவளோடு காலங்களைப் பகிர்ந்து கொண்டதில் கிடைத்த இரண்டு பிள்ளைகள். இருவருக்கும் சொத்து சேர்த்து சோடியும் சேர்த்து; மனைவியையும் மக்காவிற்கு அழைத்துச் சென்று அல்ஹம்துலில்லாஹ் என ஆறுதலை நினைத்த போதுதான் அபலையாக என்வாழ்வில் வந்து சேர்ந்தாள். சஹ்றானா. முட்களும் கற்களுமான அவள் பாதையில் அவள் பெற்றுக் கொண்ட காயங்களை அறிந்த போது அதிர்ந்து போனேன். என் மனைவியையும் மக்களையும் பூப்போல் பாதுகாத்ததில் பெண்ணாகப் பிறந்ததானாலேயே அவளுக்கு ஏற்பட்ட சோதனைகளை என்னால் ஜீரணிக்க முடியாமல் போனது. அவள் காயங்களை ஆறவிட்டு கலங்கரை ஒன்றைக் காட்ட வேண்டுமென்று தான் ஒரு கோணத்தில் முயற்சிக்க.... அவளோ... காயங்களுக்கு மருந்தாக என்னையை கேட்டு கண்ணீருடன் வாதாடிய போது யா அல்லாஹ்! ஒரு எல்லைக்கு மேல் என்னால் மறுக்க முடியவில்லை முழு மனதோடு அவளது உறவை அங்கீகரித்து கொண்டேன்.

என் கட்டுப்பாட்டையும் மீறி கண்களில் துளிர்ந்த கண்ணீர் துளிகளை தன் கைகளினாலேயே துடைத்து அழித்தவள்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'நம்பிக்கை துரோகத்திற்கு அல்லாஹ் தீர்ப்பளிப்பாங்க. நீங்க எதுக்கு கலங்கனும் யாருக்கும் அநியாயம் நினைக்காத உங்க மனசுக்கு எல்லாம் நல்ல படியாகவே நடக்கும் போயிட்டு வாங்க'

நோவினைப்பட்ட கல்பையும் சஹ்னாவின் நம்பிக்கை நிறைந்த வார்த்தைகளையும் சுமந்தபடி வெளியேறினேன்.

மொத்தமாக 5 வருடங்கள் தொழிலுக்குப் போக வேண்டும் என்ற எண்ணத்தோடு எழும்பி பரபரப்பாக வெளிக்கிட்டு பயணம் செய்வதை தவிர்த்து அமைதியாக நிம்மதியாக மனதிற்குப் பிடித்த மார்க்க விடயங்களில் ஈடுபட்டு பொழுதுகளை கழித்தேன். எல்லாமே முடிந்து விட்டது. நீண்ட பெருமூச்சொன்றுடன் பிரதான வீதியை எட்டிய எனது வாகனம் மட்டக்களப்பை நோக்கிய தனது பயணத்தை தொடர்ந்தது.

எத்தனையோ தடவைகள் இதே பாதையால் இதே வாகனத்தில் போய் வந்து தான் இருக்கின்றேன். ஆனால் இதைப் போல் கனத்த நெஞ்சைச் சுமந்தபடி பயணம் செய்ததே இல்லை. எனது பயணம் முன்னோக்க நினைவுகளோ பின்னோக்கி நகரத் தொடங்கியது.

'ஆஸாத்...' ஒட்டிய வயிறும் கலங்கிய கண்களுமாக தனது தாயுடன் எனது வீட்டுப் படியேறிய போது...; அவனுக்கு வயது பதினைந்து என்றால் யாருமே நம்பமாட்டார்கள். வறுமையும் பசி பட்டிணியும் அப்படி அவனைக் கழித்துப் போட்டிருந்தது. கூடப் பிறந்த ஆண் சொந்தங்களுமில்லாமல் பெற்றெழுந்த ஆண் வாரிசமில்லா ஏங்கிக் கிடந்த என்னால் ஏனோ அவனை நிராகரிக்க முடியவில்லை.

'ரொம்ப கஸ்டப்பர்ரம் ஹாஜியார். வயித்துக்கு சோறும் உடுக்க துணியும் குடுத்தாப் போதும் அவனெண்டாலும் உங்க கடையில பொழச்சிக் கிடக்கட்டும்'

கண் கலங்கிய தாயிடம் மறுநாளே வரச் சொல்லி வழியனுப்பி வைக்கின்றேன். மறு நாள் விடிகாலையிலேயே கதவு தட்டி படியேறியவனை இருப்பாட்டி வயிறு நிறைய சாப்பிட கொடுக்கும் படி மும்தாஜிடம் சொல்லுகின்றேன். சாப்பிட்டுக் கை கழுவி ஏப்பம் விட்டதுதான் தாமதம் சுற்றிச் சுழன்று அவன் செய்த வேலை வெட்டிகளில் நான் மட்டுமல்ல மும்தாஜே ஆடிப்போனாள். 'ஷ்ஷா... என்ன அருமையான பொடியங்க வளவு கூட்டி மரம் மட்டக்கொல்லாம் தண்ணி ஊத்தி ஏனம் சாமானெல்லாம் கழுவி காலையில உள்ள வேல ஒண்டையும் உடல்லங்க. எல்லாத்தையும் முடிச்சிட்டான். ஆண் தொணையில்லாத உங்களுக்கு ரொம்பவும் உதவியா இருப்பாங்க. ஆள உட்டுறாதீங்க.'

மும்தாஜ் சொல்ல முதலே எனது வியாபார மூளை அவனைக் கணக்கெடுத்து விட்டது. கெட்டிக்காரன்; கொஞ்சம் உஷாராக்கிய ஆஸாத் என்னையே கணக்குப் பண்ணுவானென்று யார் கண்டார்கள்.

ஓடி ஆடி செய்யும் வேலைகளிலேயே ஒரு வருட பொழுதைக் கழித்தவன் வீட்டில் கடையில் மட்டுமல்ல, அக்கம் பக்கத்திலும் அப்படியொரு நல்ல

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெயரை வாங்கி விட்டான்.
'ஹாஜியாருக்கு கெடச்சிருக்கான் பாருங்க ஒரு பொடியன். நானும் வருஷக்கணக்கா தேடுறன் வந்து ஒரு மாசத்துக்கு மேல தாக்குப் பிடிக்கானுகள் இல்லயே. பொடியன் தேர்ரத்திலயே பொழுதெல்லாம் போயிடுது'

அங்கலாய்ப்பவர்கள் அத இதச் சொல்லி ஆஸாத்தின் 'மனதை' கலைத்துவிடக்கூடாதென்பதால் அவனோடு சேர்த்து அவனது குடும்பத்தையும் கவனித்துக்கொண்டேன்.

நான் எதிர்பார்த்ததுக்கும் மேலாகவே கடைக்குத் தேவையான பொருட்களின் கொள்வனவு வங்கி கொடுக்கல் வாங்கல் என வியாபார நுணுக்கங்களையெல்லாம் ஆஸாத் வெகுசீக்கிரமாக கற்றுக்கொண்டான். காலம் யாருக்கும் காத்திருக்காமல் நகர என் கண்முன்னாலேயே வளர்ந்து வளர்ந்து வாலிபனான என்கூடப் பிறக்காத சொந்தமாகவே மனசுக்குள் வரிந்து கொண்டேன்.

ஒன்று பார்த்தாற்போல ஆரம்பித்து எனது இரண்டு பெண்மக்களின் வீட்டு வேலைகள் தொடர்ந்து கலியாண ஏற்பாடுகள்... ஆஸாத் பகல் பொழுதெல்லாம் கடையில் மாரடித்துவிட்டு வந்தாலும் இரவில் நித்திரை ஓய்வென்று கொஞ்சம் கூட அசரமாட்டான். எல்லாவற்றையும் இழுத்துப் போட்டுக்கொண்டு செய்வான்.

நான் தான் 'இதப்பாரு ஆஸாத் நாளைக் காலையில பொழுதோட எழும்பி கடயத்தொறக்கப் போகனும். இதெயெல்லாம் பார்த்துக்க இஞ்ச ஆள் பேரில்லயா..? போ... போய் கொஞ்சம் நேரம் கண்ணசரு'

நான் சொன்னால் மட்டுமென்ன உதட்டுக்குள் ஒரு சிரிப்புடன் தலையாட்டிக் கொள்வான். என் எதிரில் ஒரு வார்த்தை மறத்துப் பேசமாட்டான். கலியாணமும் கைகூடி வந்து ஆறுமாத இடைவெளியில் அடுத்தடுத்து என் இரண்டு பெண்களுக்கும் நிகழ்த்தப்பட்ட விசேஷங்கள்... என் பொறுப்புக்களிலெல்லாம் ஒரு துளி கூட குறையில்லாமல் பங்கெடுத்துக் கொண்ட ஆஸாத்தை வீட்டில்; கடையில் மட்டுமல்ல என் கல்பிலும் இருத்திக் கொண்டேன்.

பெரும் பொறுப்புகலெல்லாம் முடிந்து மனைவியுடன் ஹஜ் பயணம் வெளிக்கிட்ட பின்தான்...

'ஆஸாத், அல்லாட நாட்டப்படிதான் எல்லாம் நடக்கும். எனக்கு ஆண் புள்ளையொன்ட தரல்லயேன்னு என்வளவோ சஞ்சலப்பட்டேன். அல்ஹம்துலில்லாஹ், அல்லாஹ் உன்னை அடையாளம் காட்டிட்டான். இந்தா இத வலது கையால வாங்கிக்க. கடைக்குரிய எல்லாச் சாவியும் இதிலதான் இரிக்கி. உன்ன பெத்த புள்ளயாட்டம் நெனச்சி பெரும் பொறுப்ப தந்திட்டன். இன்டைக்கு என்ட கல்பு பூப்போல ஆயிடிச்சி. நாளக்கி நாங்க பயணம் வெளிக்கிர்ரம். மத்தபடி எல்லாமே அல்லாட அமானிதம்'

சொல்லிவிட்டு புறப்பட்ட நாங்கள் சகல சௌகரியங்களுடனும் வணக்க வழிபாடுகளை முடித்து விட்டு ஊர் திரும்பினோம். என்னோட கடை சில்லறைக் கடைக்குரிய பொருட்களை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மொத்தமாக வாங்கக் கூடிய ஹோல்சல் கடை. அதன் பிறகு கடைக்கு நான் போகவில்லை. மட்டக்களப்ப பக்கம் ஏதும் அலுவல் சலுவல் இருந்தால் மட்டும் கடைப்பக்கமும் ஒரு நடை போய் பார்த்துவிட்டு வருவேன். அவ்வளவுதான் ஆஸாத்தான் விரல் நுனியில் கடையின் கணக்கு வழக்குகளை வைத்திருந்து ஒவ்வொரு கிழமை முடிவிலும் என்னிடம் வந்து ஒப்பு வித்து விட்டுப் போவான்.

ஊரின் நன்மை தீமை மார்க்க விடயங்களில் எனது கவனத்தை செலுத்திக் கொண்டிருந்த போது தான் சஹானாவும் என் வாழ்வில் வந்து சேர்ந்தால். இரண்டாவது தாரமென்றாலே எதிப்புகளுக்கும் குறைவிருக்கதே. மும்தாஜும், மும்தாஜின் குடும்பத்தினர்களும் ஒரு பக்கம் நெருட.... வெறும் வாயை மெல்லும் ஊர்ப்புறம் போக்குகளின் குதர்க்கமான கதைகள் ஒரு பக்கம் நெருட.... பிழை செய்தாதால் தானோ தலைகுனிய வேண்டும்.. எம் பெருமானார் நாயகம் (ஸல்) அவர்களின் நடைமுறையில் ஒன்றைப் பேணி அபலை ஒருத்திக்கு வாழ்வு கொடுத்திருக்கிறேனென்ற அந்த ஒரு திருப்தியே தெம்பைத்தர... இதெல்லாவற்றுக்கும் முகம் கொடுத்ததில் நாட்கள் நகர்ந்ததே தெரியவில்லை.

'புது வீட்டுக்கு குடிபோறன் முதலாளி நீங்க குடும்பத்தோட கண்டிப்பா வந்திருங்க...'

அழைப்பிதழ் நீட்டிய ஆஸாத்தை பூரிப்போடு பார்க்கின்றேன். அவன் வீடு கட்டுவது ஏற்கனவே எனக்குத் தெரிந்த விடயம். அழைத்த தினத்தன்று சந்தோஷத்துடன் சஹானாவையும் கூட்டிக்கொண்டு செல்கின்றேன். உண்மையிலேயே அவர் கட்டிய வீடு அப்படிப் பெரிதாக இருக்குமென்று நான் எதிர்பார்கவேயில்லைதான்.

'பொம்புளப் புள்ளக்கி வாப்பாவாயிட்டேனில்லையா? கொஞ்சம் கொஞ்சமா சேமிச்சு சீட்டுக்கட்டி கடன் உடன் வாங்கித்தான் வீட்ட முடிச்செடுத்தன்'

ஆஸாத் கவலையோடு வந்தவர்களிடம் ஆதங்கப்பட்டுக் கொண்டது என் காதிலும் விழுந்தது. 'அவன் கெட்டிக்காரன்...' புளகாங்கிதத்தோடுதான் விருந்தில் கலந்து கொண்டு வீடு வந்து சேர்ந்தேன்.

இடையில் பள்ளிவாசல் ஊர்வேலையென்று ஓடித்திரிந்ததில் இரத்த அழுத்தம் கொஞ்சம் அதிகமாகி வைத்தியசாலயில் இருந்து ஓய்வு எடுக்கும் படியும் ஆகிவிட்டது. பார்க்க வந்த இனசனத்தில் எனது மட்டக்களப்பு கடைக்கருகில் கடைவைத்திருக்கும் நண்பர்கள் அரசல் புரசலாக கதைத்ததை கணக்கொடுக்காவிட்டாலும் நான் நெருங்கிப் பழகும் மக்கீன் ஹாஜியார் 'கபூர்! என்னாலயும் நம்பேலாமத்தான் கெடக்கு, மனிசன் கதைக்கிற கத உண்ட காதிலயும் உழாம உட்டிரிக்கா, இவன் ஆஸாத்திட போக்கே சரியில்லாடப்பா. ஊடு கட்டிப் போட்டான். கார் வாங்கி ஓர்ரான். கேட்டா; கூட்டாளிட காரெண்டு சொல்றான். போக்கெல்லாம் பெரும் போக்காத்தான் கெடக்கு. நீ பெத்த புள்ளயப் போல நெனச்சிட்ட எதுக்கும் கொஞ்சம்

..........................................

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கீன் ஹாஜியார் சொன்னதை முழுவதுமாக என்னால் நிராகரிக்க முடியவில்லை. ஏனென்றால் அவர் எல்லோரையும் போல இல்லை. எதையும் கவனின்காமல், யோசிக்காமல் கதைக்கவே மாட்டார். என் மனசிலும் கறுத்தப் புள்ளியொண்று விழுந்துவிட்டது.

சஹானா உண்டாகி இருக்கிறாள் என்ற சந்தோஷமான செய்தியோடுதான் வைத்தியசாலையிலிருந்து வீடு வந்து சேர்ந்தேன். சந்தோஷமென்றால் அப்படியொரு சந்தோஷம். ஆண் குழந்தையொன்றின் முகம்தான் குறுகுறுவென என்மனமெல்லாம் ஓடிக்கொண்டிருந்தது. மறுபடியும் கடமையும், பொறுப்பணர்ச்சியும் கூடிவிட்டது போன்றதொரு உணர்வு. மனைவிக்கும் மகளுக்கும்மென்று பிரித்துக் கொடுத்ததில் எனக்கென்று பெரிதாக எதுவுமே என்னிடம் இருக்கவில்லை. போற துனியாவில நமக்கெதற்கென்று விட்டுவிட்டேன். சஹானாவையும் முகம் தெரியாத அந்தப் பிஞ்சு உயிரையும் படைத்தவன் என்னிடம் அமானிதமாகத் தந்துவிட்டான். அவர்களையும் பாதுகாக்க வேண்டுமென்ற எண்ணம் மேலோங்கும் போதெல்லாம் தொழிலைப் பற்றிய கவலையும் மனசுக்குள் குமிழ்விட்டுப் போனது. டொக்டரின் ஒரு மாசம் கண்டிப்பாக ஓய்வெடுக்க வேண்டும் என்ற கட்டளை என்னை கட்டிப்போட நிமிஷங்களை எண்ணியபடி காத்திருந்தேன்.

அன்று சனிக்கிழமை, சஹானாவும் வீட்டிலில்லை. ஒவ்வெறு வாரமும் வந்து அந்தக் கிழமைக்குரிய கணக்கு வழக்குளை 'பக்கா'வாக ஒப்படைத்துப் போகும் ஆஸாத் அன்று நேரகாலத்தோடையே என்னைத் தேடி வந்துவிட்டான்.

'இன்டைக்கி கொஞ்சம் வேலையிரிக்கி முதலாளி அதான்..' என்று கூறி அந்தக் கிழமைய கொடுக்கல் வாங்கல் இருப்பு எடுப்பென்று சகலதையும் ஒப்படைத்த போது எனது மனம் ஒரு கணம் விசித்துப் போனது. நாலைஞ்சு வருஷமாப் பெய்த்து இது வரைக்கும் ஒரு சதம் கூட நஷ்டம் காட்டவில்லை. எப்போதும் போல லாபகரமாத்தான் தொழில் ஓடிட்டிரிக்கி... பிறகு எங்கால கொள்ளையடிக்கிற... களவெடுக்கிற. மனிஷன்ட கதைக்கிப் பொறத்தால போனா நம்மட மூளதான் குழம்பிப் போகும். ஆஸாத் போன பிறகும் சில நிமிடங்கள் யோசகையிலே இருந்த நான் தற்செயலாகத் திரும்பிய போதுதான் அதைக் கண்டேன். 'ஷா... முக்கியமான சாமான உட்டுட்டுப் போயிட்டான்டப்பா,

எனது அனுதாப எண்ணம் முடியும் முன்பே அந்த கைத்தொலைபேசி ரிங்டோன் அழைக்க...; ஆஸாத்தான் போன் எங்கே இருக்கென்டு உறுதிப்படுத்திக் கொள்ள அழைக்கின்றானாக்கும் என்று சட்டென்று போனைத் தூக்கி 'ஆன்' பண்ணுகிறேன்.

'ஹலோ ஆஸாத்தானே'

என்று கேட்ட குரல் நான் பதில் சொல்ல முதலே மளமள என்று கொட்டிய வார்த்தைகள்...! யா அல்லாஹ். அந்த நிமிடம் எனக்குள் ஏற்பட்ட பிரளயத்தை வடித்திட வார்த்தைகள் கிடைக்குமா? அல்லாஹ் அளவில் அமானிதப்படுத்தி ஒப்படைத்த ஒரு தொழில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிருவாகத்தில் இவ்வளவு அற்புதமாக ஆரோக்கியமாக கொள்ளையடிக்க எப்படி அவனுக்கு மனசு வந்தது. இலட்சக்கணக்கில் கொள்முதல் செய்யப்படும் பொருட்களுக்கு கொமிஷன் வைத்து விலைபேசி அவனே தரகுக் கூலி பெற்றுக் கொண்டு பொருட்களை கொள்வனவு செய்கின்றான். அந்த விபரங்கள்தான் நான் கைத்தொலை பேசியில் கேட்டதெல்லாம். பெத்த புள்ளையாட்டம் நினைச்சி அமானிதமாக ஒப்படைத்தேனே… தாயோட முலைப்பாலையே விலை பேசி வித்த கணக்கா ஆயிடுச்சே! அவன் கட்டிய வீடு… வாங்கிய கார் எல்லாவற்றின் முடிச்சும் ஒவ்வொன்றாக அவிழ நம்பிக்கை துரோகம் தந்த அதிர்ச்சியில் சாய்மனையில் நிலை குலைந்து சரிகின்றேன்.

ஐந்து வருடங்களின் பின்பு முழுவதுமாக கடையில் நான் கழித்த முதல் நாள், மஹ்ரிப் தொழுகையை முடித்து விட்டு கடையைப் பூட்டி சாவியை இடுப்பில் செருகியவாறு ஊரைநோக்கி திரும்புகிறேன். காத்தான்குடி வரவேற்பு நுழைவாயிலில் அப்படியொரு அடங்காத சனத்தரள்.. பலபக்கத்தாலும் வெடிக்கும் பட்டாசுச் சத்தம்… ஒரு வழியினாலும் உள் நுழைய முடியாத நிலையில் நின்று காலை நிலத்தில் ஊன்றி நிதானிக்கின்றேன். சனத்தையும் ஹோர்… வென்ற இரைச்சலையும் தவிர எதுவுமே புரியவில்லை பக்கத்தில் தொப்பியணிந்து என்னைப் போலவே காத்து நின்றவரைப் பார்த்துக் கேட்கின்றேன். என்ன ஹாஜியார் ஊரில என்ன விஷேசம்? என் கேள்விக்குப் அவர் என்னை ஏற இறங்கப் பார்ப்பது எனக்கத் தெரிந்தது.

என்ன தெரியாதது போலக் கேக்கிறீங்க. நம்மிட அக்ரம் தம்பி எலக்ஸென்ல நிண்டு வெண்டாருதானே… அவருக்கு அந்த மாதிரியான சூப்பர் மினிஸ்டர் போஸ்ட் ஒண்ட கவர்மெண்ட் கொடுத்திருக்கு… அத ஊர்ல கொண்டாடத்தான் இந்த தடபுடல். இப்ப மினிட்டர ஊர்வலமா கூட்டிட்டு வருவாங்க..

எனக்கு உண்மையிலேயே அரசியலெல்லாம் அதிகம் தெரியாது. அத யோசிக்கிர அக்கறையில்லை. சும்மா உரு பேச்சக்காகத் தொடர்ந்தேன்.

அந்த கணக்கொல்லாம் கட வழிய எழுதப் போராரே ஹாயத்துக் கலந்தர். அவர்ர கடைசி மகன்தானே அக்ரம்…

ஷ்… சத்தம் போட்டு அவர்ர பேர அப்பிடிச் சொல்லாதீங்க. நீங்க சொல்றதெல்லாம் பழைய காலத்து அடையாளம். இப்ப மினிஸ்டர்ர வாப்பா. வாப்பாட கணக்கு வழங்கல் நம்பிக்கை வைச்சு அத்தின சொத்துபத்தையும் மகன் வாப்பாட பேர்லதான் வாங்கிப் போட்டிருக்காரு.

அவர் பயந்த சாங்கத்தைப் பார்த்து தொண்டைக் குழிக்குள் சிக்கிய எனது அடுத்த சந்தேகம் எனது அனுமதி இல்லாமலேயே வெளியில் வந்து விட்டது. எம்.பி மிஸ்டர் மாருக்கெல்லாம் அந்தளவு சொத்து சுகம் சேர்க்கிற மாதிரியா அரசாங்கம் சம்பளம் கொடுக்குது.

என் நியாயமான சந்தேகத்தை அவர் என்ன மாதிரி எடுத்துக் கொண்டாரோ விழுந்து விழுந்து சிரிக்கத் தொடங்கியவர் அந்த சிரிப்பு மாறாமலேயே..

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்னங்க நீங்க அரசியல் நிலவரமே தெரியாத ஆளா இருக்கிறீங்க. ஊரிலதான் இருந்திங்களா.. இல்ல... வெளிநாட்டில எங்கயாச்சும் இருந்திட்டு வந்தீங்களா? அரசாங்கம் கொடுக்கிற சம்பளத்தை எதிர் பார்த்து அரசியல் பண்ண எவன் வருவான்.... அபிவிருத்தி அது இது என்று ஒவ்வொருத்தருக்கும் ஒதுக்கப்படும் வேலைத்திட்டங்கள் நடைமுறைப் படுத்திருப்போ கெடைக்கிற கொமிஷனே போதுமேடப்பா சொத்து சுகமென்ன சுவர்க்கத்தையே வாங்கலாம். கன்னத்தில் ஓங்கி அறைந்ததைப் போலிருந்தது அவரின் பதில். அற்புதமான ஆரோக்கியமான கொள்ளை நல்லதா கெட்டதா? மக்களுக்க பிரயோசனப்படுமா இல்லையா? என்பதைப் பற்றியெல்லாம் கவலைப்படாமல் அமானிதமாக ஒப்படைத்த உடையவனுக்கும் தெரியாமல் யார் கொமிஷன் அதிகமாகத் தருகின்றார்களோ அவர்களிடமே பொருட்களை கொள்வனவு செய்த ஆஸாத் என் ஞாபகத்தில் வந்து போனான். பெற்ற தாயின் முலைப் பாலையே திருடி விற்கும் கயவர்கள்... த்தூ..! மானசீகமாக காறி உமிழ்கிறேன். எனக்கிப்போது அரசியலும் புரிந்தது. நான் போட்ட வோட்டின் பெறுமதியும் புரிந்தது.

அமானிதமாக ஒப்படைப்பதில் மோசம் செய்து நம்பியவர்களை ஏமாற்றுவதென்பது சாதாரண விடயமா? அந்த வலியும் வெதனையும் நம்பி ஏமாந்தவர்களுக்குத் தான் தெரியும். சனத் திரளும் சத்தமும் ஓரளவு விலக வாகனத்தை ஸ்டார்ட் பண்ணி முன்னோக்கி செலுத்துகிறேன். நீதியான நேர்மையான மனிதர்களைத் தேடி மனம் அங்கலாய்த்து துடிக்கிறது. கற்பனை காணும் எனது சின்ன மகனின் பிஞ்சுக் கரங்கள் நம்பிக்கையோடு பற்றிக் கொள்ள என்னை அழைக்க... நாளைய விடிவில் நிச்சயம் நல்லது நடக்குமென்ற நம்பிக்கையோடு வீட்டை நோக்கிய எனது பயணத்தைத் தொடர்கின்றேன்.

நிறைவு

அமானிதம் - பொறுப்புக் கூறல்

கல்பு – மனம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிழக்கு மாகாண கலை இலக்கியப் பெரு விழா - 2014
கவிதை - திறந்த பிரிவு
(பிரதேச மட்டம்: 1ம் இடம்)

திரு. எம்.எம். றசுல்ஷா

# அயல் வீட்டு அந்நியர்கள்

சொந்தம்கள் என்று சொல்லி
நெஞ்சத்தில் வைத்தவர்கள்

நண்பர்கள் என்று சொல்ல
நம்மோடு இருந்தவர்கள்

வேற்றுமை கண்டதனால்
வெறுமையாய் கதைத்தாரோ?

ஒண்டு ரெண்டு வருஷம் போக
ஒத்தருமே கூட இல்ல
வெள்ளை முடி வெளிய வரும்
வேதனையும் கூட வரும்

வைராக்கியம் வைச்சகாள
வந்த பயன் ஒண்டுமில்ல
அயல்வீட்டு அந்நியர் போல்
எத்தன நாள் பேசுவிங்க
அத்தன நாள் காத்திருக்க
எழுதி வைச்ச வாழ்க்க இல்ல
இப்பவுமே முடிஞ்சிறலாம்
அந்நியரான பயணமது...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கிழக்கு மாகாண கலை இலக்கியப் பெரு விழா - 2014**

பாடல் ஆக்கம் - திறந்த பிரிவு
(பிரதேச மட்டம்: 1ம் இடம், மாவட்ட மட்டம் : 3ம் இடம்)

எச்.எம்.எம். இப்றாஹீம் (நத்வீ)



திறந்த பிரிவு – பாடல் ஆக்கம்
இராகம் - அம்மா என்றழைக்காத உயிரில்லையே

அல்லாஹ் என்றழைக்காத நாவில்லையே
அல்லாஹ்வை புகழாத பொருளில்லையே
எம்மை ஆக்கி என்றும் காக்கும்
வல்ல இறையன்றி வேறொன்று ஏது?

உடலாக்கி, உயிராக்கி, ஆணாக்கி, பெண்ணாக்கி
உயிராக்கி வைத்தோனே நீதானல்லாஹ்
கண்ணாக்கி ஒளியாக்கி, காதாக்கி ஒலியாக்கி
எனையாளும் வல்லோனே நீதானல்லாஹ்
கைதந்து, கால்தந்து, கடமைகள் நான் செய்ய
அருள் செய்த வல்லோனே என் நாயனே
உயர்ந்தாலும் தாழ்ந்தாலும் எந்நாளும் நானுந்தன்
அப்தாக வாழ்கின்ற வரம் தாருமே
அதை நீயே.... அருள் வாயே....

இளமங்கை, பிள்ளைகள் மாணிக்கம் மனைவாசல்
இவை யாவும் உன் அன்புக்கீடாகுமா?
தலைமீது மலை சரிந்து விழுந்தாலும் உடைந்தாலும்
உன் நாட்டம் இல்லாமல் நடக்காதல்லாஹ்
ஐரெண்டு மாதங்கள் தாய்வயிற்றில் எனைவைத்து
நீ காத்த பெருங்காவல் அறியேனல்லாஹ்
பதிநான்கு உலகங்கள் வாழ்ந்தமல்கள் செய்தாலும்
நீ செய்த அருளுக்கு ஈடாகுமா?
அல்லாஹ்வே... உயர்ந்தோனே....

உணவூட்டிச் சீராட்டி, உணர்வூட்டி அறிவூட்டி
வழிகாட்டி வளர்த்தவனே நீதானல்லாஹ்
உனையறியும் மார்க்கத்தை இதயத்தில் வைத்தேயென்
இதயத்தை திறந்தவனும் நீயே அல்லாஹ்
மௌத்தாகும் வேளையிலே கலிமாவை நான் மொழிய
மாசக்தி தந்து அருள்புரிவாயல்லாஹ்
நபிவழியில் நான் சென்று உன் சமூகம் நானடைய
புவி வாழ்வில் அருள்வாயே யாறஹ்மானே
உன்னாலே.... வந்தேனே....

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கிழக்கு மாகாண கலை இலக்கியப் பெரு விழா - 2014**

சிறுகதை - திறந்த பிரிவு

(பிரதேச மட்டம்: 1ம் இடம், மாவட்ட மட்டம் : 1ம் இடம்)

திருமதி. எம்.எம். உம்மு நசீலா

# 'மறு பக்கம்'



"கீச்.... கீச்..... கீச்......"

வளவின் மூலையில் போடப்பட்டிருந்த மரக்குற்றியின் மேல் அமர்ந்திருந்த சுமையா தாய்க் கோழியுடன் இரை பொறுக்கிக் கொண்டிருந்த குஞ்சுக் கோழிகளின் சந்தோஷத்துடன் ஒன்றிப் போய் இருந்தாள். கறுப்பும் வெள்ளையுமாக உள்ளங்கை அளவில் தாய் கிண்டிக் கொடுத்த மண்ணில் தீனைப் பொறுக்கிக் கொண்டு சின்னக் கால்கள் தரையில் பட்டும் படாமலும் பறந்து கொண்டும் தாயுடனே திரிந்த குஞ்சுகளைப் பார்க்கும்போது அவள் மனசும் பூப்போலாகி விட்டது.

பதினொரு முட்ட வைச்சி பதினொன்னும் பதினொன்னா பொரிச்சிடிச்சி. அல்லாட காவலா ஒன்னும் கூலாகல்ல. முட்டதான் என்ன விலயா விக்குது. நாட்டு முட்ட பத்து ரூவா. 1 பொரிச்ச குஞ்சில ஒரு ஆரேழு நாட்டுக் கோழியா வந்தாலும் போதுமே, ரெண்ட சாவலுக்கு மிரிக்கிறதுக்கு உட்டுப் போட்டு மத்தத அறுத்தாக்கித் தின்னலாம்......"

கணக்குப் பண்ணிய படியே கோழிக் கூட்டைத் திறந்து விட்ட சுமையாவின் உம்மா அவளைப் பார்த்து, "இஞ்ச பாரு....! அங்கால இங்கால நகர்ந்திராத கடுவனெல்லாம் திரியுது. கண்ணுல மண்ணத் தூவிட்டு கொண்டு போயிடும். ளுஹுரு (மதியத் தொழுகைக் குரிய நேரம்) மட்டில ஏத்தி அடச்சிப் போட்டு விடிய வெள்ளன ஆக்கின கறி சூடாக்கி... ஒரு மூனு சுண்டு அரிசையும் அரிச்சிப் போட்டுரு.... ராவைக்கும் பகலைக்குமா கிடக்கும்.

காணாட்டி புட்ட கிட்ட தள்ளலாம்....." சொல்லிக் கொண்டே கூடைக்குள் கத்தரி வெண்டியென்று காய்கறிகளையெல்லாம் அடுக்கி, மேலால் வல்லாரை, பொன்னாங்காணி போன்ற. கீரைகளையும் பரப்பிக் கொண்டு வாசல் கேற்றடிக்குப் போனவள் நின்று,

"நான் போனாப் பொறகு கணக் கெடுக்க அதுக் கெண்டு யாராச்சும் வந்தாங் கெண்டா வெளியில வைச்சே பதிலைச் சொல்லு. வேற ஏதாச்சும் கேட்டாங்கெண்டா உம்மா வந்ததுக்குப் பொறகு வாங்கெண்டு சொல்லு. வந்து வாசல் கதவ நல்லா சாத்திக்க."

இதெல்லாம் தினசரி சொல்லும் சங்கதிதானென்றாலும் அதென்னமோ சுமையாவின் உம்மாக்கு திருப்தியே ஏற்படாது. அவளும் அந்த வயதை தாண்டி வந்தவளாச்சே. என்னனென்ன இடர்களை சந்தித்தாளோ?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழா வெட்டியான மகளை தனியே விட்டுப் போற மனச்சுமையையும் சேர்த்துத் தூக்கி தலையில் சுமந்தபடி தோனாச் சந்தையை நோக்கி நடையை கட்டினாள். உம்மா சொன்ன படியே வாசல் கதவை இறுகச் சாத்தி விட்டு மரக்குற்றின் மீது வந்தமர்ந்த சுமையா நொடிக்கொரு தரம் பக்கத்து வீட்டு வேலியிலேயே கண்ணைப் பதித்து எடுத்தாள். வினை வாசல் கதவால் மட்டுமல்ல பக்கத்து வீட்டு வேலியாலும் வருமென்பது பாவம் சுமையாவின் உம்மாக்கு தெரியாமலே போய் விட்டது.

ஒரு பத்துப் பதினைந்து நிமிஷம் கழித்திருக்கும்....., வேலியொ ரமாகக் கேட்ட "ஸ்... ஸ்... ஸ்..." சத்தத்திற்கு முகம் திரும்பியவள்; சூரிய காந்தியாய் மலர்ந்து போனாள். வேலிக்கு மேலால் தெரிந்த முகம் இஸ்ஸத்துடையது. கொஞ்ச நாளாய் அவளுக்கிருக்கும் ஒரே ஆறுதல் அவன்தான். "கொஞ்சம் பொறுங்க கோழியெல்லாம் அடைச்சிப் போட்டு வாரன்" என்று சைகையாலேயே பதில் சொன்னவள் பரபரவென்று காரியத்தை முடித்துவிட்டு அவசரமாக வேலியோரத்திற்கு நகர்ந்தாள். அவள் உடம்பில் நடுக்கம், முகத்தில் பதற்றம். அவளை அந்தக் கோலத்தில் பார்ப்பதற்கு இஸ்ஸத்திற்கே பரிதாபமாக இருந்தது.

"என்ன நடுக்கமா....ச்சேய்! சுத்த பட்டிக் காட்டுப் பொம்புளதான் நீ.... பழகத் தொடங்கி எவ்வளவு நாளாச்சு இன்னும் நடுக்கிக்கிட்டு....."

"ரெண்டு நாளா எங்க காணம். எனக்கிட்டயும் சொல்லாம எங்க போன நீங்க. மணித்தியாளக்கணக்கில் நான் காத்துக் கிடந்ததுதான் மிச்சம். இனிம இப்பிடி பண்ணாதீங்க. என்னால தாங்கேலாமக் கிடக்கு..." அழுகையுடன் சுமையா சொல்லி முடிக்கவும் இஸ்ஸத் மனதிற்குள் விசிலடித்துக் கொண்டான்.

"ஓ! அதக் கேக்கிரியா? அவசர வேலையா சுபஹு நேரம் வெளிக்கிட்ட பயணம் அது. அந்த நேரத்தில உன்னட்ட எப்படிச் சொல்றது.... வந்து சொல்லலாமெண்டு போயிட்டன். ரெண்டு நாளா உன்னக் காணாதது எனக்கும் கஷ்டமாகத்தான் இருந்திச்சி. சரி... சரி இந்தா போன இடத்தில உனக்காக பார்த்துப் பார்த்து வேண்டினது...."

"என்னது...."

"கைய நீட்டி வாங்கித்தான் பாரன் என்னெண்டு..."

வேலிக்கு மேலால் இஸ்ஸத் நீட்டிய பேக்கை வேண்டி திறந்து பார்த்தவள்.

"என்டப் பேய்....! எனக்கு வாணாம் வாப்பா.

எங்க உம்மா கண்டாங்கெண்டா அவ்வளவுதான் என்னக் கொன்னே போட்டுருவாங்க...."

திறந்து பார்த்த வேகத்திலேயே சுமையா திரும்பிக் கொடுத்து விட இஸ்ஸத்தின் முகம் வாடி விட்டது. "என்ன புள்ள; உனக்கெண்டுதானே வாங்கினன். தலையில குத்துறதுக்கு ஸ்லைடுகள் கிளிப்புகள் ஐப்ரோ பென்சில் கைலேஞ்சி. நான் வேற யாருக்கு கொண்டு போய் குடுக்கப் போறன். எம் மனச புரிஞ்சிக்க மாட்டேங்கிறியே....." புள்ள என்று அழைத்து ஆதங்கத் தோடு கேட்ட இஸ்ஸத்தின்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்பில் சமையா கரைந்து போனாள். "செரி... செரி தாங்க..... ஆனா ஒரு கண்டிஷன் கலியாணத்துக்குப் பொறகுதான் இதையெல்லாம் நான் போடுவேன். இப்ப அடிப்பொட்டியில வைச்சி பூட்டிடுவேன். என்டல்லாஹ்! உங்களோட நிண்டா நேரம் பொறதே தெரியிரல்ல. சின்னத்தம்பி நேஸரியால இப்ப வந்திருவான். நாளைக்கு சந்திக்கலாம். நான் போறன் வாப்பா...

சுமையா.... ஏய் சுமையா...!

அவன் அழைப்பிற்கு சுமையா திரும்பவில்லை. பொழுதறியாமல் அவனுடன் நின்று கதைப்பதற்கு அவளுக்கும் ஆசைதான். ஆனால் சின்னத்தம்பி வருவதற்கிடையில் அடுப்படி வேலையை ஆரம்பிக்க வேண்டும். இல்லாவிட்டால் உம்மா வந்தவுடன் "நான் வந்ததுக்கு பொறகுதான் ராத்தா சோறாக்கத் தொடங்கினா" என்று கோல் மூட்டி விடுவான். அவ்வளவு குசும்பன் அவன். உம்மாவின் நெருப்புப் பார்வையை நினைத்தாலே சுமையாவுக்குப் பயம்தான். பரபரவென்று அடுப்பை மூட்டியவள் வேலைகளில் மூழ்கிப்போனாள்.

சின்னத்தம்பி என்று செல்லமாக அழைக்கப்படும் மாஜித் பிறந்து ஆறு மாதத்திலேயே மாறடைப்பால் தந்தையை இழந்த குடும்பம் அது. மூத்த இரண்டு ஆண்பிள்ளைகளும் பிறகு வரிசையாக நாழு பெண்கள் கடைக்குட்டிதான் மாஜித்.

வாப்பா இருக்கும் போதே கஷ்டப்பட்டு மூத்தவளை ஒரு மாதிரி ஒப்பேத்தி எடுக்க, மூத்மகன் குடும்பத்துக்குத் தெரியாமல் ஒருத்தியோடு போய்சேர்ந்து கொண்டான். பொட்டப் புள்ளைகளைப் பத்தி நினைக்காமல் பொண்டாட்டி கேக்குதா அந்த தறுதலைக்குன்னு! அவனை தலைமுழுகி விட்டதாக வாப்பா எல்லோருக்கும் சொல்லிவிட்டார். அத்தோடு மூத்த மகன் உறவு சரி. இரண்டாமவன் இப்றாஹிம் கூடப் பொறந்தது. களெண்டா நெஞ்சில அப்படியொரு பாசம். ' இப்படியொரு புள்ளையைப் பொற கொடுத்துவைச்சிருக்கோனும்கா...! என்ற அடிக்கடி சொல்லிக்கொள்பவர் வேறெந்தக் கொடுப்பினையும் காணாமலேயே கோய்ச் சேர்ந்து விட்டார். " பொட்டப்புள்ளைகளாகவே அல்லாஹ் தந்துட்டானே" என்று மாரிலும் மடியிலும் அடித்துக் கதறிய சுமையாவின் உம்மா காலப் போக்கில் தேறி குடும்பச் சுமையில் மகனோடு தானும் பங்கெடுக்கத் தொடங்கி விட்டாள். மகன் இப்றாஹீம், தமிழ் சனம் இருக்கும் பக்கம் போய் மலிவு பொழிவாக வாங்கி வரும் மரக்கறி கீரை கிழங்கு வகைகளை சந்தைக்கு கொண்டு சென்று விற்று வருவான்.

சந்தை வியாபாரம் முடிந்து வீட்டுக்கு வந்தானென்றால் சாப்பிட்டு ஒரு குட்டித்தூக்கமும் போட்டுவிட்டு மில்லுப்பக்கம் போய்விடுவான். அங்கேயும் பலதரத்து வேலைகள்..... கிழமை முடிய ஒரு கணக்கு வரும். தாயும் மகனும் குருவி சேக்கிரப்போல சேர்த்து வீட்டு வேலையையும் முடித்தெடுத்து சுமையாக்கு காலகாத்தில் ஒரு கலியாணமும் பண்ணி வைத்தார்கள். மூன்றே மாதத்து வாழ்க்கை தான். ஒரு ஆட்டோவுக்கு சொந்தக்காரனான சுமையாவின் புருஷன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"கடல் வருகுது...... கடல் வருகுதென்று...." துண்டோடும் துணியோடும் தொப்பலாக நனைந்து மக்கள் ஓடி வந்த போது குடித்துக்கொண்டிருந்த தேயிலை கிளாசை மனைவியிடம் நீட்டி "என்ன புதினமாகக் கிடக்கு புள்ள. கடல் வருகுதென்று சனமெல்லாம் ஓடி வருகுது. ஹயாத்திலயும் கேள்விப்படாத சங்கதியாகக் கிடக்கு. நான் என்னென்டு போய் பார்த்திட்டு வாரன்" என்ற சொல்லி விட்டுப் போனவன் வரவேயில்லை" 26.12.2004 கடல் கோள் அனர்த்தத்தில் மரணித்தவர்கள்" பட்டியலில் சுமையாவின் புருஷனின் பெயரும் சேர்ந்து கொண்டது. மூன்றே மாதத்து வாழ்க்கை..... ஆழமாக அல்ல இலேசாக வென்றாலும் பதிய முதல் விதி அடித்துப் பறித்துக்கொண்டு போய்விட்டது. ஒரு எல்லைக்குள் வளர்ந்த அவளுக்கு உடம்பு தொட்ட சுகமும் ஒரு சில பரிமாற்றங்களுமே நினைவில் நின்றன.

நாலுமாசமும் பத்து நாளும் மௌத்தான புருஷனுக்காக பிற ஆண்களைத் தவிர்த்திருந்து இத்தாக் கடமையை நிறைவேற்றி வெளியாகிய சுமையாக்கு ஒரு வித ஆதங்கமே மனதில் எஞ்சியிருந்தது. எதனாலுமே அவளை ஆற்ற முடியவில்லை. ஒரு நாள் வேலியோரம் அழைத்த இஸ்ஸத்தின் முகம்.... குர்ஆன் மத்ரஸாவில் அவளோடு கூட ஓதிய நண்பன் கூப்பிட்டு சுகம் விசாரித்து சோகம் வினவிய போது உடைந்து போனாள்...... ஓ....ன்று மார்மடி தாங்காமல் அவள் கதற அவன் சொன்ன ஆறுதல் வார்த்தைகளில்.... அவள் அன்பு பிரிவில் நெகிழ்ந்து போனாள்... அவனை சந்திக்கும் சொற்ப நேரத்தை நினைத்துக்கொண்டே மறுபடியும் சந்திக்கும் நேரத்துக்காக காத்திருக்கத் தொடங்கினாள்.

அன்றைய பொழுது இரவாகிப்போனது. எல்லாரும் தூங்கிய பின் வியாபாரக்கணக்கு வழக்குகளை எல்லாம் பார்த் முடித்த இப்றாஹீமும் தூங்கும் பாய்க்குப் போய்விட்டான். சில நொடிகள் தான் அவனது குறட்டைச் சத்தத்தால் நிறைந்து போனது. குறட்டைச்சத்தம் கேட்டால் இப்றாஹீம் ஆழ்ந்து தூங்குகின்றா னென்று அர்த்தம். தனியறைக்குள் படுத்துக் கிடந்த சுமையாக் கென்றால் தூக்கமே வரவில்லை. மனம் நினைவுகளில் அலைக் கழிந்தது. எழுந்து மெல்ல அலுமாரியை திறந்து கைநீட்டி எடுக்கின்றாள். புருஷனின் சேட்டும் சாரனும் கடல்வந்த அன்று காலை "இதயெல்லாம் கழுவிப்போடுங்க புள்ள" என்று கையில் தந்த உடுப்பு அவனே போன பிறகு கழுவாமல் அதை அப்படியே வைத்து அழுமாரியில் பத்திரப்படுத்தி விட்டால். முகம் முழுவதையம் அதை அழுத்தியவள் புருஷனின் உடம்பு வாசம் அதில் பிடிபட பொங்கிப் பொங்கி அழத் தொடங்கினாள்.

"பள்ள...... புள்ள எண்டு கூப்பிட்டு என்னக் கொண்டாடினீங்களே. இருப்பிங் கெண்டுதானே இருந்தன். இப்படி இடையிலேயே விட்டிட்டுப் போயிட்டீங்களே" அழுதழுது சோர்ந்து போனவளுக்கு தூக்கம் மட்டும் வரவில்லை. இஸ்ஸத்தின் உறவுக்குப் பிறகு மனச்சுமை கூடிப் போனதை உணர்ந்தாள்.

பக்கத்தில் பக்கத்தில் இருந்தாலும் அந்த வீட்டிக்கும் இந்த வீட்டிக்கும் சுமுகமான உறவில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"அவங்கெல்லாம் படிச்சவங்க, அவங்கட பவரும் லெவலும் அவங்கலேள. நம்மட சுண்டலும் சோறும்தான் நமக்குப் பெரிசு... நமக்கிட்ட இல்லயெண்டாலும் அவங்ககிட்டயெல்லாம் கேட்டுப்போகாம அல்லாஹ் காப்பாதோனும். கண்டாப்போதும் முகத்த என்ன தூக்க தூக்கிக்கிறா..."

சுமையாவின் உம்மா அடிக்கடி புலம்பிக்கொள்வாள். உண்மைதான் இஸ்ஸத்தின் ராத்தாவும் உத்தியோகத்திற்கு போகிறவள்கள். அல்லசல் மனிதரைக்கண்டால் இஸ்ஸத்தின் ராத்தா மரியாதைக்காவது கொஞ்சம் சிரித்து வைக்க மாட்டாள். பக்கத்து பக்கத்தில வேறு இருந்ததால் வேலிப்பிரச்சினை குப்பை கொட்டும் பிரச்சினையென்று இரு குடும்பத்திற்குள்ளும் ஆயிரத்தெட்டு மனஸ்தாபங்கள். "அவங்களோட நல்லா இருக்கிற வேலயே வானாம்" என்று சுமையாவின் உம்மா ஒதுங்கியேவிட்டாள்.

இத்தனைக்கு மத்தியிலும் இஸ்ஸத்தின் வார்த்தைகளைத்தான் சுமையா மலையென நம்பிக் கொண்டடிருந்தாள். "எதுக்கு சுமையா கண்டதையெல்லாம் நினச்சி கவலைப்பர்ரே... உனக்கு நான் எனக்கு நீ. அவ்வளவுதான் காலம் வரட்டும் சொல்லிப்பாப்பன். இல்லாட்டி நானே வெளிக்கிட்டு உங்க வீட்டுக்கு வந்திருவன். ஏற்கனவே என் மனசில இருக்கிற கவல கஸ்டமெல்லாம் போதாதா? அதையெல்லாம் மறக்கனும். நீ சந்தோஷமாக இருக்கனுமெண்டுதானே உங்கூட பழகவே ஆரம்பிச்சன். உன்ன மகாராணி மாதிரி எப்படியெல்லாம் சந்தோஷமாக வைச்சிருக்கோனுமெண்டு கற்பனை பண்ணியிருக்கன் தெரியுமா?"

அவன் உணர்ச்சி வசப்பட்டு கண்கள் கலங்க சொல்லும் போது சுமையாவின் பலவீனங்களெல்லாம் மண்டியிட்டுவிடும்.

புருஷனை இழந்த என்னில் இவ்வளது அன்பு வைத்திருக்காரே என்று நினைத்து நினைத்து சந்தோசப்பட்டுக் கொள்வாள்.

"யா அல்லாஹ்! என்னையும் இஸ்ஸத்தையும் எந்தப் பிரச்சினையுமில்லாமல் ஒன்னா சேர்த்து வை. இந்த வாழ்கையெண்டாலும் எனக்கு நிலைக்கனம். அவர்ர மடியிலதான் என்ட சிவன் போகனும்" அழுதழுது அல்லாஹ்விடம் இறைஞ்சியவள் அப்படியே தூங்கியும் போனாள். இஸ்ஸத்தின் ஆறுதலிலும் நம்பிக்கையான வார்த்தைகளிலும் சுமையாவின் நாட்கள் நகர்ந்து கொண்டிருந்தது.

ஒரு நாள்... " கொழும்புக்கு லொறியில போறதுக்கு ஒரு பார்ட்டி கூப்பிடுதும்மா. ரெண்டு நாள்தான். தங்கி வந்தா ஏதாச்சும் கனமா மிஞ்சும். என்னத்தேடி வாரவங்கிட்ட விஷயத்த சொல்லிடுங்க"

என்று இப்றாஹீம் ஒரு விடியற்காலையில வெளிக்கிட்டுப் போய்விட்டான். சுமையாவின் உம்மாவும் "இண்டைக்கு நான் சந்தைக்கு போகல்ல புள்ள. மில்லி கொஞ்சம் வேல கிடக்கெண்டு முதலாளி நேரத்தோடேயே வரச் சொன்னவர். காக்காவும் பயணம் பெய்த்தான் தானே. பெரிசா ஒன்டும் ஆக்கத்தேவல்ல. கிடக்கிற கருவாட்டப்போட்டு உறைச்ச கறி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆக்கி, தலையல பிச்சுப்போட்டு ஒரு சொதிவை போதும். நான் மத்தியானம் சாப்பாட்டுக்கு வரமாட்டன். கொஞ்சம் சோத்தப்போட்டுக் கட்டடி தங்கச்சிக் கிட்ட ஒரு முடிச்சிட்டு ஆறுமணி போலதான் வருவன் கவனமா இருந்துக்க..."

குடும்பச் சுமையுடன் உழைக்கும் தேவையும் அந்தத்தாய்க்கு. ஒரே மூச்சில் மகளிடம் எல்லாவற்றையும் ஒப்படைத்துவிட்டுப் போய் விட்டாள். பரபரவென்று.

காரியம் பார்த்து தங்கைகளையும் தம்பியையும் அனுப்பிவிட்டு அடுப்படிக்குள் நுழைந்தாள் சுமையா. "முதல்ல ஆக்கிற வேலய முடிக்கனும். அப்பதான் மத்த வேலயல பொறகு நிம்மதியா செய்யலாம். 'குனிந்து கருவாட்டை எடுத்தவள் குசினி வாசலில் நிழலாட நிமிர்ந்து பார்த்து அதிர்ந்து போனாள்.

"இஸ்ஸத்... நீ.... நீங்க.... யா அல்லாஹ்... எப்படி எப்படி வந்தீங்க யாராச்சும் கண்டா... என்ட செல்ல ரஹ்மானே... என்ன காரியம் பண்ணீணீங்க..."

உடம்பும் மனசும் ஒரு சேர சமையா பதறத் தெடங்கிவிட்டாள்.

"என்ன சுமையா எவ்வளவு கஷ்டப்பட்டு வழியெடுத்து வந்திருக்கன். வாங்கெண்டு கூப்பிடல்லாட்டியும் பரவால்ல... போ என்டு தொறத்திடுவாய் போல கிடக்கே. நானும் என் பொண்டாட்டியும் குடும்பம் நடத்தப்போற மாளிகைய நான் பார்க்க வேணாமா. அதான் துணிஞ்சி வந்திட்டன்...."

சொல்லிக்கொண்டே உள்நுழைந்து எல்லாவற்றையும் நோட்டமிட்டவன், பரவால்லயே ரொம்ப அழகா துப்பரவா வீட்ட வைச்சிருக்கே. இங்கதான் மகாராணியாட்டம் உன்னப் பூப்போல பாதுகாக்கப் போறனாக்கும். ஏய்....! என்னடா பயந்திட்டியா...? உன்ன கலியாணம் முடிச்சி சத்தியமா நல்லா வைச்சுக்குவன். எய்..... என்னடா? ஏக்கத்தோடு கேட்டு அவளை நெருங்கியவன் பயத்தில் வியர்நதிருந்த அவளது நெற்றியைத் துடைத்து முகத்தை வருடி, பலவீனங்களையெல்லாம் தூண்டித்தூண்டி தன் பலத்தை நிருபிக்க துணிந்த நொடியில்... தெருக்கதவில கேட்ட சத்தம்....

"ராத்தா... ராத்தோ....வ! வந்து சுருக்கா கதவத் தொரவன்.... ராத்தா வாரியா.... நான்தான் சின்னத் தம்பி வந்திருக்கன்... வந்து கதவத் தொறவன்..."

எப்படிப் போய் கதவைத் திறந்தாளென்று அவளுக்கே தெரிய வில்லை. விர்றென உள்ளே வந்த சின்னத் தம்பி விரல்களால் ரெண்டைக் காட்டி....

"காலையில் போகல்ல எலா; நேஸரியில வச்சி வயித்த வலிக்க தொடங்கிட்டு டீச்சர் வீட்ட போன்னு சொல்லிடா...."

போட்டிருந்த கலிசானை கழற்றி எறிந்து விட்டு புழக்கடைப்பக்கம் ஓடியபடியே சொல்லிக்கொண்டு போனான் சின்னத்தம்பி. சுமையாக்கு எதுவுமே புரியவில்லை. பிரமை பிடித்ததைப்போலிருக்க மரக்குற்றியில் இருந்து விட்டாள். இஸ்ஸத்தைக் காணவில்லை. மூலைப் பக்கத்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேலி சிதைந்ததைப் போலிருந்தது. கண்களை மூடிக் கொண்டாள். மனசு துடி துடித்து அழுவதை விரும்பி நின்றது. தொண்டைக்குள் பெரியதொரு முள் சிக்கிக் கொண்டதைப்போல் அதற்கும் முடியவில்லை. தண்ணிகுடித்தாள் தேவலை போலிருக்க எழுந்து கொடவளை...

"ராத்தா.... ராத்தோ.. வந்து கழுவி உடு. நாளைக்குத்தான் டீச்சர் என்ன நேஸரிக்கு வரச் சொன்னவ.... எனக்கு வயித்துக்க வலிக்குது. குளிசயப் போட்டுரு ராத்தா.... நான் படுக்கப் போறன்...

கிட்டத்தட்ட ஒரு மெஷினைப் போல் இயங்கத் தொடங்கினாள் சுமையா. உம்மா சொன்ன வேலைகளையெல்லாம் முடித்து தம்பியையும் தங்கையையும் குர்ஆன் ஓதும் மதரஸாவிற்கு அனுப்பிவிட்டாள். ஒன்பதாம் வகுப்பு படிக்கும் மூத்த தங்கச்சி ஜுமானா படித்துக் கொண்டிருந்தாள் மெல்ல அவளை நெருங்கியவள்....

"ஜுமானா... படிச்சிட்டா இருக்கே... ஸ்கூல்லயும் படிச்சிட்டுத்தானே வந்திருப்பாய். பக்கத்திலதானே உண்ட கூட்டாளிப் புள்ள ஊடு. வேணுமெண்டா அங்கபோய் கொஞ்ச நேரம் கதைச்சிருந்து வாவன்... அதுங்கட வீட்ட டிவியும் இருக்கிதானே..." "இல்ல... உம்மா வந்தா....; அவள் பயத்தால் இழுத்தாள்;

'எண்ணட கஷ்டகாலம் நான் ஊட்டுல அடைஞ்சி கிடக்கன். நீ வளர்ர பிள்ள... கொஞ்ச நேரம் தானே உம்மா வந்தா நான் சொல்லிக்குவன் நீ போயிட்டு வா"

அவளை அனுப்பிவிட்டு கதவைப் பூட்டியவளின் நெஞ்சு பயத்தில் படக்.... படக்கென அடித்துக் கொண்டது. பாவம் இஸ்ஸத் என்காகத்தானே எல்லாத்தையும் தாங்கிக்கிராரு.... அவனை மறுபடியும் பார்க்கனும், ஆறுதல் படுத்தனும், ஆயுசுபூராகவும் நான் உங்களோடதான் வாழத்துடிச்சிக்கிட்டு இருக்கன் இஸ்ஸத் என்று சொல்லி அவன் நெஞ்சில் சாய்ஞ்சி அழனும். சுமையாவின் மனசில் இனம் புரியாத உணர்ச்சிக் கவலைகள் எழுந்து அவளை அலைக்கழித்தன. தாயின் நெருப்புப் பார்வை.... தமையனின் கண்டிப்பு எல்லாவற்றையும் மறந்து வேலியோரம் போனவள் சிதைந்த பக்கத்தை மெல்ல விலக்கிப் பார்த்தாள். கம்பியைப் பிரித்து நுழைவதற்கு வசதியாக அதலமாக்கி ஓலைமட்டையை லாவகமாக செருகி இருந்தாள். தனக்குள் சிரித்துக்கொண்டவள் ஓலைமட்டையை விலக்கி கவனமாக அந்தப் பக்கம் கால்வைத்தாள். சிறுவயதில் விளையாட்டுத்தனத்தில் வேலிதாண்டி இந்தப்பக்கமாக ஓடிவந்துவிட்டு அதற்காக உம்மாவிடம் வாங்கும் அடி ஞாபகத்திற்கு வந்தது. இஸ்ஸத்தின் ராத்தாவும் மச்சானும் வருவதற்கிடையில் அவனை சந்தித்துவிட வேண்டுமென்று படபடப்பில் வீட்டின் பின்பக்கமாக இருந்து மெல்ல முன்பக்கமாக வந்தவள் நிதானித்தாள்... இஸ்ஸத்தின் சப்பாத்துடன் இன்னுமொரு சப்பாத்துச் சோடியும்... சட்டென்று பின்னாகியவள் சாத்தியிருந்த யன்னலை கண்டு "இஸ்ஸத்தின் முகத்தையாவது ஓரமாக நின்று பார்த்துவிட்டுப் போனால் நெஞ்சித் தவிப்பிற்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆறுதலாக இருக்கும் என்ற நினைப்பில் சாத்தியிருந்த யன்னலை மெல்ல நீக்கியவள்....! வாய்விட்டு அலறமுடியாத அதிர்ச்சியில் ஸ்தம்பித்துப்போனாள்.

ஓர் ஆணும் பெண்ணும் இருக்க வேண்டிய நிலையில் இஸ்ஸத்தும் அவனது நண்பனும் "யா அல்லாஹ்..." காலடியில் இருந்த பூமி நழுவி அகலபாதாளத்தில் விழுவதைப்போல்! விக்கித்த நெஞ்சுடன் வீடு வந்து சேர்ந்த சுமையா பிரமை பிடித்தவளாய் சுவரில் சரிந்து உட்கார்ந்து கொண்டாள். கூடு கலைந்த பறவை போல உணர்வுகளெல்லாம் தவத்துப் புரண்டன. கேவலமான இரண்டு மிருகங்களின் அந்தரங்கத்தைப் பார்த்துவிட்ட அசுசை. உலகம் இயங்கிக்கொண்டிருக்கக் காரணமான துய்மையான ஒன்று நரகலாக நாற்றமெடுத்து புழுப்புழுவாக நெளிந்து கொண்டிருப்பதைப் போலிருந்தது. காலையில் அவன் தொட்டுப் பரவசப்படுத்திய இடமெல்லாம் பற்றி எரிவதைப்போல்...! ஆவேசம் கொண்டு எழுந்தவள் அப்படியே குசினிப்பக்கம் போனாள்.

திரும்பியவள் கண்களில் இப்றாஹீம் காக்காவின் பழைய செருப்புத்தான் பட்டது. "ஆம்புளச் செருப்பு" கையில் எடுத்தவள் நேராக கண்ணாடிக்கு முன் கோய் நின்று கொண்டாள்.

"ஊர்மேயும் நாய்க்கெல்லாம் ஒழுக்கமாக உடம்பு கேக்குதா? வாழ்க்கையத் தொலச்ச முண்டச்சி எண்டுதானே நாக்கத்தொங்கப்போட்டுக்கிட்டு வந்த....கழிசடை காவலிக்கெல்லாம் காதலொரு சாட்டு அதச்சொல்லிச் சொல்லியே அனுபவிச்சிப்போட்டு கையக் கழுவிட்டுப் போகலாமெண்ட தைரியம் தானே....

"ஆம்புளக்கும் பொம்புளக்கும் வித்தியாசம் தெரியாத பண்ணியையெல்லாம் என்ன நம்ப வச்சிட்டியே அல்லாஹ்வே!" மார்மடி தாங்காமல் பொங்கிப்போன சுமையா தனக்குத்தானே தண்டனை வழங்கும் நீதி தேவதையானாள். கையில் வைத்திருந்த செருப்பால் அடிக்கத்தொடங்கினாள். "ப்ளார்..ப்ளார்.." என்று தொடர்ந்த சத்தம் கைகள் களைத்து ஓய்ந்தபோதும் அவள் நெஞ்சம் தீரவில்லை.

"ஏமாந்திட்டன்... ஒரு மிருகத்திடம் அன்புக்காக நெருங்கி ஏமாந்திட்டன். உடம்பு சுகத்துக்காக எந்தக் கேவலத்தையும் செய்யத் துணிஞ்ச ஈனப் பொறப்புகள் த்....தூ!"

பரபரவென்று எழுந்தவள் கிணற்றடிக்குப்போய் 1,2,3,4 கிணற்று வாளியால் தண்ணீரை அள்ளி அள்ளி தலையில் ஊற்றத் தொடங்கினாள். உள்ளக்கொதிப்பு அடங்கியதோ இல்லையோ சுமையாவின் உடல் சோர்ந்தே போனது.

"சுமையா – ஏய்! சுமையா... எங்கடி போய் தொலைஞ்ச..." தட்டித்தட்டி கை முறிஞ்சி போச்சி எங்கெயண்டாலும் போய் ஒதுங்கினியெண்டா ஊரு பிரண்டாலும் ஒனக்கு விளங்காது. சின்னவள் எங்க அவள் கழுத, படுத்தாளெண்டா நாளும் பகலும் அவளுக்கு ஒன்னுதான். மல்லுக்கட்டி கதவைத் தொறந்ததுல கையில் வேற கழிச்சுப்போட்டு... சுமையா..."

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சத்தம் போட்டுக்கொண்டே வந்த சுமையாவின் உம்மா போட்டிருந்த உடுப்போடையே நனைந்த கோழிக்குஞ்சாய் கிணற்றடியில் நின்ற மகளைக் கண்டதும் விக்கித்துப்போனாள். உள்ளே போய் துடைக்கும் துடைக்கும் துண்டைக் கொண்டு வந்து நீட்டியவள் "கட்டிட்டு உள்ளுக்கு வா...." ஒற்றையாகச் சொல்லிவிட்டு குசினுக்குள் நுழைந்து சுடச்சுட கோப்பி போட்டு வந்து "சூட்டோடு இதக்குடிச்சிப்போட்டு ஈரமில்லாமல் தலயத்துவட்டு.. தண்ணி நிண்டிச்செண்டா தடிமல் பிடிச்சுக்கும்.

"ஜுமானா எங்க... குரைஸாட ஊட்டயா கோயிருக்காள். னான் போய் கூட்டிட்டு வந்து அடுப்படி வேலயப்பாக்கன். நீ இருந்துக்க"

தலையைத் துவட்டி பாயில் சரிந்தவள் தன்னை மறந்து தூங்கிப்போனாள். மனதை வென்ற உடம்பின் விதி, விடிந்தது கூட சுமையாக்கு தெரியவில்லை. வெளியில் கேட்ட இபுறாஹீம் காக்காவின் பேச்சுக்குரலில் கண் விழித்துக் கடிகாரத்தைப் பார்த்தவள் திடுக்கிற்றுப் போனாள். மணி ஒன்பதைக் காட்டி நின்றது.

" என்ட அல்லாஹ்..." துடித்துக் எழுவதற்கு முயன்றவளுடன் உடம்பு ஒத்துழைக்கவில்லை. அடித்துப்போட்டாற்போல் அயர்ச்சியாக இருக்க மறுபடியும் கண்மூடி சாய்ந்து கொண்டாள். வெளியில் பேச்சு தொடர்ந்தது.

"ராவெல்லாம் நித்திரையுமில்லம்மா! லொறி பழுதாகினயும் காலக் கஷ்டம்தான். நடு றோட்டில லொறியோட சீரலிஞ்ஞான் மிச்சம். எங்கம்மா.. சுமையாட சிலாவினயக் காணல்ல.."

"அவளுக்கு உடம்பு அவ்வளவு ராகத்தில்லமன படுத்துக்கிடக்காள். கொஞ்ச நாளைக்கு நானும் சந்தைக்கு மில்லுக்கெண்டு போகல்ல. வாழுற வயசுல... அவளப் பாக்கக்குள்ள வாய் வயிரெல்லாம் கொதிச்சுப் போகுது. இருக்கிறத வச்சி அவளுக்கு நல்லதா ஒண்ட பாத்துச் செய்து போட்டுரணும் மன..."

"எனக்கும் யோசினாம்மா... எண்ட கூட்டாளி ராசிக்கத் தெரியும்தானே. அவனோட மாமா காதர்... அவரும் ராசிக்கோட ரெண்டு மூனு பயணம் நம்மட ஊட்ட வந்திருக்கார்தான். பெண்டாட்டிட நடத்த சரியில்லயெண்டு கலியாணத்த பிரிஞ்சிட்டார். அவர நம்ம சுமையாக்கு செய்யலாமெண்டு ராசிக் சொன்னவன்..."

இபுறாஹிம் காக்கா பேச்சை முடிக்கவில்லை... அவசரமாக இடைமறித்த சுமையாவின் உம்மா...

"ஓமோம் மன.. நானும் அவங்கட எல்லாக் கதையும் கேள்விப்பட்டன். அது நல்ல இடம்தான். ராசிக் தம்பிட்ட விசாரிக்க சொல்லு சரி வந்தா சுணக்காம நாம அதையே செய்து போட்டிரலாம்"

"சரிம்மா... நான் அத விசாரிக்கன். பசிக்குது காலக்கடயப்பத்த வைங்கம்மா நான் குளிச்சிட்டு வந்திர்ரேன்.."

உம்மாவின் ஆதங்கம் இபுறாஹிமுக்கு மட்டுமல்ல. சுமையாவுக்கும் புரிந்தது. கூடவே காதரின் உருவத்தை ஞாபகத்திற்கு கொண்டுவர

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



முயற்சிக்காள். கொஞ்சம் முன்னைக்கக்

**கிழக்கு மாகாண கலை இலக்கியப் பெரு விழா - 2014**
சிறுவர் கதை - திறந்த பிரிவு
(பிரதேச மட்டம்: 1ம் இடம், மாவட்ட மட்டம் : 3ம் இடம்)
திருமதி. மு.ஜ. சித்தி ஜாஹிதா

# எம்தேசத்து மொட்டுக்கள்

அன்று மே மாதம் 17ம் திகதி இதமான காலைப் பொழுது புலர்ந்து கொண்டிருந்தது.அந்த அழகிய குடும்பத்தின் நெடுநாள் கனவான புகைவண்டிப் பிரயாணத்திற்காகக் காத்திருந்த அந்த நாளும் இதுவாகத்தான் இருந்தது.

இன்றைய நாள் வாழ்வில் இவர்களுக்கு ஒரு மறக்க முடியாத நாள். ஏனெனில், நாட்டிலே இடம் பெற்ற முப்பது வருட யுத்தத்தின் பின்னர் தற்போது ஏற்பட்டு வீசிக்கொண்டிருக்கும் சமாதானக் காற்றின் ஒரு பகுதி வாசனைதான் இவர்களின் இப்பயணம்.

அக்காலப்பகுதியில் எவரொருவரும் தமது சொந்த ஊரைவிட்டு தொழில், நோய் நொடி போன்ற அத்தியாவசிய தேவைகளைத் தவிர எந்தக் காரணத்தைக் கொண்டும் வெளி இடங்களிற்குச் செல்வதற்கு யாரும் ஆசைப்படுவதில்லை.காரணம், வீட்டை விட்டு வெளியில் சென்றால் வீடு வந்து சேர்வது நிச்சயமில்லாத நிலை. எங்கு குண்டு வெடிக்கும்? யார் யாரைச் சுட்டுக் கொல்வார்கள்? என்றெல்லாம் எதிர்பார்க்க முடியாத பயங்கரச் சூழலில் பீதி நிலவிய காலம் அது.

நிதானமான தந்தை நிஸார்,சுறுசுறுப்பான மனைவி ஹம்தூன், ஆசைக்கு ஒன்று, ஆஸ்திக்கு ஒன்று என ஹனான்,ஹனீனா எனும் இரு பிள்ளைகளைச் செல்வங்களைக் கொண்ட அளவான அழகிய குடும்பம். இத்தனைக்கும் இந்த புகைவண்டிப் பிரயாணம் சுமார் ஒரு மாதத்திற்கு முன்னரே திட்டமிடப்பட்டிருந்தது. இவ்வளவிற்கும் ஹம்தூன், நிஸார் இருவரும் அரச உத்தியோகத்தர்கள். இவர்களுடைய குடும்பத்திற்குப் புகைவண்டி பிரயாணத்திற்கான இலவச ஆணைச் சீட்டுக்கள் வருடாவருடம் மூன்று சோடிகள் உரித்தாகியிருந்தும் கூட சுமார் பத்து வருடங்களுக்கும் கூடிய சேவைக் காலத்தில் அதனைப் பயன்படுத்திப் பிரயாணம் மேற்கொள்ளும் சந்தர்ப்பம் இவர்களுக்குக் கிட்டியிருக்கவில்லை.

ஆயினும் தற்போது மட்டக்களப்பு புகையிரத நிலையத்திலே எழுதப்படாத சட்டமாக நடைமுறையிலிருக்கும் பத்து நாட்களுக்கு முன்னதாகவே பிரயாணம் செய்யவிருப்பவர்கள் ஆணைச் சீட்டுக்களைப் பெற்று அங்கு ஆசனப்பதிவுகளைச் செய்து கொள்ள வேண்டும். இது தற்போதைய நடைமுறையாக இருந்த படியால் நிஸார் இதற்கேற்றவாறு தமக்குரித்தான முதலாம் வகுப்பு ஆசனப் பதிவுகளைச் செய்து அவற்றுக்கான டிக்கட்டுக்களையும் பெற்றிருந்தான். அந்தநாள் தொடக்கம் இக்குடும்பத்தினர் பயணிக்கும் நாளுக்காகத் தினமும் எண்ணிக் காத்திருந்தனர். இன்று தான் அவர்களின் புகைவண்டிப் பிரயாணக்கனவு நனவாகிறது.

நேரம் அதிகாலை 5.00 மணி. இன்னும் அரை மணித்தியாலத்தில் சூரியோதய நேரத்தில் அந்த உதயதேவிக் கன்னி ரயிலும் மட்டக்களப்பிலிருந்து கொழும்பு நோக்கிச் செல்லவிருந்தது. தூரத்திலே ரயிலின் என்ஜின் வரும் சத்தம் கேட்டதும் பிள்ளைகள் துள்ளிக் குதித்து

"அது தான் ரயில் சத்தமாம்மா?"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்று தாய் ஹம்தூனைப் பார்த்துக் கேட்க, அதற்கு "இல்லை. ரயிலின் என்ஜின் சத்தமென்று நினைக்கிறேன், எனக்கும் திட்டமாகத் தெரியவில்லை"

என்று அத்தருணத்தில் அப்பாவித்தனமாகப் பதிலளித்தாள் ஹம்தூன். இத்தனைக்கும் அவளது முப்பத்தைந்து வயது முதிர்விலும் அவளும் இப்போதுதான் முதன்முதலாக ரயிலில்பயணம் செல்லவுள்ளாள்.இதே நேரம் அருகிலிருந்த தன் கணவனைப் பார்த்து

"பாத்திங்களா நம்ம பிள்ளைகள் அவர்களின் சின்ன வயசில அனுபவிக்கிறத நாம இப்பதான் அனுபவிக்கிறம். நாம இதப்போல பலத நம்மட வாழ்வில யுத்தத்தினால இழந்திட்டம் இல்லையா"

எனக் கவலையுடன் கேட்டபோது அதற்கு கணவன் நிஸார்

"என்னதான் கஸ்டங்கள் வந்த போதிலும் மரண பயம் இல்லாமல் இப்ப வாழுறது எவ்வளவோ மேல்"

என்று சமாதானம் கூறினான்.இவர்கள் உரையாடுவதை உற்றுக் கேட்டுக் கொண்டிருந்த மகன் சாஜித்

"ஏன்மா? உங்கள யாரும் ரயில்ல கூட்டிப் போகலையா?"

என்று ஆச்சரியமாகக் கேட்டான், அந்த ஏழு வயதுப் பிஞ்சு.

"இல்லை மகன். அப்ப இந்த ரயில் பிரயாண வசதி இருந்ததாம். அதெயெல்லாம் பயங்கரவாதிகள் குண்டு வைத்துத் தகர்த்தெறிந்து எவருக்கும் பயனில்லாமல் செய்திட்டாங்களாம். அதனால எங்களுக்கு அதையெல்லாம் அனுபவிக்க முடியாமல் போயிற்று மகன்."

என்று கூறக் கேட்ட நிஸார்

"ஆனா இப்ப எங்கட ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அவர்கள் தான் அந்தக் கொடிய பயங்கரவாதத்தை முடிவுக்குக் கொண்டு வந்த உத்தம மனுஷர். இதனால் ஏற்படுத்தப்பட்ட சமாதானம்தான் இப்ப நிலவுது. இத்தனைக்கும் இந்த நாட்டிற்கு சேவை செய்த இராணுவ வீரர்கள் இந்த நாட்டின் கண்களாக என்றும் போற்றிப் பாராட்டப் பட வேண்டியவர்கள் மகன்"

எனக்கூறுகையில் நிம்மதிப் பெருமூச்சு விட்டவளாக

"அவர்கள் செய்த உயிர்த் தியாகம் தான் எமக்கு இந்த நிம்மதியைத் தேடித் தந்தது"

என்று மிகவும் நன்றியுணர்வுடன் இந்தச் செய்தியைத் தன் பிள்ளைகளுக்கு எத்தி வைக்கின்றாள் அந்த நாட்டுப் பற்றுள்ள தாய்.

அப்போ நாங்க கொழும்பிற்குப் போறது அந்த வீரர்களுக்கான யுத்த வெற்றிக் கொண்டாட்டங்களை பார்க்கத்தானே அம்மா"

என மகன் கேட்க, " அந்த நாளை நாம எப்பவும் மறக்கக் கூடாது"

என்று கூறி முடிக்கும்போது பயணிகளைச் சோதனை செய்வதற்காகப் பொலிசார் அழைத்தனர். அதில் ஒருவர் தனது தாய் மொழியில்

"கொஹேத யன்னே புஞ்சி மல்லி"

எனப் புன்னகையுடன் கேட்க அதற்கு பதில் அளிக்க விரும்பியும், தெரியாத கவலையில் தன் தாயைப் பார்க்கிறான் ஹனான். இதனைப் புரிந்து கொண்ட தாய்

"கொலம்ப யனவா" என்று கூறும்படி சொல்லவே அதை அவ்வாறே முதன் முதலாக அந்தச் சிங்கள வார்த்தையை உச்சரிக்கின்றான். இதைக் கேட்டு மகிழ்ந்த அப்பொலிஸ் உத்தியோகத்தர்

"ஹொந்தய் ஹொந்தய்" என்று சொல்லி கையை அசைத்து புகையிரத மேடைக்குள் செல்ல அனுமதித்தார். அங்கு அளவான சனக்கூட்டமே காணப்பட்டது. தற்போது இரு பிள்ளைகள் மனதிலும் பலவித கேள்விகள்???

உள்ளே சென்றபோது அங்கே தண்டவாளத்தில் நீல நிறப்பாம்பொன்று நீண்டு படுத்துறங்குவது போன்று உதய தேவிரயில் காட்சியளித்தது. தங்களுக்கே உரித்தான முதலாம் வகுப்புப் பெட்டியில் ஏறித் தங்களுக்கு ஒதுக்கப்பட்ட

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆசனங்களின் இலக்கங்களைச் சரிபார்த்து அமர்ந்து கொண்ட போது அவர்கள் அடைந்த பெருமிதம் அளவில்லாதது. கிட்டத்தட்ட எயார் லைன் விமானம் ஒன்றில் ஏறியது போன்ற ஒரு உணர்வு.

"உம்மா பஸ் மாதிரி நெருக்கம் இல்லை, அஜஸ்மன்டுடன் சீற்கள், அத்துடன் குளிர்மை.ஹா.."

இவை எல்லாமே இவர்களின் ஆனந்தத்தை மேலும் கூட்டின.

அந்த நேரம் திடீரென "கடார்" என ஒரு பலமான சத்தம் கேட்டபோது அனைவருமே ஒரு கணம் திடுக்கிட்டு விட்டனர். அதோடு புகைவண்டி மெதுவாக அசைந்து நகர்ந்து செல்ல ஆரம்பித்தது.அப்போது அது எழுப்பிய ஒலி

"கடக் புடக்" "கடக்கடக்க கடக்கடக்க"

நாம் என்ன நினைக்கிறோமோ அதற்கேற்ற சந்தமாக ரயில் எழுப்பிச் சென்ற ஒலி அசௌகரியத்தையன்றி இன்பத்தையே வரவழைத்தது. பயணமும் இனிதே தொடர்ந்தது.

குறித்த நேரத்திற்கு புறப்பட்ட அந்த ரயில் ஒவ்வொரு நிலையமாகத் தரித்து நின்று பிரயாணிகளை வாஞ்சையுடன் வரவேற்று ஏற்றிக் கொண்டு தன் பயணத்தை தொடர்ந்தது. கிட்டத்தட்ட மன்னம்பிட்டி பாலத்தினூடாகச் செல்லும் தறுவாயில் சோளங் குலைகளைத் தாங்கிய வண்ணம் அரைச்சட்டை பாவாடை அணிந்த சிங்களப் பெண் ரயிலில் ஏறினாள்.

"இரிங்கோ.. இரிங்கோ.."

என்று சொல்லிக் கொண்டு ஒவ்வொரு பெட்டியாகக் கடந்து சென்றாள்.இதனைக் கேட்ட மகள் ஹனீனா

"ஏன்பா நாங்கள் எல்லோரும் சீற்றில் அமர்ந்துதானே இருக்கிறோம்? ஏன் அவர் எல்லோரையும் இருக்கச் சொல்கிறார்?"

என்று வியப்புடன் கேட்டாள். தாய்க்கும் தந்தைக்கும் அடக்க முடியாத சிரிப்பு.

"இல்ல மகள் அவர் சிங்களப் பெண். அவருடைய மொழியில் சோளங் குலைகளை "இரிங்கு" என்று சொல்வதால் அதை விற்பதற்காக அவ்வாறு கூறிச் செல்கிறார்"

என்று விளக்கமளித்த போது "இதெல்லாம் உங்களுக்கு யார் சொல்லித் தந்தாங்க?"

என்று அவள் கேட்க நான் அரச உத்தியோகம் கிடைத்து முதல் நியமனாகப் புத்தளத்தில் வேலை செய்தேன். அங்கு சிங்களவர்களோடு பழகும் வாய்ப்பு எனக்குக் கிடைத்தது. இதனால் இவற்றையெல்லாம் அறிந்து கொண்டேன்"

என்று கூறினார் தந்தை. இதைக் கேட்ட பிள்ளைகள் அப்போ நாங்களும் சிங்களம் படிக்க வேண்டும் என ஆசையுடன் எண்ணிக் கொண்டார்கள்.

இவ்வாறு சிங்கள மொழியில் ஒன்று கூற மற்றையவர் அதைப் தவறாக விளங்கிக் கொள்கிறார். இந்த மொழிப் பிரச்சினையால் தான் இந்த நாடே குட்டிச் சுவராயிற்று. மற்றையவருடைய மொழி தெரியாததால் தான் சரியான தொடர்பாடலின்மை, கருத்து வெளியிடாமை, புரிந்துணர்வின்மை போன்றவற்றால் ஏற்பட்ட முரண்பாடுகளே இந்நாட்டில் இக்கொடிய யுத்தம் தோன்றி ஒரு இனத்தை மற்றைய இனத்தவர் எதிர்களாகப் பார்க்கும் துர்ப்பாக்கிய நிலை ஏற்பட்டது. இந்த நாட்டில் பெரும்பாலான மக்கள் சிங்கள மொழியைப் பேசுகின்றவர்கள். அவர்கள் நாட்டின் நாலாபக்கங்களிலும் வாழ்கின்றனர். அவர்களுடன் ஒட்டுதலுடன் வாழ்வதற்கு மொழி ஒன்றே உதவி செய்யும். எனவே, நாம் சிங்கள மொழியைக் கற்றுக் கொள்வதானது எமக்கு பல வழிகளிலும் நன்மையைத் தேடித் தரும்"

என்று தாய் கூறிய போது நாங்களும் அதைக் கற்றுக் கொள்ள வேண்டும் என ஆசையுடன் திடசங்கற்பம் கொண்டனர் பிள்ளைகள். தற்போது ஏற்பட்டுள்ள சமாதானத்தைத் தக்க வைத்துக் கொண்டு ஏனைய இனத்தவர்களுடன் சமாதானமாக வாழ வேண்டும் என்ற எண்ணம் இந்தப் பிஞ்சு உள்ளங்களில் ஏற்பட்டதைப் பார்க்கும் போது தாய் ஹம்தூன் தன் பிள்ளைகளை நினைத்துப் பெருமிதம் அடைகிறாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**தேசிய இலக்கிய கலைப் பெருவிழா - 2014**
கனிஷ்ட பிரிவு – கவிதை எழுதுதல் போட்டி – முதலாம் இடம்
செல்வி. எம்.எம்.எப். நுஹா
மட்/மம/ அல் அமீன் மகா வித்தியாலயம், காத்தான்குடி.

# ஒற்றுமையா வாழ்வோம்

உலகம் உருண்டை பாரடா
உருளும் உலகம் தானடா
பிரச்சினை வந்து சேர்ந்ததால்
புனிதம் இழந்து போச்சடா

நாளும் நாளும் சண்டைகள்
நாளும் பொழுதும சாவுகள்
சாதி பேத யுத்தங்கள்
சாபம் கொண்டு மனிதர்கள்

பாமரன், முதல் பண்டிதன் வரை
பண்புடன் வாழ்ந்த நாடடா
இது பாழடைந்து போவது ஏனடா
இது யாரின்சா கேடடா

சாதியை அழித்தான்
சாரளமாய் வந்த பாரதி அன்றுடா
நாளும் சண்டை பாரடா
நடிக்கும் உலகில் சண்டைகள் ஏனடா

உலகில் வாழும் அனைவரும்
உறவுகள் போல் அன்றோடா
எவ்வாறாயினும் எமக்குள்ளே
எதிர்ப்புகள் தோன்றுதல் தப்பண்றோடா

இந்த மதவெறி ஏனடா
இரவில் தூக்கம் போச்சடா
குருகிய நாள் வாழ்வில்
குழப்பங்கள் ஏனடா

வசதியுள்ளவர் சிலர்
வசதியற்றவர் பலர்
இந்த பாகுபாடு ஏனடா
இவ்வாறு பார்ப்பதனால் பயன் ஏதும் உண்டோடா

பாச வலைகள் இணைந்த நாடடா
பாவம் தீர்க்க வேண்டுமடா
வேண்டாம் மனித பேதங்கள்
ஒற்றுமையாக வாழ்வோம்

எவ்வளவோ வசதி படைத்த
எம் நாட்டின் வழங்களையும் பயன்படுத்தி
எப்பொழுதும் ஒற்றுமையாக
எதிர்கால சமுதாயத்தை உருவாக்குவோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**தேசிய இலக்கிய கலைப் பெருவிழா - 2014**

கனிஷ்ட பிரிவு – கட்டுரைப் போட்டி – முதலாம் இடம்

**செல்வன். எம்.என்.எம். அஸ்மத்**

மட்/மம/ காத்தான்குடி மத்திய கல்லூரி.

## ஆக்கபூர்வமான படைப்புகளால் எதிர்கால சமுதாயத்தை உருவாக்குவோம்

இன்றைய நவீன விஞ்ஞான உலகில் நாம் பயன்படுத்துகின்ற பொருட்களை இதற்கு முன் வாழ்ந்த விஞ்ஞானிகள் மற்றும் கண்டுபிடிப்பாளர்கள் எம்மை ஒரு எதிர்கால சமுதாயமாக நினைத்து பல பொருட்களை உருவமைத்துள்ளார்கள். படைப்புகள் எனும் பொழுது கலைகளும் அதற்குள் அடங்கலாம். நாம் இன்று எமது எல்லையற்ற சிந்தனையின் மூலம் கண்டுபிடிக்கும் கண்டுபிடிப்புகள், ஆக்கங்கள், கலைகள் என்பன நம்மை தொடர்ந்து வரும் சமுதாயத்துக்கு ஒப்பானதாக இருக்க வேண்டும். இவ்வாறு உதாரணமாக பார்த்தால். 1903 ம் ஆண்டு கண்டுபிடிக்கப்பட்ட விமானத்தின் கட்டமைப்புகள் சான்றாக அமைகின்றன. விமானத்தை கண்டுபிடித்த ரைட் சகோதரர்களின் எல்லையற்ற முயற்சி இன்று எமக்கு எத்தனை வழிகளில் உதவுகின்றது. இவ்வாறு கணிணியையும் பார்த்தால் சார்ள்ஸ் பபேஜ் ஆல் கண்டுபிடிக்கப்பட்ட இக்கணிணி முன்னைய காலத்தில் ஒரு அற்பம் நிறைந்த ஒரு முக்கியமான பொருளாகவே காணப்பட்டது.

அன்றைய காலத்தில் அது ஒரு ஒரு கட்டாயத் தேவைகளுக்கு மாத்திரம் பயன்பட்டது. ஆனால் இன்றைய காலத்தில் பல முக்கிய தேவைகளுக்கு பயன்பட்டாலும் ஒரு சிலரால் தப்பான வழியில் பயன்படுத்தப்படுகிறது. இதனாலேயே இது பல அறிஞர்களாலும் இலத்திரனியல் முட்டாள் என பெயர் பெறுகிறது. இருந்துபோதிலும் அன்றைய அறிவாளிகளால் ஓர் குறிப்பிட்ட அளவு விடயங்களை மாத்திரம் உள்ளடக்கியதாக கண்டுபிடிக்கப்பட்ட, ஆக்கமாக்கப்ட்ட பல பொருட்கள் இன்றைய கால அறிஞர்களால் அது பல செயன்முறைகளை கொண்ட பொருள் ஆக்கமாக மாற்றப்பெறுகிறது.

எனவே நாமும் எமது எண்ணத்தை பொது எண்ணமாக மாற்றும் பொழுது பலரது மனதையும் கவரக்கூடியவர்களாக மாற்றமுடியும். ஒவ்வொருவரும் தனது இலக்குகளை எண்ணங்களை ஒரு தலைப்பின் கீழேயே கொண்டு நடத்துவார்கள். எமது நோக்கமாகவே நாம் ஆக்கபூர்வமான படைப்புகளால் எதிர்கால சமுதாயத்தை ஒருவாக்குவோம் எனக் கொள்ளும் பொழுது கண்டுபிடிக்க முடியும் அல்லது சாதிக்க முடியும். இன்றைய சிறுவர் சமுதாயமான நாம் நம்மைப் போன்றொரு சமுதாயம் எதிர்காலத்தில் உள்ளது எனக்கொள்ள வேண்டும். நாம் இன்று கல்விக்கு பெரிதும் பயன்படுத்துகின்ற புத்தகங்களை எடுத்துக்கொண்டோமேயானால் இதற்கு இரு நூற்றாண்டுகளுக்கு முன் வாழ்ந்த பூட்டன் பேர் என்பவர் கூட சிந்தித்தார். நாம் கல்வி கற்கும் இந்தக்காலத்தில் கூட புத்தகங்களை நாமே நம் கையால் எழுத வேண்டியதாக உள்ளது. ஆனால் எதிர்கால சமுதாயமாவது நேரத்தை இலகுபடுத்தி கற்கக் கூடாதா என்றார். இதனாலேயே நவீனங்கள் குறைந்த அந்தக்காலத்தில் கூட அவர் பெரிய சவால்களுக்கு மத்தியில் தனது கண்டுபிடிப்பான அச்சு இயந்திரத்தைக் கண்டுபிடித்து தற்போதைய புத்தக் கல்விக்கு பெரும் பங்காற்றியுள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனவே, இன்றைய சிறுவர்களான நாமும் இன்று கல்விக்காவது ஏதும் குறைபாடுகள் இருப்பின் அதை நாம் எமது விடாமுயற்சியின் மூலம் இன்றைய வாழும்வளரும் காலங்களில் நாம் நிவர்த்தி செய்வது எதிர்காலத்தில் கல்விக்கு ஆற்றிய சேவைகளில் அதுவும் பெரும் பங்களிப்பாக அமையும். இவ்வாறு இன்றைய காலத்தில் கல்விக்கு மட்டுமல்லாது இன்னும் பல தேவைகளிலும் கூட குறைபாடுகள் காணப்படுவதை நம்மால் காணக்கூடியதாக உள்ளது. எமது நோக்கமும் இலக்கும் ஒரே விடயத்தில் இருக்கும்பொழுதே எம்மால் ஒரு விடயத்தை சாதிக்கமுடியும். ஆனால் நாம் நினைக்கின்றோம். இன்னும் என்ன கண்டுபிடிக்க இருக்கின்றது. எல்லாம் கண்டுபிடிக்கப்பட்டுவிட்டதே என்று ஆனால் அவ்வாறன்று ஏனெனில் முன்னோர்களும் இவ்வாறுதான் எண்ணினார்கள் ஆனால் அவர்களும் சிந்திக்க சிந்திக்கவே ஒவ்வொரு கண்டுபிடிப்புகளும் யோசனைக்குத் தென்படும். இன்னுமொரு உதாரணமாகவே நோக்கினால் புகையிரதத்தையும் நினைக்கலாம். முன்னர் கரிப்புகையிரதமாக கண்டுபிடிக்கப்பட்ட புகையிரதம் இன்று குளிரூட்டிகள் பொருத்தப்பட்ட புகையிரமத் வரை வந்துவிட்டது. இந்த புகையிரதம் எவ்வாறான புகையிரதமாக மாறிவந்தாலும் அந்தப் பொருமையும் புகழும் அதைக்கண்டுபிடித்த இல்மரையே சாரும். ஏனெனில் இந்தப்புகையிரதத்தை உலகிக்கு அறிமுகம் செய்தவரே அவர்தான். இவ்வாறு,

நாமும் அறிமுகம் செய்யும் பொருட்கள் பிற்காலத்தில் பல தோற்றங்களில் வந்தாலும் அதன் உள்ளாக்கம் நம்மையே சாரும். எனவே, இந்தக் காலத்தில் எதிர்கால சமுதாயம் பற்றிய தகவல்களைக் கூட அறிவதற்கு பல தொழில் நுட்பங்கள் வெளிவந்துவிட்டன. நாம் இன்று வீனாகக் கழிக்கும் நேரங்களில் ஒரு செக்கன் கூட அற்பமாகவே காணப்படுகிறது. ஆனால் முன்னயைவர்களில் அறிவாளிகள் கண்டுபிடிப்பது, வரைவது, கலைத்தொழில் வேலைப்பாடுகள் செய்வதாகவே காணப்பட்டது. அறிவு குறைந்தவர்கள் (ஓர்அளவான) பழமொழிகளை யோசிப்பது, உவமைத் தொடர்கள், மரபுத்தொடர்களை உருவமைப்பதாகவே காணப்பட்டார்கள். இதேவேளை இதைவைத்துப்பார்க்கும் பொழுது முன்னோர்கள் ஒரு நிமிடத்தைக்கூட வீணடிக்கவில்லை என்பது புரிகிறது. ஆனால் இந்தக்காலத்தில் சிறுவர்கள் முதல் பெரியவரகள் வரை ஆபாசப்படங்கள் பார்த்தல், நாடகங்கள், கார்டுண்கள் மற்றும் விளையாட்டுக்கள் விளையாடுதல் என்பதற்காகவே நேரத்தைக் வீணடித்துக்கொண்டிருக்கிறார்கள். 'இன்றைய சிறுவர்கள் நாளைய தலைவர்கள்' ஆகிய நாம் எமது இந்த குறிக்கோளை வைத்து சாதிக் வேண்டும். இவ்வாறு மின்குமிழைக்கண்டுபிடித்த தேமஸ் அல்வா எடிசனின் கதையைப் பார்த்தால் எமது முயற்சி வீண்போகாது என்று தோன்றும்.

இம் முயற்சிக்கு உதாரணமாகப் பார்த்தால் தற்போதைய இந்தியாவின் ஜனாதிபதியை நோக்கலாம். அவர்தான் அப்துல் கலாம். சிறுவயதிலே பரட்டைத்தலையுடன் கிழிந்த சட்டையுடன் கடற்கரையில் உலாவும் தன்மையைக் கொண்ட அப்துல் கலாம் தனது சிறுபராயத்திலேயே நாம் நம்நாட்டை ஆளவேண்டும் நம் மக்களை சீர்படுத்த வேண்டும். நாம் இந்த சிறுபராயத்தில் இருக்கும் இந்த நிலையை எதிர்கால சிறுவர்கள் யாரும் அடையக் கூடாது என சிந்தித்தார். அவரது பாடுபட்ட முயற்சியே இன்று ஒரு ஜனநாயக நாட்டை ஆளும் தைரியம் வரை உயர்த்தியுள்ளது. எனவே, 'சீரான ஒரு எதிர்காலத்தை உருவாக்குவது நம் ஒவ்வொருவரதும் தலையாய கடமையாகும்'

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**தேசிய இலக்கிய கலைப் பெருவிழா - 2014**

சிரேஷ்ட பிரிவு – கவிதை எழுதுதல் போட்டி – முதலாம் இடம்

செல்வி. எம்.எஸ்.எம். ஹிஸ்மா
மட்/மம/ மில்லத் மகளிர் மகா வித்தியாலயம், காத்தான்குடி.

# புதுமைப் பெண்கள்

பழமையான உலகம்
பசியாறத் துடிக்கும் மனிதம்
புதுமை படைத்திட
புத்துயிர் பெற்றெழு
புதுமைப் பெண்ணே!

ஏட்டுக் கல்விக் காலம்
எதற்கு பெண்ணுக்கு
என்றது உலகம்
ஏமாந்து போகாமல்
எழில் படைத்திட
எழுந்திடு பெண்ணே!

உரிமைகள் உனக்குண்டு
உன்னில் பற்பல
உண்மையுண்டு
உணர்ந்திடு பெண்ணே
உயர் பெற்றெழு கண்ணே!

உலகம் இடம் தரும்
உளி கொண்டு செதுக்கிடு
உன் கைகள் படைத்திடும்
உயர்வானதோர்
உன்னதமானதோர் படைப்பினை

சித்திரக்கலை
சிற்பக்கலை
சிறப்பான கலைகள் பலவும்
சிறப்பாய் படைத்திடு
சிறந்த பெண்ணே!

படைப்பாளியாக நீ
பவனிவா உலகினில்
பண்ணிய பாவமெல்லாம்
பருதி முன் பனிபோல
பணிந்திட வைத்து
பணி செய்ய வா
படைப்பாளப் பெண்ணே!

கண் கலங்காதே நீ
கண்ணான
கற்கண்டாய்
கற்பொழுக்கம்
காத்த கண்ணியாய்
களை கலைந்து
கண்டு பிடிப்பக்கள்
கலை செய்து

கரு மேகம் விலக்க
கரு விழிகள் என
கற்பூர தீப ஒளிகள் என
கம்பீரமாய்
காட்சியளி கண்ணே!

நாட்டுக்கு நன்னெறி
நல்லொளி காட்டிட
நடை போடு
நீ நவின்றிடும்
நன் சொல்லால்
உயர்ந்திடு
உண்மைப் பெண்ணே!

உன் உயர்
நாட்டை
உன்னதமாக்கு
உன் தாய் நாடே
உன்மைப் போற்றும்
உயர்வான பெண்ணே

புதுமை படைத்திடு
புனிதப் பெண்ணே
புவியும் புகழ்ந்திடும் வண்ணம்
புதியவை செய்திடு
புத்துயிர் கண்ணே
புவியில் நீயும்
புதுமைப் பெண்ணே!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## தேசிய இலக்கிய கலைப் பெருவிழா - 2014

சிரேஷ்ட பிரிவு – கட்டுரைப் போட்டி – முதலாம் இடம்

செல்வி. எம்.ஜே. பாத்திமா ஷுஹரத்
மட்/மம/ மீரா பாலிகா தேசிய பாடசாலை, காத்தான்குடி.

## ஆக்கபூர்வமான படைப்புக்களால் எதிர்கால சமுதாயத்தை வெல்வோம்.

மானிடன் வாழந்து கொண்டிருக்கும் இவ்விருபத்தோராம் நூற்றாண்டிலே பல்வேறுவிதமான மாற்றங்களைக் கண்டு வித்தைமிகு உலகம் ஒன்று தோற்றம் பெற வழிவகுத்த காரணிகள் பலவுள்ளன. அவ்வாறான காரணிகள் மனித மூளையில் நின்று உருப்பெற்றது புத்தாக்கப் படைப்புக்கள் என்றால் மிகையாகாது.

மனிதனானவன் தன் கடந்து வந்த கடினமான பாதையைப் பின்னோக்கிப் பார்க்கின்ற பொழுது எத்தனை எத்தனையோ இடர்களையும் கஷ்டங்களையும் கடந்துவந்தே போட்டிமிகுந்த இப்பூவுலகில் சஞ்சரித்துக் கொண்டிருக்கின்றோம் என்றால் மிகையாகாது. நம் ஒவ்வொரு மானிடனதும் உள்ளத்திலிருந்தும் மூளையிலிருந்தும் பிறந்த எண்ணங்களின் பிரதிபலிப்பே ஒவ்வொரு படைப்புக்களும் ஆகும்.

அவ்வகையில் படைப்புக்கள் என்பது எழுத்துக்கள், செயற்பாடு என்பவற்றை அடிப்படையாகக் கொண்டு தோற்றம் பெற்ற போதிலும் அவை வெவ்வேறுபட்ட மனிதர்களின் எண்ணவலைகளின் வேறுபாட்டின் விளைவே!

எழுத்துக்கள் அடிப்படையாகக் கொண்டு பிறக்கும் கடைப்புக்களே 'இலக்கியம்' என்றழைக்கப்படுகின்றது. இலக்கியங்களானது 'காலத்தைப் பிரதிபலிக்கும் கண்ணாடி எனக் கூறுமளவிற்கு காலவோட்டத்தை அடிப்படையாகக் கொண்டு கால மாற்றத்தையம் சமூக மாற்றத்தையும் உள்வாங்கித் தோற்றம் பெற்றுள்ளன இவ்விலக்கியங்கள். அவ்வகையில் 'பாரதி' புதுமை செய்த இலக்கியவாதி ஆவார். அடிமைத் தளைகளால் கட்டுண்டு அறியாமை எனும் இருளில் மூழ்கிக் கிடந்த அடிமைச் சமூகத்தையும் பெண்ணடிமைத் தனத்தையும் வேரோடு அறுத்து பின் கண்ட சமூகத்தைற்கு தன்படைப்புக்களின் வாயிலாகப் புத்துணர்ச்சியூட்டினார் எனலாம். 'கவிதை' எனும் படைப்பினூடாக இருளில் அகப்பட்டுக்கிடந்த பாரத நாட்டை எழுச்சிபெறச் செய்தது அவரது படைப்புக்கள் என்றால் அதை யாராலும் மறுக்கவோ மறைக்கவோ முடியாது.

அதேபோன்று கவிதைப்பரப்பின் ஆழத்தைக் காட்டி சமுகத்தை வெற்றிபெறச் செய்த பெருமை 'பாரதிதாசன்' எனும் கவிஞருக்கே உரித்தாகும். 'அடுப்பூதும் பெண்களுக்கு படிப்பெதற்கு?' என்று கூறிய சமுகத்திலிருந்து பெண்களை சமுகத்தின் அடித்தளத்திலிருந்து முன்னணிக்கு கொண்டு வந்தவர்.

'சிறுகதை' என்று கூறப்படும் படைப்புக்கள் வாயிலாகவும் மனிதனின் உள்ளுணர்வுகளை எல்லாம் அப்பட்டமாக படம்பிடித்துக் காட்டியவர்கள் சிறுகதையாசிரியர்கள். 'மணிக்கொடி' எனும் பத்திரிகையின் வாயிலாக சிறுகதை உலகில் பிரவேசம் செய்த கு.ப. ராஜகோபால், புதுமைப்பித்தன், கல்கி, மௌனி போன்றோர் குறிப்பிடத்தக்கவர்கள். 'வாய் வலிமையைக் காட்டிலும் பேனாவின் முனை வலிமையானது' என்ற கூற்றுக்கமைய தங்களின் எழுத்தாக்கப் படைப்புக்களின் வலிமையால் புதுவுலகை உருவாக்கினார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்விலக்கியங்களைப் பொறுத்தவரை பாரதமாயினும் ஈழமாயினும் கீழைத்தேசமாயினும் மேலைத்தேசமாயினும் எல்லாவிடங்களிலும் ஆக்கபூர்வமான இலக்கியப் படைப்புக்களின் பெயரால் மறைந்தும் உயிர்வாழ்ந்து கொண்டிருக்கிறார் மேற்குலக கவிதையாசிரியர், நாடக ஆசிரியர் என தனக்கே உரிய பல்வேறு முகங்களைக் கொண்ட 'ஷேக்ஸ்பியர்' இவரே பல ஆக்கபூர்வமான இலக்கிய படைப்பாற்றலுக்கு வழிகாட்டியாக இருந்தார். அதேபோல் 'மாப்பஸான்' போன்ற சிறுகதையாசிரியர்களும் தங்கள் படைப்பாற்றலின் சிறப்பால் உலகை வலம் வந்தவர்கள்.

இவ்வாறு எழுத்துலகைப் பொறுத்தவரை அவற்றில் பிவேசித்தவர்களின் படைப்பாக்கங்கள் புதிய உலகு பற்றிய மனப்பதிவினை மனித சமுகத்தின் முன் கொண்டு வந்து நிறுத்தின எனலாம். அந்தளவிற்கு சமுகக் குறைகளையும் நிறைகளையும் சுட்டிக்காட்டி அவற்றையெல்லாம் களைந்து புதுமை உலகு படைக்க வழிகாட்டினார்கள்.

ஆக்கபூர்வமான படைப்புக்கள் எனும் போது வெறுமனே எழுத்தினால் எழுதி தாள்களினால் அச்சிட்டு சமுகத்தை சென்றடைவதை மட்டும் கருத முடியாது. இவற்றையெல்லாம் தாண்டி தங்களது அளப்பறிய காலத்தையும் பொன்னான நேரத்தையும் புதுவுலகைப் படைக்க நவீன கண்டுபிடிக்புக்களை உருவாக்கிய 'விஞ்ஞானிகள்' பற்றியும் குறிப்பிட வேண்டும்.

ஒவ்வொருவரும் தங்களின் வாழ்நாளின் பெரும் பகுதியை மனிதகுலத்தின் தன்மைகளின் பொருட்டு செலவழித்து உலகமே திரும்பிக் பார்க்க வைத்த கண்டுபிடிப்புக்களும் கூட ஆக்கபூர்வமான படைப்புக்களே!

தொலைவிலிருக்கும் ஒருவருடன் எவ்வித கம்பிவழி தொடர்பும் நேரடியாக இல்லாது ஒருவருடன் கதைப்பது ஒரு காலத்தில் சாத்தியமில்லை. அவ்வாறான ஒரு கதையையாகும் கூறினாலும் அவர்களை வேடிக்கையாகப் பார்க்கும் சமுகத்தின் மத்தியில் 'தொலைபேசி' யைக் கண்டுபிடித்தார 'அலெக்ஷான்டர் கிரஹம்பெல்' இன்று உலகத்தின் எந்த மூலையிலிருக்கும் ஒருவருடனும் எந்தக் கணத்திலும் உரையாற்ற முடிகின்றது என்றால் அம்மனிதனின் புத்தாக்கச் சிந்தனை மூலமே இன்றைய உலகு உள்ளங்கைக்குள் கிடக்கின்றது.

'தொலைக்காட்டி' மூலம் தொலைவிலுள்ள உலகை திரும்பிப் பார்க்க வைத்தவர் 'கலிலியோ கலீலி' தன் கண்டுபிடிப்பை உலகமே உதிர்த்தது. இருட்டறையினுள் சிறைவைத்து குருடனாக்கி தன்னைக் கல்லறையின் விளிம்பில் தள்ளிவிட்ட உலகம் நூற்றாண்டுகள் கழித்து அவருக்கு சிலைவைத்துக் கொண்டாடியது.

தீராத பிணியில் துன்புற்ற மனித குலத்தை மீட்டு பாடுபட்டார் 'லூயி பாஸ்டர்' நுண்ணுயிர்க் கொல்லியை கண்டுபிடித்தார். மதி போன்று அழகாக இருக்க வேண்டும் என்று வதனத்தைப் பற்றி வருணனை செய்த புலவர்கள் ஒரு காலத்தில் அம்மை நோயின் தீவிரத்தால் உண்மையில் மனித முகங்கள் குன்றும் குழியும் நிறைந்த மதி போன்றே ஆனது. அவலட்சணமிகுந்த முகங்களை வைத்துக் கொண்டு சமுகத்தின் முன்னிலையில் செல்வதற்கு வெட்கப்பட்டு வீட்டினுள் அடங்கிக் கிடந்து மாண்டு போன சமுகத்தை அம்மை நோயிலிருந்து விடுவித்தவர் 'எட்லர்ட் ஜென்னர்'.

இவ்வாறு ஒவ்வொரு மனிதனினதும் தீவிரமான முயற்சிகளின் மூலமாகவும் அவர்களின் ஆற்றல் மிக்க படைப்புக்கள் மூலமும் உலகத்தைப் புதிய பரிணாமத்திற்கு இட்டுச் சென்றனர். அன்று வாழ்ந்த மனிதன் கல்லையும் கல்லையும் உரசி தீயைக் கண்டுபிடித்தது முதலே உலகம் நவீனத்தின் விளிம்பைத் தொட்டுவிட்டது. பூமியானது தட்டையா?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உருண்டையா? என்று விவாதித்த காலம் போய் பூமிக்கு உள்ளேயும் வெளியேயும் என்ன நடக்கின்றது என்று ஆய்வு செய்யும் காலமாக மாறியுள்ளது. இவ்வாறான ஆக்கபூர்வமான படைப்புக்களைப் படைத்த பல்வேறு நபர்களும் சரித்திரத்தில் இடம்பிடித்துள்ளனர். சேர் நியூட்டன்? மேரிகியூரி, சி.வி. இராமன், கிரஹம்பெல், மார்க்கோணி என்று அடுக்கிக் கொண்டே போகலாம்.

பல்வேறுபட்ட படைப்புக்கள் உலகில் தோன்றினாலும் கூட ஆக்கபூர்வமான படைப்புக்களால் மட்டுமே புதிய உலகைப் படைக்கமுடியும். இதற்குதாரணமாக 'அல்பர்ட் ஐன்ஸ்டன்' உலகத்தையே உலுக்கிக் கொண்டிருக்கும் அணுகுண்டைக் கண்டுபிடித்தவர். இதன் மூலம் இரண்டாம் உலகமகாயுத்த காலத்தில் பல உயர்சேதங்கள் ஏற்பட்டன. அதன் விளைவு இன்று வரை ஜப்பானின் ஹிரோஷிமா மற்றும் நாகசாகி போன்ற பிரதேசங்களை ஆட்டிப் படைத்துக் கொண்டிருக்கின்றது எனலாம். இன்று வரை அங்கு பிறக்கின்ற குழந்தைகள் ஊனமாகவே பிறக்கின்றன. அங்க ஒரு புற்பூண்டு கூட முளைக்காத நிலையே காணப்படுகின்றது. இதிலிருந்து ஆக்கபூர்வமற்ற படைப்புக்களால் ஏற்படும் சீரழிவுகளை விளங்குகின்றன.

சர்வதேச அரசியல் பரப்பில் கூட பல்வேறு போர்கள் பிரச்சினைகள் ஏற்பட்டுக் கொண்டே நாளாந்தம் உள்ளன. உலக வல்லரசுகள் ஏனைய அரசுகளில் போர்களைத் தொடுத்து உலகமே இன்று சுடுகாடாக மாறிஉள்ளது. இதற்குக் காரணம் உலகம் நவீனம் கண்டு அதன் வழி செல்வதனால் ஆனும். ஆம்! இன்று கண்டுபிடித்து சந்தைக்கு நாளாந்தம் அறிமுகம் செய்யப்படும் புதிய வகை ஆயுதங்கள் என்பனவே அதற்குக் காரணமாகும். அதே போன்று அண்மையில் சிரியாவில் நடைபெற்ற இரசாயனத்தாக்குதல் இதற்கு தக்க சான்றாகும். இவையெல்லாம் நவீன கண்டுபிடிப்புக்களின் விளைவினால் ஆகும். ஆனால் இவை ஆக்கபூர்வமான படைப்பாக இருந்திருந்தால் இதன் மூலம் சமூகம் நன்மையே கண்டிருக்க வேண்டும். ஆனாலும் இதற்கு மாற்றமாக படைப்புக்கள் மூலம் உலகமே அச்சுறுத்தல் கண்டுள்ளது. வருத்தத்திற்குரிய விடயமாகும்.

சமூகத் தொடர்பாடற் சாதனங்கள் கண்டுபிடிக்கப்பட்ட போது சமுகத்தின் எல்லா மட்டத்திலுள்ள மக்களும் இதனுள் உள்வாங்கப்பட்ட போதிலும் இன்றைய சமுக தொடர்புசாதனங்கள் மூலம் பல்வேறு தீமைகளையே கண்டு வருகின்றது. முகப்புத்தகம், மின்னஞ்சல், இணையம் என்பன நன்மைக்கு பயன்படுத்தப்பட்டாலும் கூட அவை தீமையின் வழியிலேயே இன்று செல்கின்றன. குறிப்பாக முகப்புத்தகம் தொடர்பில் 2014 மட்டும் இதுவரை இலங்கையில் 500 முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. முகப்புத்தகம் தொடர்பில் பல்வேறு உயிர்களும் பரிதாபகரமாக இழக்கப்பட்டுள்ளது.

விஞ்ஞானம் வளர்வதற்கு முன் மனிதன் பல்வேறுபட்ட அனுகூலங்களைப் பெறாவிடினும் கூட தீமைகள் இன்றியே வாழ்ந்து வந்தான். ஆனால் இன்றைய சூழலில் வாழும் மக்கள் பல்வேறுபட்ட உடல், உள ரீதியான பிரச்சினைகளை எதிர்நோக்குகின்றனர்.

ஆதிகாலத்தில் வாழ்ந்த மக்கள் இன்றைய மனிதன் எதிர்நோக்குவது போன்று பல்துறையிலும் பிரச்சினைகள் இன்றி சுமுகமாக, சந்தோஷமாக, ஆரோக்கியமாக வாழ்ந்தான். உடலை வருத்தி வேலை செய்யாது இருந்த இடத்திலேயே கணினிக்கு முன்னால் இருந்து கொண்டு விசைப்பலகையில் தட்டிக்கொண்டும் இருந்து கிடைக்கின்ற அதிரடி உணவுகளை உண்டும் வாழ்ந்தால் பல்வேறு உடல் தொடர்பான நோய்களை எதிர்கொள்கின்றான். புற்றுநோய், உயர்குருதியமுக்கம், கொலஸ்ரோல் என்று புதுப்புது நோய்கள் மனிதனை ஆட்கொண்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவசரகதி உலகினால் மனிதர்களின் வேலைப்பளு அதிகரித்து மனரீதியான உளைச்சல்களுக்கு ஆளாகின்றனர். இதனால் சமுகத்தில் பல்வேறுபட்ட குடும்பப் பிரச்சினைகளையும் நாளாந்தம் சந்திக்கின்றனர்.

ஆகவே தான் மனிதன் வாழும் சூழல் பற்றி அறிந்து கொண்டு தம் படைப்புக்களை ஆக்க முன்வர வேண்டும். ஆக்கபூர்வமான படைப்புக்கள் மூலம் சூழல், மனிதன், சமுகம் என்பன பாதிப்புறக்கூடாது.

வரலாற்றினடிப்படையில் கண்டுவந்த மாற்றங்களை எல்லாம் உள்வாங்கி உருவாக்கப்பட்ட ஆக்கங்கள் மனிதனைப் பண்படுத்துபவதாகவே காணப்பட வேண்டுமே ஒழிய மனிதனைப் புண்படுத்துபவையாக இருக்கக் கூடாது.

இன்று நாம் கண்டுபிடிக்கும் ஆக்கபூர்வமான வாகனங்கள் கூட சூழலுக்கு உகந்ததாக சூழலுக்கு புகைகக்காததாக இருக்க வேண்டும்.

அதேபோன்று சமுகவலைப்பின்னல்கள் மூலம் ஏற்படும் கலாசார சீரழிவுகள் இல்லாது சமுகத்தை ஒன்றிணைக்கும் சமுக ஊடகமாகவே அவை தொழிற்பட வேண்டும்.

மனிதரகளின் உளவியலைப் பாதிக்காத வண்ணம் திரைப்படங்கள் உருவாக்கப்பட வேண்டும். இன்று உருவாக்கப்படும் திரைப்படங்களையும் இலக்கியங்களையும் பொறுத்தவரை வர்த்தகங்களை மையமாகக் கொண்டே உருவாக்கப்படுகின்றது.

ஆரம்பகால கட்டத்தில் இலக்கியங்கள் படைக்கப்பட்டது போன்று சமுகத்தின் நன்மைகளை நோக்காகக் கொண்டு தரமான இலக்கியம் படைக்கும் மரபிலிருந்து விலகி எதிர்பால் கவர்ச்சியை வெறுமனே காட்டக்கூடிய இலக்கியங்கள் மட்டுமே படைக்கப்படுவது வருத்தத்திற்குரிய விடயமாகும்.

அதேபோன்று இன்று படமாக்கப்படுகின்ற திரைப்படக் காட்சிகளை வெறுமனே பிரம்மாண்டமாக எடுக்கப்படுவதோடு மட்டும் நின்றுவிடுகின்றது. இதன் மூலம் தரமான படைப்புக்களைக் காண்பது அரிதிலும் அரிதாகிவிட்டது.

எனவே தான் எம்மால் உருவாக்கப்படும் படைப்புக்கள் வெறுமனே விலைக்கு மட்டும் விலைபோகக்கூடியவாறு உருவாக்கப்படாது ஆக்கபூர்வமானதாக எதிர்கால சமுதாயத்தை வெற்றிகொள்வதாக அமைய இறைவனைப் பிரார்த்திப்போமாக!

---

கிழக்கு மாகாண கலை இலக்கியப் பெரு விழா - 2014

சித்திரம் - கனிஷ்ட பிரிவு

**(பிரதேச மட்டம்: 1ம் இடம், மாவட்ட மட்டம் : 1ம் இடம்)**

செல்வி. எம்.ஏ.எப். அஸ்னா

மட்/மம/ அல்அமீன் வித்தியாலயம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**தேசிய இலக்கிய கலைப் பெருவிழா - 2014**
திறந்த பிரிவு – பாடலாக்கம் போட்டி – முதலாம் இடம்
**திருமதி . மீராமுகைதீன் உம்மு நசீலா**
இல. 18/33, அல் அமீன் வீதி, புதிய காத்தான்குடி-06.

# நாடும் நாமும்



சுற்றுச்சூழல் சுத்தம் பேண ஏலேலங்கிளியே
சற்று நாம் நிதானம் கொள்வோம் ஏலேலங்கிளியே
வெற்றுப்போத்தல் சிரட்டை மட்டையென ஏலேலங்கிளியே
வேறு தேவைக்காக்கிடுவோம் ஏலேலங்கிளியே!

அண்மை அயலார் நலத்திலெல்லாம் ஏலேலங்கிளியே
அக்கறை நாம் கொள்ள வேணும் ஏலேலங்கிளியே
கண்கண்ட இடத்திலெல்லாம் ஏலேலங்கிளியே
கழிவுகளை வீசக்கூடாது ஏலேலங்கிளியே!

வீடு சேரும் கழிவுகளை ஏலேலங்கிளியே
விதித்திட்ட தினங்களிலே ஏலேலங்கிளியே
நாடி வந்து அகற்றிடுவார் ஏலேலங்கிளியே
நல்லதொரு உள்ளூராட்சி ஏலேலங்கிளியே!

நகர பிரதேச நலனுக்காக ஏலேலங்கிளியே
நமது நாட்டு அரசாங்கம் ஏலேலங்கிளியே
நகர உதவித்திட்டங்களை ஏலேலங்கிளியே
நிறப்பமாக செய்கின்றது ஏலேலங்கிளியே!

தேடிவரும் மரண டெங்கை ஏலேலங்கிளியே
தேசியமாய் ஒழிக்க திட்டம் ஏலேலங்கிளியே
ஊர் கூடிய முன்னெடுப்பால் ஏலேலங்கிளியே
உயிரச்சம் குறைந்து மக்கள் ஏலேலங்கிளியே!

சுகாதாரப் பணி மனையில் ஏலேலங்கிளியே
சுகந் சேவை இலவசமாய ஏலேலங்கிளியே
மாநகர நகர பிரதேச ஏலேலங்கிளியே
மாட்சிமைக்கு உள்ளூராட்சி சபை ஏலேலங்கிளியே!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேசும் மக்களோ டிணைந்து ஏலேலங்கிளியே
பிரதேச செயலகம் சேவைசெய்ய ஏலேலங்கிளியே
யாசிக்கும் வறுமை போக்க ஏலேலங்கிளியே - இன்று
திவிநெகும நல்லசேதி தரும் ஏலேலங்கிளியே!

இலவசக் கல்வி யுடன் ஏலேலங்கிளியே
எமக்கான வைத்திய சாலைகள் ஏலேலங்கிளியே
நிலை காக்க காலரண்கள் ஏலேலங்கிளியே – சகலதும்
நிறைவாக எமது நாட்டில் ஏலேலங்கிளியே!

உலகக் கிண்ணங்களை ஏலேலங்கிளியே
உயிர் கொடுத்து விளையாடி ஏலேலங்கிளியே
எம் மண்ணின் வீரர்கள் ஏலேலங்கிளியே
வென்று வந்து பெருமை சேர்ப்பார் ஏலேலங்கிளியே!

ஆசரத்த திட்டம் எல்லாம் ஏலேலங்கிளியே
அபிவிருத்தி உச்சத்திலே ஏலேலங்கிளியே
ஆசியாவின் அதிசயமாய் ஏலேலங்கிளியே
அழகான எமது இலங்கை ஏலேலங்கிளியே!

**கிழக்கு மாகாண கலை இலக்கியப் பெரு விழா - 2014**

சித்திரம் - சிரேஷ்ட பிரிவு

**(பிரதேச மட்டம்: 1ம் இடம்)**

செல்வி. ஏ.ஏ.எப். றிதா

மட்/மம/ மில்லத் மகளிர் வித்தியாலயம்

**தேசிய இலக்கிய கலைப் பெருவிழா - 2014**

பாலர் பிரிவு – கவிதை பாடல் போட்டி – முதலாம் இடம்

செல்வி. எம்.எஸ்.எப். றினா

மட்/மம/ ஹிழுறிய்யா வித்தியாலயம், காத்தான்குடி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**தேசிய இலக்கிய கலைப் பெருவிழா - 2014**
திறந்த பிரிவு – கவிதை – முதலாம் இடம்
திருமதி. அபூபக்கர் அனீஸா பானு
இல. 297/35, பிர்தௌஸ் நகர், புதிய காத்தான்குடி-02

## ஆண்டவனே அருள் புரிவாய்



உண்மையினை உரைக்கின்றோம் ஒவ்வோர் நாளும்
இல்வாழ்வில் இனிமையுறத் தேற வில்லை
நன்மைகள் செய்கின்றோம், நாங்கள் நாளும்
நன்மையென நல்வாழ்வும் அமைய வில்லை
இன்பங்கள், இடுக்கண்கள் என்றும் வாழ்வில்
அடைகின்றோம். ஆனந்தம் இல்லை பாரில்,
வன்மையுடன் கேட்கின்றோம் வல்லோன் இறைவா
வாழ்வினிலே வசந்தத்தை பரப்பி வையேன்!

நேயமுறும் நண்பர்கள் நிதம் இருந்தார்
நின்வாழ்வில் தொல்லை வர அவர் பிரிந்தார்
கயவர்கள் கள்வர்கள் வாழ்வு எல்லாம்
காசினியில் கருத்துறவே அமையும் போது
சுயமாக உழைத்துண்டு காலம் போக்கும்
சோதரர்கள் எம் வாழ்வில் சோகம் நித்தம்!
தூயவனே தொல்லைகள் தீர்த்து இந்த (க்)
காசினியில் எம் வாழ்வை மலர வையேன்!

இறையச்சம், நினைவுடனே எங்கள் வாழ்வை
உனக்காக கழிக்கின்றோம் ஒவ்வோர் பொழுதும்
சிறையுற்றோம், கறையுற்றோம் சகத்தில் நாமும்
சிறப்பான வாழ்வெண்ணித் தவிக்கின்றோமே!
நறையுற்ற வதையெனவே எங்கள் வாழ்வும்
நலிந்ததனால் நாளெல்லாம் துயரம் கண்டோம்!
குறையில்லாக் குவலயமாய வாழ்வு ஒன்றை
கொடுத்தருளேன், தூயவனே எமக்கு நித்தம்!

எத்திக்கிற் சென்றிடினும் வாழ்வில் நித்தம்
எழிலின்றித் தவிக்கின்றோம், ஏக இறைவா
சத்தான ஓர் வாழ்வை பாரில் என்றும்
தந்தருள தயவுடனே இரைஞ்சுகின்றோம்!
கொத்தாகத் தொல்லைகள் வந்து வாழ்வை
குலைக்கின்றதே, கெடுக்கிறதே இன் நிலையை
முற்றாக நீயொழித்து எங்கள் வாழ்வில்
முறுவலெனும் முல்லையினை மலர வையேன்!

பொய்யினை பொழுதெல்லாம் உரைத்து வாழும்
பொல்லாதோர் காண்கின்றார் நித்தம் மின்பம்
மெய்யொன்றோ மேன்மைதரும் என்று எண்ணி
மேதினியில் சீவிக்கும் எங்கள் வாழ்வில்
வையமதில் நிலைத்துளதே, பிறர் தயவில்
வாழ்கின்ற நிலைமையது இதனைப் போக்கி
ஐயமில்லா அமைதியுறு வாழ்வு ஒன்று
ஆண்டவனே இன்றிருந்து அருளச் செய்வாய்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தேசிய இலக்கிய கலைப் பெருவிழா - 2014

திறந்த பிரிவு – சிறுகதை ஆக்கப் போட்டி – முதலாம் இடம்

திருமதி. சித்தி றபீஸா முகம்மது நியாஸ்
இல. 155, ஸாவியா வீதி, காத்தான்குடி-01.

அம்மாவும் அப்பாவும் பேசிக்கொண்டிருந்தது ராஜாவின் காதுகளில் எதேச்சையாக விழுந்தது. பேச்சில் தன் பெயரும் அடிபடவே காதை கூர்மையாக்கினான் 'ராஜாவை எப்படிங்க விட்டுட்டுப் போற. அவன் சின்னப்பையன். ரதியாவது சமாளித்துக் கொள்வாள். அம்மாவின் கவலையான குரல் ராஜாவை மேலும் கவனமாக கேட்க வைத்தது. அவர்களின் பேச்சைக் கேட்கக் கேட்க சந்தோசமும் கவலையும் கலந்த ஓர் இனந் தெரியாத உணர்வில் இருந்தான் ராஜா.

அம்மாவும் அப்பாவும் வேலைநிமித்தம் ஒருமாதம் கட்டாயமாக வெளியூர் செல்கிறார்கள் பிள்ளைகளை என்ன செய்வது? என்பதே அவர்களின் பேச்சின் சாராம்சம்.

'நான் வரல்லே. நீங்கமட்டும் போய் வாருங்கள்' அம்மா முடிவாகச் சொன்னாள். 'அறிவோடுதான் பேசுகிறாயா? இந்த ட்ரெயினிங்கிற்குப் போகாட்டி உன்னை வேலையிலிருந்தே தூக்கிவிடுவார்கள். அப்புறம் எப்படி குடும்பச் செலவைச் சமாளிப்பது? பிள்ளைகளின் படிப்பைக் குலைக்க முடியாது. அவர்கள் ஸ்கூல் போகனும். அதனால் அவர்களையும் கூட்டிச் செல்ல முடியாது. என்ன செய்யலாம் என்று யோசி' மனைவிக்கு கட்டளையிட்டவராக அப்பாவும் சிந்தனையில் ஆழ்ந்தார்.

நீண்ட நேர ஆலோசனையின் பின் எங்களை மாலா அன்ரியுடன் தங்கவைப்பது என்று முடிவெடுக்கப்பட்டது. அதன் பின் எங்களிடம் செய்தி தெரிவிக்கப்பட்டு அபிப்பிராயம் கேட்கப்பட்டது.

ராஜாவுக்கோ சந்தோசம் தாளவில்லை. எப்போதும் படிபடியென்று சொல்ல அம்மா இல்லை. நன்றாக கார்ட்டூன் பார்க்கலாம். விளையாடலாம். காலையில் தூங்கலாம். ஐஸ்கிறீம் ...ம்.... சாப்பிடலாம். சுதந்திரமாகத் திரியலாம்... இன்னும் எத்தனையோ ...லாம்கள். 12 வயது ராஜாவிற்கு இது ஒரு மகிழ்ச்சியான விடயமாகவே தோன்றியது.

'நாங்க போய்வரும் வரை உங்களால் இருக்கமுடியுமா? சமாளிப்பீர்களா?' அப்பா கவலையுடன்தான் கேட்டார் அம்மாவின் முகத்திலோ உலகத்தின் மொத்தகவலைகளும் குடிகொண்டிருந்தன.

'நான் இருந்துகொள்வேன். அக்காவையும் பார்த்துக்கொள்வேன். நீங்கள் கவலைப்படாமல் போய் வாருங்கள் அப்பா, அம்மா' என்று பெரிய மனிதன் தோரணையில் கூறிய ராஜாவை அப்படியே கட்டிக்கொண்டாள் அம்மா.

ஒருவாறு பயணநாள் வந்தது. பஸ்நிலையம் வரை சென்று அழுது கொண்டே புறப்பட்ட அப்பாவையும் அம்மாவையும் சிரித்துக்கொண்டே வழியனுப்பினான். பிறந்ததிலிருந்து பெற்றோரைப் பிரிந்தறியாத ராஜாவிற்கு இது ஒரு புதிய அனுபவமாக இருந்தது. ஆனால் அவனுக்கு எதிர்மாறாக அவனது அக்கா ரதி அழுது கொண்டிருந்தது அவனுக்கு ஆச்சரியமாக இருந்தது. இவர் ஏன் அழுகிறார். அப்பா, அம்மா இல்லாவிட்டால் நல்லந்தானே என தனக்குள்ளே கேட்டுக்கொண்டான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'ராஜா இங்கே வா' என அழைத்த மாலா அன்ரியிடம் 'நான் விளையாடிட்டு வாரன்' என பதிலை எதிர்பாராமல் சிட்டாய் வெளியே பறந்தான்.

முதல் வாரத்தை தன் விருப்பப்படியே கழித்தான். ராஜா மறுக்கும் அன்ரியிடம் பிடிவாதமாக அழுது எதையும் சாதித்துக் கொண்டான். தினமும் ஐஸ்கிறீம். 'ஒரு நாள் அம்மா ஐஸ்கிறீம் சாப்பிட விடுவதேயில்லை சளி, சளியென்று சரியான கட்டுப்பாடு. இதோ நான் தினமும் வாங்கிச் சாப்பிடுகிறேனே, என்னத நடந்துவிடப்போகிறது' என்று தனக்குத்தானே கேட்டுக் கொண்டான். விளையாட்டும் TV யுமாக பொழுதைக் கழித்தான். மாலா அன்ரியோ அவனைக் கட்டுப்படுத்தும் வழிதெரியாமல் திகைத்தாள்.

இரண்டாவது வாரமும் அப்படியே கழிந்தது. மூன்றாவது வாரத்தில் மெல்ல எட்டிப்பார்த்த சளி இருமல் காய்ச்சலுடன் பெரிதாகி வைத்தியசாலையில் அட்மிட் பண்ணவேண்டிய அளவிற்கு வந்துவிட்டது.

மெல்ல மெல்ல அம்மா அப்பாவின் தேவை புரியத்தொடங்கியது அவனுக்கு. அவனால் இனி ஒரு நிமிடம் கூட அவர்கள் இல்லாமல் இருக்க முடியவில்லை.

'தம்பிக்கு என்ன வாங்கி வர' அம்மா முதல் வாரம் போனில் கேட்டபோது சொகலேட், கார்பொம்மை, டொபி என அடுக்கிய சாமான் லிஸ்டை இப்போது நினைத்தால் கோபம் கோபமாய் வந்தது. அம்மாவிடம் உடனடியாகப் பேசவேண்டும் போல் இருந்தது. ஆஸ்பத்திரி கட்டிலில் இருந்துகொண்டு அம்மாவிற்கு ஒரு கடிதம் எழுதினான். கவனமாக அதை மடித்து ஒட்டினான். அம்மா வந்ததும் காட்டி வேண்டும் என்று பத்திரமாக எடுத்து வைத்துக் கொண்டான். அப்படியே அயர்ந்து தூங்கிவிட்டான்.

'ராஜா, ராஜா.... எழும்புங்க. இந்த ஜூஸைக்குடிங்க இன்னிக்கு உங்களை வீட்டிற்கு போகச் சொல்லிட்டாங்க. எழும்புங்க...'

யார்? அம்மாவா? அம்மாதான். ஆனால் ஏன் வெள்ளை உடுப்பில் நிற்கிறார். கையில் என்ன? ஜூஸ் கிளாஸ்.

'அம்மா.. அம்மா... நீ எங்கேம்மா போன. என்னால் தனியா இருக்க முடியலம்மா. வாம்மா வீட்டிற்கப் போகலாம்' அம்மாவின் கையைப் பிடித்துக்கொண்டு அழுதான்.

'இந்ம ஜூஸைக் குடிங்க. போவம்' கிளாஸை அவனது வாயின் அருகே கொண்டுவந்தாள் அம்மா. அவன் குடிக்கத் தொடங்கும் போது, கிளாஸைத் தட்டிவிட்டாள்.

'அம்மா இல்லையென்று உன் இஷ்டத்திற்கு திரிந்து விட்டு இப்போது பார். நீ இப்போது நோயினால் சாகப்போகிறாய். உன் அம்மா இனி வரமாட்டார். உன்னை நான் ஒரு றூமில் போட்டு அடைக்கப்போகிறேன். அங்கே எலி, பூரான், மட்டைத்தேள் ஏன் பாம்பு எல்லாம் இருக்கு. சொல் கேளாத பிள்ளைகளுக்கு இதுதான் தண்டனை' என்றவள் அவனைத் தரதரவென்று இழுத்துச் சென்று ஓர் இருட்டு அறைக்குள் தள்ளிப் பூட்டினால். கதவின் மேல் கைகளால் அடித்துக்கொண்டு 'அம்மா, அம்மா நான் இனிமே அப்படிச்செய்யமாட்டேன். என்னை மன்னித்து விடுங்கள். அம்மா அப்பா இல்லாதது எவ்வளவு கெட்ட விடயம் என்று இப்போதுதான் புரிகிறது. பெற்றோரோடு இருப்பதுதான் உண்மையான சுதந்திரம் என்று எனக்கு இப்போ விளங்குகிறது. அம்மா கதவைத் திறங்க... எனக்குப் பயமா இருக்கு.... அம்மா... அம்மா... ஆ...' என்று அலறியவனாக கீழே சாய்ந்தான்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'ராஜா, ராஜா... எழுந்திரு என்ன இது கட்டிலிலிருந்து விழுந்துவிட்டாயா? இதோ பார் உன் அம்மா வந்துவிட்டேன். கண்ணைத்திற' ராஜா கண்ணைத் திறந்து பார்த்தான். ஆஸ்பத்திரிக் கட்டிலில் இருந்து கீழே விழுந்திருந்தான். அட... கனவு.... என்ன பயங்கரம்!!

உண்மையிலேயே அம்மா அவன் முன்னே பச்சை நிற சேலையில் அவ்ன அம்மா அவன் முன்னே.... 'என் அம்மா எவ்வளவு அழகு. யாரும் அவரைப்போல் அழகில்லை' மனதினுள் தானாக எண்ணம் ஓடியது.

'சே.... என்ன இன்று இப்படியெல்லாம் நினைக்கிறேன். இவ்வளவு காலமும் நாம் அம்மாவோடு இவ்வளவு உரிமையோடு நெருக்கமாக உணர்ந்ததில்லை. என்ன மடத்தனம். அம்மா சொல்லும் அறிவுரைகளும் நல்ல விடயங்களும் எனக்குப் பிடிக்கவில்லை. அதனால்தான் அவளை ஒரு விரோதிபோல் பார்த்திருக்கின்றேன். விளையாட்டுப் புத்தி அம்மாவை முழுமையாகப் பரிந்த கொள்ள அவனை விட்டிருக்கவில்லை என்பத இப்போதுதான் அவனுக்கு விளங்கியது.

'அம்மா.. அம்மா... நான்... நீங்க.... வந்து'

நாக்கத் தடுமாற அம்மாவை அணைத்துக்கொண்டான்.

'இனிமேல் எங்கேயும் என்னை விட்டுவிட்டுப் போகாதம்மா.....'

'இல்லடா. நான் எங்கேயும் போகமாட்டேன். என் செல்லம்... அம்மாவை ராம்ப மிஸ் பண்ணியாடா?... வா வீட்டிற்குப் போகலாம்' மகனை அணைத்தவாறு அழைத்துக்கொண்டு வீட்டை நோக்கிப் புறப்பட்டாள் அம்மா!

உலகமொத்தமும் அவனுக்குச் சொந்தமாகி விட்டதுபோல் சந்தோசத்தோடு அம்மாவோடு நடந்து சென்றான் ராஜா.



**தேசிய இலக்கிய கலைப் பெருவிழா - 2014**

பாலர் பிரிவு – கையெழுத்துப் போட்டி – முதலாம் இடம் (தமிழ்)

**செல்வி. மு.இ. பாத்திமா இஸ்பா**

மட்/மம/ ஸாவியா மகளிர் வித்தியாலயம், காத்தான்குடி



தேசிய இலக்கிய கலைப் பெருவிழா – 2014

பாலர் பிரிவு – கையெழுத்துப் போட்டி – முதலாம் இடம் (ஆங்கிலம்)

**செல்வி. அ.அ. பாத்திமா பஸ்லுல் ரனா**

மட்/மம/ ஸாவியா மகளிர் வித்தியாலயம், காத்தான்குடி.



தேசிய இலக்கிய கலைப் பெருவிழா – 2014

கனிஷ்ட பிரிவு – கவிதை பாடல் போட்டி – முதலாம் இடம்

**செல்வி. ஏ.ஏ. ஆசுல் மிப்ரஹா**

மம்ஹதுஸ்ஸுன்னா அந்நபவிய்யா மகளிர் அரபுக் கல்லூரி, காத்தான்குடி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 2014

# பிரதேச கலை இலக்கிய விழாவில் கௌரவிக்கப்படுவோர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**அல்ஹாஜ்.தம்பி லெப்பை- அப்துல் அஸீஸ் (நகைச்சுவை)**



இவர் 1946.02.12ம் திகதி காத்தான்குடியில் பிறந்தவர்.தனது ஆரம்பக்கல்வியை காத்தான்குடி மத்திய கல்லூரியில் கற்றுள்ளார்.தற்காலத்தில் காத்தநகர் மக்கள் அனைவராலும் அன்புடன் "அஸீஸ் மாமா" என்று அழைக்கப்படும் இவர் சிறந்த நகைச்சுவையாளர்.அதுமட்டுமன்றி டோலக், றபான், மவுத்ஓகன், மோர் சங்கு போன்ற ஏனைய இசைக்கருவிகளையும் இசைக்கும் வல்லமை கொண்டவர்.தானே பாட்டெழுதி தானே இசையமைத்து தக்க சந்தர்ப்பங்களுக்கேற்ப நகைச்சுவையாகப் பாடுவது இவரின் தனிச்சிறப்பு.

கடந்த 44 வருடங்களாக சாரதியாகத் தொழில் புரிந்துவரும் இவர் மாணவப்பருவத்திலேயே கலைத்துறையில் இருந்த ஆர்வம் காரணமாக டைரக்டர் பாலுமகேந்திராவின் தந்தை சிவபாலு ஆசிரியரின் பாசறையில் நகைச்சுவையாகப் பாடவும், நாடகங்களில் பேசி நடிக்கவும், பாடல்கள் இயற்றவும் பாடவுமாகக் கற்றுக்கொண்டுள்ளார்.

இவரது இக்கலைப்பயணத்தில் "காவன்னா மூனா" எனும் வில்லுப்பாட்டுத் தொகுப்பிலும் தனது திறமையை வெளிப்படுத்தியுள்ளதுடன் காத்தான்குடி FM மீடியா யூனிட்டினால் 87,88 ஆவது இறுவட்டுகளாக வெளியிடப்பட்ட "ரம்பரே ரம்பா" எனும் நகைச்சுவைத் தொகுப்பு, "ரம்பரே ரம்பா-2" எனும் விகடவிருந்து என்பவற்றைக் குறப்பிடலாம்.மேலும்"காணாமல் போன கலாசாரம்" எனும் குறுந் திரைப்படத்திலும் இவர் முக்கிய கதாபாத்திரத்தை வகித்துள்ளதுடன் இது வசந்தம் சஞ்சிகையினால் இறுவட்டுக்களாகவும் வெளியிட்டு வைக்கப்பட்டுள்ளன. "நகைச்சுவைத் திலகம்"எனும் கௌரவப்பட்டத்துடன் புறாக் நண்பர் கழகத்தினால் 1999ம் ஆண்டு "கலைத் தென்றல்" எனும் கௌரமும் இவருக்கு வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இப்பெரும் மூத்த கலைஞரை இவ்வருட(2014) பிரதேச கலாசார சாகித்திய விழாவின்போது இவரது கலைப்பணிகளுக்காக விருது வழங்கி கௌரவிப்பதில் காத்தான்குடிக் கலாசாரப் பேரவையானது பெருமகிழ்ச்சியடைகின்றது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காத்தான்குடி றஹீம் (கவிதை)



இவரது முழுப்பெயர் ஹபீப் முகம்மது- முகம்மது றஹீம்.இவர் 1960.01.20ம் திகதி காத்தான்குடி 6ல் பிறந்துள்ளதுடன் சிறந்த கவிஞரும் மௌலவியுமான இப்றாஹிம் (நத்வீ) அவர்களின் சகோதரர்.தனது இளமைக்காலத்திலேயே இலக்கியத்துறையில் ஆர்வம் பொண்ட இவர் கடந்த 24 வருடங்களாகத் தமிழ் மொழி ஆசிரியராகவும் கடமைபுரிகின்றார்.

1980 தொடக்கம் 1990 காலப்பகுதிகளில் மரபுக்கவிதை, புதுக்கவிதை என எழுதிக்கொண்டிருந்தவர் 1990 இன் பிறபாடு ஏற்பட்ட யுத்த சூழலிலை காரணமாக புதுக்கவிதைகள் புனையப்பட்டுள்ளன.அக்காலத்தில் சரிநிகர், தினகரன், வீரகேசரி ஆகிய பத்திரிகைகள் இவருக்குத் தக்க களமமைத்துக் கொடுத்துள்ளன.

இக்காலகட்டத்தில் இவரால் பிரசவிக்கப்பட்ட கவிதைகளின் தொகுப்பானது கடந்த வருடம் கிழக்கு மாகமண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தினால் அச்சிடப்பட்டு மட்டக்களப்பு மாவட்ட செயலகத்தினால் “எதுகை மோனை, சீரும் தளையுமென கட்டியிறுகிக் கொண்டிருந்தவர்” என்று தொடரும் த.மலர்ச்செல்வன் அவர்களின் முன்னுரையுடன் “சிவப்பு இரவுகள்” எனும் நாமத்துடன் வெளியிட்டு வைத்துள்ளனர்.

அத்துடன் மென்மையான குணமும் சிறந்த குரல் வளமும் மிக்க இவர் கவதைகளைப் புனைவதிலும் அவற்றைப் படிப்பதிலும் மட்டுமன்றி சிறந்த அறிவிப்பாளருமாக தன்னை அடையாளப்படுத்திக்கொண்டவர்.

இக்கலைஞரை இவ்வருட(2014) பிரதேச கலாசார சாகித்திய விழாவின்போது இவரது கலைப்பணிகளுக்காக விருது வழங்கி கௌரவிப்பதில் காத்தான்குடி கலாசாரப் பேரவையானது பெருமகிழ்ச்சியடைகின்றது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**ஜனாப். முஹம்மது இஸ்மாயில்- முஹம்மது முஸம்மில் (பாடல்)**



இவர் காத்தான்குடி முதலாம் குறிச்சியில் ஓய்வு பெற்ற அதிபர்,மர்ஹூம் S.H.M. இஸ்மாயில்- கலிமத்தும்மா தம்பதியினரின் புத்திரர்களில் ஒருவர்.

இவர் தனது ஆரம்பக்கல்வியை காத்தான்குடி மட்/அந்நாஸர் வித்தியாலயத்திலும் தொடர்ந்து மட்/சிவானந்தா வித்தியாலயத்திலும் கற்றுள்ளார்.அக்காலத்தில் அவரது தந்தையார் "பாட்டு இஸ்மாயில் வாத்தியார்" என்று அழைக்கப்பட்டதற்கு ஏற்ப அவரின் புதல்வாரன இவரும் சிறந்த குரல் வளமும் சங்கீத ஞானமும் பெற்றுக் காணப்படுகின்றார்.அதுமட்டுமன்றி அல்மனார் அறிவியல் கல்லூரியில் கடந்த 5 வருடங்களாக சிங்கள மொழிப் போதனாசிரியராகவும், நீதியமைச்சின் ஓர் அங்கீகாரம் பெற்ற மொழிபெயர்ப்பாளராகவும் திகழ்கின்றார்.

க.பொ.த.(சா.த) வரை சங்கீதத்தினை ஒரு பாடமாகக் கற்றுத்தேர்ந்த இவர் பாடல் இயற்றல், கவிதைகள், கவிதைகள் எழுதுதல் போன்றவற்றில் அதிக ஈடுபாடுடையவர்.1975 களில் வெளியான கையெழுத்துச் சஞ்சிகையான "பூந்துணர்" இல் ஒரு தொடர்கதையை எழுதியது முதல் இவரின் கலைப்பயணம் ஆரம்பமாகியுள்ளது. அத்துடன் 1980களில் இலங்கையின் புகழ்பூத்த கலைஞர் சிறீதர் பிச்சையப்பா, உக்குவளை கமால், மாத்தளை சுஹைல் ஆகியோருடன் மேடைக் கலைநிழ்ச்சியிலும், மட்டக்களப்பு நகர மண்டபத்திலும் நடந்த இசை நிகழ்ச்சியிலும் பங்கேற்றுள்ளார்.பல்வேறு பாடசாலைகளின் பொன் விழாப்பாடல்கள், வரவேற்புப் பாடல்கள் என்பன இவரால் இயற்றப்பட்டுள்ளதுடன் பிரதேச செயலாளர் அவர்களின் சேவையைப் பாராட்டிப் பாடப்பட்ட படல்களும் இறுவட்டுக்களாக வெளியிடப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

இக்கலைஞரை இவ்வருட(2014) பிரதேச கலாசார சாகித்திய விழாவின்போது இவரது கலைப்பணிகளுக்காக விருது வழங்கி கௌரவிப்பதில் காத்தான்குடி கலாசாரப் பேரவையானது பெருமகிழ்ச்சியடைகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கச்சிமுகம்மது- பதுர்தீன் (ஓவியம்)**



இவர் மர்ஹூம் கச்சிமுகம்மது,அவ்வாப்பிள்ளை தம்பதிகளுக்கு 1972.04.13 ம் திகதி பிறந்துள்ளார்.இவர் போற்றப்பட்ட ஓவியன்.தனது கல்வி கற்கும் காலத்திலேயே இவருடன் சேர்ந்தே ஓவியக்கலையும் வளர்ந்துள்ளது எனலாம்.இதனால் சகமாணவர்களாலும் நணபர்களாலும் ஆசிரியர்களாலும் பாராட்டினைப் பெற்றுக்கொண்ட

இவர் வறுமை காரணமாக தனது கல்வியைக் க.பொ.த(சா.த) வரை நிறுத்திவிட்டு ஓவியக்கலையைத் தொழிலாகக் கொண்டுள்ளார்.

ஓவியம்,கைப்பணிகள்வடிவமைப்பு, பெயின்டிங்,ஸ்டிக்கர்கள் தயாரித்தல் என்பவற்றில் சிறப்புத் தேர்ச்சியைப் பெற்றுள்ள இவர் காத்தான்குடியில் மட்டுமன்றி வெளிமாவட்டங்களிலுள்ள அரச நிறுவனங்கள்,தனியார் நிறுவனங்கள் , பாடசாலைகள் , வங்கிகள், சங்கங்கள்,கழகங்கள் என்பவற்றுக்கான பெயர்ப்பலகைகள், அறிவித்தற்பலகைகள் மற்றும் விளம்பரப்பலகைகள் என்பவற்றை வடிவமைத்துக் கொடுத்துப் பாராட்டினைப் பெற்றுள்ளார்.தேர்தல் காலங்களில் வடிவமைக்கப்பட்ட அரசியல் விளம்ரரங்களுக்களினூடாகத் தனது திறமையை வெளிப்படுத்தியதன் வாயிலாகப் பல பாராட்டுப்பதக்கங்களையும் பெற்றுக்கொண்டுள்ளார்.இதில் அதிமேதகு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஸ அவர்களுக்கான சிறப்பு ஓவியம் ஒன்றினை வரைந்து பரிசளித்ததன் வாயிலாக பொருளாதாரப் பிரதியமைச்சர்.அல்ஹாஜ்.MLAM.ஹிஸ்புல்லா அவர்களாலும்,ஜனாதிபதி அவர்களாலும் நேரடியாகப் பாராட்டினையும் வாழ்த்தினையும் பெற்றுக்கொண்டவர்.

இதற்கம் அப்பால் சமயம் சார்ந்த புனிதத்தலங்களின் படங்களை தத்ருபமாக வரைந்து சாதனை படைத்த இவரை 1999ம் ஆண்டு கரீப் நவாஸ் பௌண்டேசனால் “ஓவிய ஒளி” எனும் பட்டமும் விருதும் வழங்கி கௌரவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

கடந்த 35 ஆண்டுகளாக ஓவியத்துறையில் சிறந்து வியங்கும் இக்கலைஞரை இவ்வருட(2014) பிரதேச கலாசார சாகித்திய விழாவின்போது இவரது கலைப்பணிகளுக்காக விருது வழங்கி கௌரவிப்பதில் காத்தான்குடி கலாசாரப் பேரவையானது பெருமகிழ்ச்சியடைகின்றது.

Digitized by Noolaham Foundation.

## முகம்மது அப்துல் காதர் - முகம்மது ஜெலீஸ் (ஊடகம்)



இவர் மர்ஹூம் முகம்மது அப்துல் காதர், ஹவ்வா உம்மா தம்பதியினரின் இளைய புவல்வராக 1975.05.14 ம் திகதி பிறந்துள்ளார்.இவர் தனது ஆரம்பக்கல்வியை மட்/ மெத்தைப்பள்ளி வித்தியாலயத்திலும் உயர்கல்வியை காத்தான்குடி மத்திய கல்லூரியிலும் கற்றுள்ளார்.

ஆரம்ப காலத்தில் எழுத்துத் துறையில் ஆர்வம் கொண்டிருந்த இவர் தேசிய இளைஞர்மன்ற தேசிய ஒன்றிணைப்புத் திட்டமிடல் பிரிவினால் வெளியிடப்பட்ட "யூத்" சஞ்சிகைக்கு "மரணம்" எனும் தலைப்பிலான ஆக்கத்தினை எழுதியுள்ளார். 2003ம் ஆண்டு சிறீ லங்கா மீடியா போரத்தின் அனுசரணையில் நடாத்தப்பட்ட ஊடகம் தொடர்பிலான பயிற்சிப்பட்டறையிலும், கிழக்குப் பல்கலைக் கழகத்தின் இதழியல் தொடர்பான கற்கை நெறியினையும் பூர்த்தி செய்துள்ள இவர் அச்சு ஊடகங்களின் ஊடகவியலாளரானார்.தற்போது 2013ம் ஆண்டு தொடக்கம் www.newsbest.net என்ற இணைய தளத்தின் முகாமைத்துவப் பணிப்பாளராகவும் செயற்பட்டு வருகின்றார்.

2005இல் உள்ளூர் பத்திரிகைகளின் வாயிலாக தன்னை அறிமுகப்படுத்திக்கொண்டு 2006ம் ஆண்டு "இன்டர் நியூஸ்" என்ற சர்வதேச இலத்தரனியல் ஊடகத்தின் தன்னை இணைத்துக்கொண்டு இலங்கைத் தீவிலுள்ள ஒன்பது மாகாணங்களிலுமுள்ள மக்களின் பல்வேறு பிரச்சினைகளுக்குத் தீர்வினைப் பெற்றுக் கொடுத்துள்ளதுள்ளமைக்காக 2008ம் ஆண்டு ஐந்து ஊடக அமைப்புகள் இணைந்து வழங்கிய சகிப்புத்தன்மைக்கான கிழக்கு மாகாணத்திற்கான விருதும், அதே ஆண்டு மட்டக்களப்பு ஊடக அமைப்பினால் "இளம் ஊடகவியலாளர்" எனும் விருதும் வழங்கி கௌரவிக்கப்பட்டுள்ளார்.

மேலும் காத்தான்குடியின் சமூக வானொலியான "றிஸாலா FM"வார உரைகல்,பெண்களுக்கும் வலுவூட்டலுக்குமான அமைப்பு நிஜம் சங்சிகை என்பனற்றினால் சிறந்த ஊடகவியலாளராகவும் அகில இலங்கை நட்புறவு ஒன்றியத்தினால் 2012ம் ஆண்டு "சாமசிறீ தேச சக்தி" என்ற கௌரவ விருதினையும் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.தற்போது விடிவெள்ளி, மெட்றோ, இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தபானம், பிறை FM,வெற்றி FM ஆகிய பல்வேறு ஊடகங்களில் சுதந்திர ஊடகவியலாளராகவும் செயற்படுகின்றார்.

இக்கலைஞரை இவ்வருட(2014) பிரதேச கலாசார சாகித்திய விழாவின்போது இவரது கலைப்பணிகளுக்காக விருது வழங்கி கௌரவிப்பதில் காத்தான்குடி கலாசாரப் பேரவையானது பெருமகிழ்ச்சியடைகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**முகம்மது சாலி- முகம்மது முகைதீன் (இலக்கியம்)**



இவர் புதிய காத்தான்குடி 03 இல் 1979.06.07ம் திகதி முகம்மது சாலி(நாகூரார்),ஹிதாயத்தும்மா தம்பதியினரின் புதல்வர்.தனது ஆரம்பக் கல்வியை மட்/ அல்-அமீன் வித்தியாலயம், மட்/காத்தான்குடி மத்திய கல்லூரியிலும் இடைநிலைக்கல்வியை திருகொணமலை ஸாஹிறா கல்லூரியிலும் உயர்கல்வியை இந்துக்கல்லூரியிலும் கற்றுள்ளார்.தற்போது தென்னைப் பயிர்ச்செய்கை சபையில் ஆய்வு கூடத் தொழில் நுட்பவியலாளராகப் பணிபுரிகின்றார்.

'காத்தநகர் மகைதீன் சாலி' எனும் புனைப்பெயரில் 2000ம் ஆண்டுகளில் இரந்து கவிதையாக்கம், சிறுகதையாக்கம் என்பவற்றில் தனது ஆற்றல்களை வெளிப்படுத்திவருவதுடன் தேசிய பத்திரிகைகளிலும் காத்தான்குடி இன்போ போன்ற இணையத்தளங்களிலும் வெளியிட்டு வருகின்றார்.மேலும் பல மேடை நிகழ்வுகளிலும் கவிதைகளும் படித்துள்ளார்.

2011ம் ஆண்டு இவரால் எழுதப்பட்ட "வாழ்தல்மீதான வன்முறைகள்"எனும் தனது கன்னிச் சிறுகதை நூலுக்கு "கொடகே தேசிய விருது வழங்கப்பட்டுள்ளதுடன் 2001ம் ஆண்டு அஸ்ரப் நினைவு கவிதைப் போட்டியில் தேசிய ரீதியில் 2ம் இடம், 2010ம் ஆண்டு உழைக்கும் மக்கள் கலைவிழா சிறுகதைப் போட்டியில் தேசிய ரீதியில் முதலிடம்,2011ம் ஆண்டு 'வியர்வையின் ஓவியம்' கவிதைப் போட்டியில் 2ம் இடம், சிறுகதைப் போட்டியில் சிறப்புப் பரிசு 2012 குருமண்வெளி அருட்செல்வநாயகம் சிறுகதைப் போட்டியில் தேசிய ரீதியில் முதலிடம் போன்ற தேசிய ரீதியிலான விருதுகளையும் பரிசில்களையும் வெற்றிகொண்டவர்.

2002,2011ம் ஆண்டுகளில் நடைபெந்ந இஸ்லாமிய தமிழ் இலக்கழய மாநாடுகளில் பேராளராகவும் கலந்து கொண்டுள்ள இவர் விரைவில் கவிதை மற்றும் சிறுகதை நூட்களையும் வெளியிடவுள்ளார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**ஜனாப்.முகம்மது இப்றாகிம்- முகம்மது கமால்தீன் (அறிவிப்பு)**



இவர் காத்தான்குடி 01ம் குறிச்சியைச் சேர்ந்த முகம்மது இப்றாகிம்,கதீஜா உம்மா தமபதிகளின் புத்திரர்.தனது ஆரம்பக்கல்வியை மட/ பதுறியா, ஹிழுறியா வித்தியாலயங்களிலும் உயர் கல்வியை காத்தான்குடி மத்திய கல்லூரியிலும் கற்றுள்ளார்.

இளமைப்பருவத்திலேயே கலை இலக்கியத்துறையில் மிகுந்த ஈடுபாடு கொண்ட இவர் நடிப்புத்துறையிலும் தனது திறமைகளைப் பல மேடை நாடகங்களில் வெளிப்படுத்தியுள்ளார்.அத்துடன் நல்ல குரல் வளமள்ள இவர் காத்தான்குடியின் முதல் வானொலியான 'றிஸாலா FM' இல் பகுதிநேர அறிவிப்பாளராகவும் இணைந்து செயற்பட்டுள்ளதுடன் கலை கலாசார நிகழ்வுகளின் போதும் மேடை அறிவிப்பாளராகவும் பங்கு கொண்டு நல்லனுபவம் பெற்றவர். இஸ்லாமிய மனங்களை மட்டுமன்றி ஏனைய மக்களாலும் பாராட்டுப் பெற்று விளங்குகின்றார்.முதலாவது தமிழ்மொழி மூலமான இஸ்லாமியத் தொலைக்காட்சியின் மட்டக்களப்பு மாவட்ட பிராந்திய முகாமையாளராகவும் பணியாற்றுகின்றார்.

சமூக ஈடுபாடும் நற்பண்புகளும் நிறைந்த இவர்சமூகப் பற்றுடன் சமயம் சார்ந்த மக்கட் பண்புகளுடன் செயற்பட்டு வரும் இவர் காத்தான்குடிப் பிரதேச செயலகத்தில அரச முகாமைத்துவ உதவியாளராகவும் சேவையாற்றி வருகின்றார்.தொழிற் கல்வியான 'தொழில் நுட்ப முகாமைத்துவத்துறை' யிலும் வலைப்பின்னல் பொறியியல் துறையிலும் தேர்ச்சி பெற்றுள்ளார்.

இவ்விளங்கலைஞரை இவ்வருட (2014) பிரதேச கலாசார சாகித்திய விழாவின்போது விருது வழங்கி கௌரவிப்பதில் காத்தான்குடி கலாசாரப் பேரவையானது பெருமகிழ்ச்சியடைகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இல்மி அஹமட் லெவ்வை (கவிதை)



புதிய காத்தான்குடி சேர்ந்த கவிஞர் இல்மி அஹமட் லெவ்வை முன்னாள் பட்டினாட்சி மன்ற தவிசாளர் எம்.ஐ.எம் காசிம் ஹாஜியார் அவர்களின் பேரனும் ,3ம் வாட் எம் எல் அஹமது லெவ்வையின் மகனுமான இவர் 1987 களிலிருந்து இலக்கியத்துறையில் ஈடுபட்டுவருகிறார்.

வேதனையில் பாடுவேன் என்ற மரபுக்கவிதை தினகரனில் 1987 ஆண்டு பிரசுரமாகி இருந்தது

தொடர்ந்து தினகரன்வாரமஞ்சரி, சிந்தாமணி, நவமணி, கிழக்குமண்,மற்றும் தற்கால பிரசித்தமான இணையத்தளங்களிலும் இவரினது கவிதைகள் பிரசுரமாகியுள்ளது.

இலக்கிய மேடைகளில் இவரால் பாடப்பட்ட வரும் கவிதைகள் பாராட்டுக்களை பெற்று வருவதும் குறிப்பிடத்தக்கதாகும்.

கவிதை போட்டிகளில் பங்குபற்றி பரிசில்கள் பெற்றுள்ள இவருக்கு பொற்கிளியும் கிடைக்கப்பெற்றள்ளது.

மலேசியாவில் நடைபெற்ற இஸ்லாமியத்தமிழ் இலக்கிய மாநாடு, இந்திய காயல்பட்டண இலக்கிய மாநாடுகளிலும் பங்கேற்றுள்ளார்
நெருப்பு நிழல் எனும் கவிதைத் தொகுதி விரைவில் வெளிவரவுள்ளதும் குறிப்பிடத்தக்கதாகும்.

இவற்றுக்கப்பால்
நீண்டகாலமாக சமூகப்பணியில் ஆர்வலரான இவர்
காத்தான்குடி சமூமதிப்பிட்டுக்கான அமைப்பின் தலைவர்
காத்தான்குடி இஸ்லாமிய இலக்கியக்கழகத்தின் பொதுச்செயலாளர்,
புதிய காத்தான்குடி பெரிய ஜும்அப்பள்ளிவாயலின் நம்பிக்கையாளர்
என்று பல்வேறு சமூசேவை நிறுவனங்களில் இணைந்து சமூகப்பணியாற்றியும் வருகிறார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விழாவிற்கு அனுசரனை வழங்கிய நிறுவனங்களும் திவிநெகும சங்கங்களும்.

1. பள்ளிவாயல்கள் முஸ்லிம் நிறுவனங்களின் சம்மேளனம்
2. தலிபான், விஷ்டம் - 167C
3. தீன்குறோஸ் - 162A
4. சபா - 167A
5. முஷர்ரப், சபா - 167B
6. சபா - 167B
7. புலவனார் - 167E
8. ஜன்னத் - 162
9. முகைதீன் - 162
10. ஆஷா - 164A
11. மௌலானா, உமர்சரீப் - 166A
12. றீமா ட்ரவல்ஸ்

10 MAY 2015



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றி நவிலல்

ஸம்ஸம் சிறப்பு மலருக்கு ஆக்கங்களை தந்துதவிய கலைஞர்கள்,1001 முஸ்லிம்களின் கண்டுபிடிப்புக்கள் எனும் ஆக்கத்தை ஆங்கில மூலத்திலிருந்து இலகு தமிழில் மொழி பெயர்த்து வழங்கிய Dr.ஜனாபா ஜெலீலாமுஸம்மில்,ஜனாப்MM.பைஸல்,அஷ்ஷெய்க்SMK.முகமட்(நளீமி) அபிவிருத்தி இணைப்பாளர், அஷ்ஷெய்க் PMM.பெறோஸ்(நளீமி)அபிவிருத்தி உத்தியோகத்தர் ஆகியோருக்கும் ஆக்கங்களை வழங்கிய மாணவ மாணவிகளுக்கும் எங்களின் மனமார்ந்த நன்றிகளை தெரிவித்துக் கொள்கின்றோம்.

கலாசாரப் பேரவை,
பிரதேச செயலகம்,
காத்தான்குடி

University of Peradeniya
18 MAY 2015

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# இலங்கையில் கண்டெடுக்கப்பட்ட அரபு சிலாசனங்கள்



1990ம் ஆண்டு ... [illegible] ... Ontenberg Point No.1 ... [illegible] ... Chappel Stall ... [illegible]



[illegible] ... ஹிஜ்ரி 138 என எழுதப்பட்டுள்ளது. [illegible]




இக் கல்வெட்டானது 1911ம் ஆண்டு ... [illegible] ... பாரசீகம், சீனம், தமிழ் ஆகிய மூன்று மொழிகளினால் எழுதப்பட்டுள்ள ... [illegible] ... (1371 - 1405) ... [illegible]

# உலக முஸ்லிம்களின் 1001 கண்டு பிடிப்புகள்



[illegible]



[illegible] ... (Camshaft) ... (Water Wheel) தோற்றம்



[illegible] Ibn Shawka Al Bagdadi [illegible] (Astrolaby) [illegible]

# 'உரும சட்டஹன்' அரச ஓவிய பயிற்சிப் பட்டறை







அட்டைப்பட வடிவமைப்பு : AGM. பஹ்மி (அபிவிருத்தி உத்தியோகத்தர், பிரதேச செயலகம், காத்தான்குடி)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org